# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume -10
Issue-5

மே - 2017 (ஷாபான் - 1438)

விலை ரூ. 20/-




## இந்தியா மதச்சார்பற்ற நாடல்ல?

உச்ச நீதிமன்றத்தின் இந்துத்துவா தீர்ப்புகள்

## 16 ஆண்டுகள் சிறைவாசத்திற்கு பின் விடுதலையான முஸ்லிம் இளைஞர்கள்




## மோடியின் ஆட்சியில் தமிழக விவசாயிகள்?

## திப்பு சுல்தான் பொய்யும், மெய்யும்

بسم الله الرحمن الرحيم

"

முஃமீன்களே!
நீதியை, நிலை
நாட்டுவதற்காக
அல்லாஹ்வுக்கு நீங்கள்
உறுதியான சாட்சியாக
இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார்
மீதும், நீங்கள் கொண்டுள்ள
வெறுப்பு நீதி செய்யாமலிருக்க
உங்களைத் தூண்ட வேண்டாம்.
நீதி செய்யுங்கள், இதுவே
பயபக்திக்கு மிக
நெருக்கமாகும்.
அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் ;
நிச்சயமாக அல்லாஹ் நீங்கள்
செய்பவற்றையெல்லாம் (நன்கு)
அறிந்தவனாக இருக்கின்றான்
(அல்குர்ஆன் - 5:8)

"


இந்தியா மதச்சார்பற்ற நாடல்ல.?
உச்ச நீதிமன்றத்தின் இந்துத்துவ தீர்ப்புகள் - 7

16 ஆண்டுகள் சிறை வாசத்திற்க்குபின்
விடுதலையான முஸ்லிம் இளைஞர்கள் - 22

மோடியின் ஆட்சியில் தமிழக விவசாயிகள் - 24

எது முதலில் ? - 29

முஸ்லிம்களின் வீழ்ச்சியால்
உலகம் இழந்ததென்ன ? - 34

கற்காலம் ஒரு வரலாற்றுப் பொய் - 39

சமூக நலனின் பெண்கள் - 43

திப்பு சுல்தான் சிறப்புக் கட்டுரை - 46

புத்தாநத்தம் இத்துத்துவ வெறி - 52

பலியாடுகளால்கொலைசெய்யப்பட்டபலியாடு - 54

ஹிந்தி திணிப்பு - 56

முகமது அலீ ஜின்னா ஷஹீத் நூல் வெளியீடு - 60



மே - 2017

# வைகறை வெளிச்சம்

ஷாபான் - 1438



ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது,** M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம். இலியாஸ் ரியாஜி,** M.A.,



தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



http:/www.facebook.com/vaigarivelicham

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

# சீனிவாஸ் கட்சி போஸ்ட்சா என்பவரைக் கொலை செய்தது யார்..?

சீனிவாஸ் கட்சி போஸ்ட்சா என்பவர் நம் நாட்டின் ஆந்திர மாநிலத்தைச் சார்ந்தவர். இவர் அமெரிக்காவில் இன்ஜீனியராக – (பொறியியல் வல்லுநராகப்) பணியாற்றி வந்தவர். இவருடைய வயது–32.

கடந்த பிப்ரவரி 22–ஆம் நாள் இவரை அமெரிக்காவைச் சார்ந்த அதிலும் அமரிக்க கப்பல்பனையைச் சார்ந்த 'ஆதம் பிரின்டோன்' என்பவன் இரவு 7.15 மணிக்கு சுட்டுக் கொன்று விட்டான்.

சுடும்போது "Get out of our contry" "எங்கள் நாட்டை விட்டு வெளியேறு" எனச் சொல்லிக் கொண்டே சுட்டிருக்கின்றான்.

சீனிவாஸ் கட்சி போஸ்ட்சாவுடன் அவருடைய நண்பர் (ஆந்திரா) ஒருவரும் சுடப்பட்டார். ஆனால் அவர் உயிர் பிழைத்துக் கொண்டார். இப்படிக் கொலை செய்வதை Hate Crime "வெறுப்புக் கொலை" என்கின்றார்கள் இது அமெரிக்காவில் எப்போதாவது நடக்கும் ஓர் நிகழ்வு அல்ல.

மாறாக அவை தினம், தினம் நடக்கும் நிகழ்வுகள்தாம்.

கறுப்பு நிறத்தைக் கொண்ட "ஒபாமா" அமெரிக்காவின் அதிபராக இருக்கும்போதே கறுப்பு நிறத்தைக் கொண்டவர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். பட்டப் பகலில் அமெரிக்காவின் வீதிகளில். "என் மகனாகவே இருந்தாலும் இதுதான் நடந்திருக்கும்" என அங்கலாயிப்பதைத் தவிர அவரால் எதுவும் செய்திட இயலவில்லை.

அமெரிக்காவின் புதிய அதிபர் "டொனால்ட் டிரம்ப்", அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய இடங்களிலெல்லாம் இனப்படுகொலைச் செய்து கொண்டிருக்கும் "குளு கிளக்ஸ் கிளான்" "Klu Klux Klan" என்ற தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர். இவருடைய தந்தையும் இதே அமைப்பைச் சார்ந்தவர்.

இந்த அமைப்பு "Whitemen's Supermacy" என்ற "வெள்ளையர்களே உயர்ந்தவர்கள்", அல்லாதவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள் என்ற சிந்தனையை தீவிரமாகச் செயல்படுத்தும் அமைப்பு. இவர்கள் இதற்காக செய்துள்ள கொலைகள் ஏராளம்...! ஏராளம்...! இவர்கள் அமெரிக்காவின் இராணுவத்திலும் ஊடுருவி உள்ளனர். சுருக்கமாச் சொன்னால் நமது நாட்டிலிருக்கும் இந்துத்துவா தீவிரவாத அமைப்புகளைப் போன்ற ஒரு பாசிச அமைப்பு.

குளுகிளக்ஸ்கிளானின் உறுப்பினரான இவர் "டொனால்ட் டிரம்ப்" ஆட்சிக்கு வந்ததும் பல கொலைக் குழுக்கள், அமெரிக்காவின் வீதிகளில் இறங்கி கொலைகளைச் செய்திட தொடங்கின. இதனால் "Hate Crimes" என்ற இனப்படுகொலைகள் ஒவ்வொரு நாளும் 10 முதல் 20 எனத் தொடர்ந்தன.

"டொனால்ட் டிரம்ப்" பதவி ஏற்றவுடன், அதாவது அடுத்த நாள், இந்தக் கொலைகள் 200 மனித உயிர்கள் என்ற இலக்கை எட்டின. டொனால்ட் டிரம்ப் பதவி ஏற்று அடுத்து வந்த 9 நாட்களுக்குள் கறுப்பர்கள், இந்தியர்கள், முஸ்லிம்கள், அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்தவர்கள் என 867 பேர் கொலை செய்யப்பட்டார்கள்.

இந்தக் கொலைகளைச் செய்தவர்கள் ஒவ்வொரு கொலையின்போதும் "டொனால்ட்

டிரம்ப்"-ன் பெயரைச் சொல்லியே கொலை செய்தார்கள். (Source : Ananlysis Update : 28/4/2017)

அமெரிக்காவின் காவல் துறையில் ஓர் உளவுத்துறை, இந்த உளவுத்துறையின் தலைவர் Robert - Boyce : ராபர்ட் பைசீ (Chief of Detectives, Robert Boyce) என்பவர் டொனால்ட் டிரம்ப்பின் வெற்றிக்குப் பிறகு (Hate Crime) என்ற வெறுப்பு கொலைக்கள் 115% நூற்றிப் பதினைந்து விழுக்காடுகள் அதிகரித்துள்ளன எனக் கூறுகின்றார்.

கொலைகள் இனவாதம் (Racist) அமெரிக் காவில் குடிபுகுந்தோர்களுக்கு எதிரான உணர்வு மதம், மற்றும் கலாச்சார காரணங்கள் இவற்றால் நடக்கின்றன.

ஆக, இந்தியாவில் மோடி பிரதமர் ஆனபிறகு தலித்கள், முஸ்லிம்கள், இதர சிறுபான்மையினர் இவர்களெல்லாம் மிகவும் அதிகமாக கொலை செய்யப்படுவதைப் போல், தினம், தினம் கொலை செய்யப் பட்டு வருவதைப்போல் அமெரிக்காவில் "டொனால்ட் டிரம்ப்" பதவி ஏற்றவுடன் கொலைகள் நடந்தேறுகின்றன.

இப்படி மக்களிடையே இல்லாத பொல்லாத துவேஷங்கள் - வெறுப்புகள் - இவற்றைப் பரப்பி, கொலைகளைச் செய்து அதிகாரத்தை கைப்படுத்திடும் ஈனச் செயலாக ஜனநாயக அரசியல் அமெரிக்காவிலும் இந்தி யாவிலும் வளர்ந்துள்ளது. கொலைகாரர் களையே மக்கள் பிரதிநிதிகள என அறற்றும் அவலம்.

மனிதர்களை மனிதர்களாக மதித்து அவர்கள் உயிரைப் பாதுகாக்கும் ஆட்சி ஒன்று முன்னெப்போதையும் விட நமக்கு இப்போது அதிகமாகத் தேவைப்படு கின்றது.

இந்த வகையில் ஒன்றை நாம் உரக்க முழங்கலாம். மனித உயிர்களின் மாண்புகளை உணர்ந்த ஒரே மார்க்கம் இஸ்லாம்தான் இதற்கு அதன் பென்னம் பெரிய வரலாறே சாட்சி!.

இஸ்லாத்தின் வழிகாட்டுதல்கள், இல்லாத பொல்லாத காரணங்களைச் சொல்லி மக்களை கொன்றொழிக்கும் ஈனச் செயலை அழிவின் செயலை தடுத்தது.

இஸ்லாம் தகுந்த காரணமின்றி மனித உரிமைகளுக்கோ, மனித உயிர்களுக்கோ எந்த ஊறும் விழைவத்திடக்கூடாது எனக் கூறுகின்றது.

இதற்குப் பாதைப் போட்டுப் பறைசாற்றும் இறைவனின் பிரகடனம் இதோ...

"நிச்சயமாக எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தைத் தடுப்பதற்காகவோ அன்றி, மற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன்போலாவான். மேலும்எவரொருவர் ஓர் ஆத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார்" என இஸ்ராயிலின் சந்ததியின ருக்கு விதித்தோம். மேலும் நம் தூதர் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தார்கள். இதன் பின்னரும் அவர்களில் பெரும்பாலோர் பூமியில் வரம்பு கடந்தவர்களாகவே இருக்கின்றனர்" (அல்குர்ஆன் 5:32)

யூதர்கள் ஒரு காலத்தில் இந்த உலகத்தில் ஆதிக்கம் செலுத்துபவர்களாக இருந்தார்கள். அப்போது அவர்கள் தங்கள் உயிர்களை மட்டுமே உயர்வாகக் கருதினார்கள். அதனால் தங்களுக்கென ஒரு விதியை வகுத்துக் கொண்டார்கள். அந்த விதி "யூதன் ஒருவனைக் கொலை செய்தவன் மொத்த மனித குலத்தையும் கொலை செய்தவனாவான்" யூதன் அல்லாதவனைக் கொலை செய்தவன் மனிதர்கள் அனைவரையும் கொலை செய்தவர்கள் போலாக மாட்டான்" யூதர்கள் அன்று இயற்றி வைத்திருந்த இன்னொரு விதி யூதன் ஒருவனின் உயிரைக் காப்பாற்றியவன் மொத்தயூதசமுதாயத்தையும்காப்பாற்றியவன் போலாவான்.

இதனால் யூதர்கள், யூதன் அல்லாத ஓர் அப்பாவியைக் கொலை செய்வதை பெருங் குற்றமாக எடுத்துக்கொள்ளவில்லை. இதனால் யூதர்கள் அல்லாத அப்பாவிகளைக் கொலை செய்வதைத் தாராளமாக அனுமதித்தார்கள், கொலை செய்தார்கள். இந்த அநீதியை – அப்பாவிகளைக் கொலை செய்வதை, இன்றளவும் தொடர்ந்து வருகின்றார்கள்.

இதையும் நாம் மேலே எடுத்துக்காட்டிய இறை வசனத்தில் இறைவன் சொல்லிக் காட்டுகின்றான். ஆனால் அல்லாஹ் மனித உயிர்கள் அனைத்தையும் ஒன்று போலவே நேசித்தான். ஏனெனில் அவனே அனை வரையும் படைத்தவன்.

யூதர்களுக்கும் இந்த உலகில் வாழும் அத்தனை மக்களுக்கும் அழுத்தந்திருத்தமாக ஒரு விதியை வகுத்தளித்தான். அது,

*“அப்பாவி ஒருவனை (இறைவன் சொன்ன இரண்டு காரணங்களில் ஒன்றுக்காக அல்லாமல்) கொலை செய்தவன் மொத்த மனித சமுதாயத்தையும் கொலை செய்தவன் போலாவான். அந்தக் கொலையைச் செய்பவர் முஸ்லிமாக இருந்தாலும் சரி, இதர மத நம்பிக்கையைக் கொண்டவராக இருந்தாலும் சரி. மத நம்பிக்கை இல்லாதவராக இருந்தாலும் சரி!*

*அதேபோல் ஓர் உயிரைக் காப்பாற்றியவன், ஒட்டுமொத்த மனித சமுதாயத்தையும் காப்பாற்றியவன் போலாவன்,* இதிலும் ஜாதி, மதம், நிலம், நிறம் என்ற பேதங்கள் இல்லை.

வான்மறையின் இந்த வழிகாட்டுதல் மனித உயிர்களின் மகத்துவத்தைப் பறை சாற்றுகின்றது.

மனித உயிர்களைக் காப்பதற்கும், வாழ வைப்பதற்கும் இந்த வழிகாட்டுதல் மிகவும் முகியமாகும். ஒவ்வொரு மனிதனும் சக மனிதரின் உயிரைப் புனிதமானதாகக் கருதிட வேண்டும். அதனை எல்லா விதத்திலும் பாதுகாத்திட முயற்சி செய்திட வேண்டும்.

அப்பாவி ஒருவனைக் கொலை செய்தவன் ஒரு மிருகம், மனித உயிர்களின் மேல் எந்தப் பற்றும் இல்லாதவன். இதனால் அவன் மனித உயிர்களை மாய்க்கின்றான். இதனால் மொத்த மனித இனத்தின் ஆழிவையும் தொடங்கி வைத் ததற்கான தண்டனைப் பெற்றாக வேண்டும். ஏனெனில் இத்தவையவன் மனித இனத்தை அழித்தே விடுவான்.

மாறாக, மனித உயிர்களை மதிப்பவன், பாதுகாப்பவன், மனிதர்கள் அனைவரையும் வாழ வைக்கும் மாண்புகளை வளர்ப்பதால் அவன் எல்லா உயிர்களையும் பாதுகாக்கின் றான். அதற்கான நற்கூலியை இறைவனிடம் பெறுவான்.

இந்த மாண்புகள், இந்த வழிகாட்டுதல்கள், இன்று “டிரம்ப்பின்” தலைமையிலான அமெரிக்காவுக்கும் இனப்படுகொலை புகழ் மோடியை பிரதமாகக் கொண்ட இந்தியாவுக்கும் மிகவும் அதிகமாகத் தேவைப்படுகின்றது.

இறைமறையாம் திருக்குர்ஆனின் இந்த வழிகாட்டுதலைப் போல் எல்ல வழிகாட்டு தல்களும் இந்த இரு கொலைகார ஆட்சியாளர் களின் நாட்டுக்கு அவசியமாகத் தேவைப் படுகின்றன. தினம், தினம் விழும் மனிதப் பிணங்களைத் தடுத்திட வான்மறையின் இந்த வழிகாட்டுதல்கள் அனைத்தும் இந்த நாடுகளில் நிலை நாட்டப்படும்போதுதான் இந்த இரு நாட்டிலும் வாழும் எல்லோருக்கும், எல்லா இனங்களுக்கும், வேற்று நாட்டிலி ருந்து குடியேறியவர்களுக்கும் பாதுகாப்பும் நீதியும் நிம்மதியும் கிடைக்கும்.

**இந்த மார்க்கம்**
**இந்த நாடுகளில்**
**நிலை நாட்டுப்படும் வரை**
**ஒய்வுக்கு ஓய்வு தந்து**
**உயிர் உள்ளவரை (?) உழைப்போம்.**
**இன்ஷா அல்லாஹ்.**

**– எம்.ஜி.எம்.**



# இந்தியா மதச்சார்பற்ற நாடல்ல?

## உச்ச நீதிமன்றத்தின் இந்துத்துவா தீர்ப்புகள்


மூத்த வழக்கறிஞர் A.G. நூரானி அவர்கள் உச்ச நீதிமன்றத்தின் வருத்தத்திற்குரிய துரோகங்கள் என்றக் கட்டுரையில் ( பிராண்ட் லைன் என்ற பத்திரிகையில் ) இப்படிக் கூறுகின்றார்...

உச்ச நீதிமன்றத்தின் முன்னால் இரண்டு முக்கியப் பிரச்சனைகள் 20 ஆண்டுகளாக தீர்ப்பிற்காக காத்திருந்தன.

ஒன்று "இந்துத்துவா" என்ற முழக்கத்தை தேர்தல் பிரச்சாரங்களில் பயன்படுத்தலாமா ? என்பது இந்தப் பிரச்சினைக்கு தீர்வும், தீர்ப்பும் 20 ஆண்டுகளாக உச்ச நீதிமன்றத்திற்கு முன்னால் இருந்து வருகின்றது.

உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்க மறுக்கின்றது. இதன்மூலம் இந்துத்துவாவிற்கு மிகப்பெரிய தொரு சேவையை செய்து வருகின்றது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்குக் காத்திருந்த இரண்டாவது வழக்கு வாக்காளர்களிடம் இனம், ஜாதி இவற்றின் பெயரால் வாக்கு கேட்கலாமா? என்பது வெட்கப்படத்தக்க அளவில் நீதிபதிகள் முதலாவது வழக்குக்கு தீர்ப்பு வழங்காமல் விட்டு விட்டார்கள். கேள்விக்குப் பதில் சொல்லாமல் தராமல் தப்பித்து விட்டார்கள்.



வழக்கறிஞர் A.G. நூரானி

இந்துத்துவாவின் பெயரால் ஓட்டுக் கேட்கலாமா? என்ற இந்தக் கேள்வி எவ்வளவு முக்கியமானது. இதில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எவ்வளவு பெரிய அநீதியைச் செய்துவிட்டார்கள் என்பதை நாம் அறிந்திட வேண்டும் என்றால் இந்துத்துவா பற்றி நமது உச்ச நீதிமன்றம் 1995 முதலே என்ன நிலைப்பாட்டை எடுத்திருக் கின்றது என்பதை அறிந்திட வேண்டும்.

அத்தோடு விஷம் நிறைந்த இந்துத்துவா கொள்கை இந்த நாட்டுக்கு எத்தகையதொரு துரோகத்தைச் செய்திருக்கின்றது என்பதையும் எண்ணிப்பார்த்திட வேண்டும். அப்போது மட்டுமே இந்துத்துவா என்ற விஷத்தை வளர விட்டதின் மூலம் உச்ச நீதிமன்றம் செய்தது எவ்வளவு பெரிய அநீதி என்பதை அறிந்திட இயலும்.

### இந்துத்துவா வேரும் வளர்ச்சியும்

முதன் முதலில் நாம் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். இந்துத்துவா என்பது இந்து மதமல்ல. இந்த இரண்டையும் நாம் ஒரே பொருளில் எடுத்துக்கொள்ளக் கூடாது.

இந்துத்துவா என்பது V.D. சாவர்கர் என்பவரால் புதிதாக 1923 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு பாசிசக் கொள்கை.

V.D.சாவர்கர் எழுதிய "இந்துத்துவா" என்ற நூலில்தான் இந்தக் கொள்கை துளிர்விட்டது. அவர் சிறையிலிருந்தபோதுதான் இந்த நூலை எழுதினார்.

இந்த நூல் சிறையிலிருந்து கடத்திவரப்பட்டு வெளியிடப்பட்டது. இந்த நூலை வி.வி. ஹெல்கார் என்ற நாக்பூரைச் சார்ந்தவர் 1923 ஆம் ஆண்டு வெளியிட்டார். அப்போது எழுதியவரின் பெயர் "ஒரு மராத்தி" (மனிதன்) என்று மட்டுமே குறிப்பிட்டார்கள்.

இந்த நூலின் இரண்டாம் பதிப்பு 1942–ல் தான் வெளிவந்தது. அப்போதுதான் V.D.சாவர்கர் எழுதியது என்று எழுதியவரின் உண்மையான பெயரை வெளியிட்டார்கள். இந்த இரண்டாம் பதிப்பை எஸ்.எஸ்.சாவர்கர் என்பவர். வீர். சாவர்கர் பிரகாசம் என்ற வெளியீட்டு நிறுவனத் திற்காக, அவருடைய மும்மை வீடான சவார்கர் சதான் முகவரியில் வெளியிட்டார். (வீர் சவார் கர்ஆங்கிலேயர்களால்சிறைப்பிடிக்கப்பட்டவர். பின்னர் அவர்களிடம் மன்னிப்புக்கேட்டு மன்றாடி சிறையிலிருந்து வெளியே வந்தார்.

V.D.சாவர்கர் என்பவர் ஒரு நாத்திகர் : அவர் இந்து மதம் உட்பட எந்த மதத்தின் மீதும் நம்பிக்கை இல்லாதவர். இந்துக்கள் ஒரு "சமுதாயம்" என்பதிலேதான் அவர் நம்பிக்கை உள்ளவராக இருந்தார். (இஃதோர் வகுப்புவாத சிந்தனையே அல்லாமல் வேறல்ல அவர்தான் 1937 முதலே இரண்டு தேசம், இரண்டு நாடு என்ற சிந்தனையை இந்தியாவில் முதன் முதலில் விதித்தார். ஜின்னாவுக்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே வெளிப்படையாக இரண்டு நாடு கொள்கையைப் பரப்பியவர் இவர்தான். (இவர்தான் இந்திய பிரிவினையின் தந்தை) Front Line : Feb-3, 2017

உண்மையில் 'இந்து மதம்' என்பது பழமை யானது. இப்போது இந்துத்துவ வாதிகள் இந்து மதம் எனச் சொல்பவற்றுக்கு மிகவும் அந்நிய மானது.

> "உச்ச நீதிமன்றம், மும்பை நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறுத்தி வைக்காமலிருந்திருந்தால் இந்த நாட்டில் மத துவேஷங்கள் வளர்ந்திருக்காது. நாடு மதவாதிகளின், பாசிஸ்ட்டுகளின் கைகளில் சிக்கி இருக்காது, சீரழிந்திருக்காது."

"இந்துத்துவா" என்பது அண்மைக்காலத்தது. விஷமமானது. இது 1923–ல் இந்துத்துவா என்ற நூலில் உருவானது.

இந்துத்துவா என்ற நூலை எழுதியவரும் அதனை வெளியிட்ட பதிப்பாளரும். அந்த நூலின் பதிப்புரையில் "இந்துத்துவா என்பது புதியதொரு கொள்கை, அது பழைய இந்து மதத்திலிருந்து வேறுபட்டது" என்பதை இந்த நூலில் ஒத்துக் கொள்கின்றார்.

"(இந்துத்துவா) என்பதன் இலக்கணம் "இந்துதர்மா"வைகருத்தில்கொண்டதல்ல. அதே போல் அது இந்து மதத்தைக் கருத்தில் கொண்ட துமல்ல. இந்துத்துவா என்பது இந்து வகுப்புவாதத்தை கருத்தில் கொண்டது.

### புண்ணிய பூமி

அடுத்து இதுவே புண்ணிய பூமி :

என்ற புனித பூமி. இங்கே அனைவரும் ஒரே ஜாதி Common Jati - ஒற்றைக் கலாச்சாரம் – சமஸ்கிருதத்தை அடிப் படையாகக் கொண்ட ஒற்றைக் கலாச் சாரத்தை உடையவர்கள் என்கின்றார் சாவார்கர்.



கோட்சேவுடன் ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள்

கிறிஸ்துவர்களும், முஸ்லிம்களும் இந்தியாவை புண்ணிய பூமி (எ) புனித பூமியாக எடுத்துக் கொள்ளவில்லை. வணங்கவில்லை. வணங்க மாட்டார் கள். அவர்கள் இந்தப் பூமியை வணங் கினால் அவர்கள் இந்து அமைப்புக்குள் வரவேற்கப்படுவார்கள். ஆதாரம் (இந்துத்துவா V.D.சவார்கர் பக்கம் 115) அவர்கள் இந்துஸ்தானை – ஹிந்துஸ் தானை (இந்தியாவை) வணங்க வில்லை என்றால் அவர்கள் இந்து மதக் கோட் பாட்டுக்கு வெளியே போய்விடுவார் கள். இந்தியா என்ற வட்டத் திற்கும் வெளியே போய் விடுவார்கள்" ஆதாரம் இந்துத்துவா : வி.டி. சவார்கர் : பக்கம் 115.

V.D.சவார்கர் சொல்வதிலிருந்து :

"கர்வாப்ஸீ"– வீடுதிரும்புதல்– என்ற கட்டாய மத மாற்றத் திட்டங்களின் உண்மையான உள்ளர்த்தமும் இதுதான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். "இதன் உண்மையான பொருள் இந்துத்துவாவைப் பிரஸ்தாபிப்பது என்பது இந்துக்கள் அல்லாதவர்களை அவர்களின் மதங்களை விட்டு விட்டு – இந்து மதத்திற்குள் வந்து விடுங்கள் எனச் சொல்வதாகும்.

சவார்கர் இன்னும் ஒருபடி மேலேபோய் இந்துக்கள் அல்லாதவர்களை இந்து ஐதீகங்களை, சடங்குகளை, ஹிந்து விழாக்களை – இந்துப் புனி தங்களை கடைப்பிடிக்க வேண்டும், எனக் கட்டா யப்படுத்துகின்றார் (Front Line : Feb-3, 2017)

### மதத்தின் பெயரால் திணிப்பு

இவையெல்லாம் மதத்தின் பெயரால் வைக் கப்படும் திணிப்புகள் அல்லாமல் வேறென்ன? இவையெல்லாம்தான் இந்துத்துவா என்றால் அதைப்போய் ஒரு வாழ்க்கை நெறி என உச்ச நீதிமன்றம் சொன்னால் அது பச்சையாக பாசிசத்தைத்தானே ஆதரிக்கின்றது.

ராஷ்ட்ரிய்ய சுயம் சேவக் என்ற ஆர்.எஸ்.எஸ். அமைப்பு சவார்கரின் இந்துத்துவ கொள்கை களால் ஈர்க்கப்பட்டது. இந்த அமைப்பின் தலைவர்கள், இந்தக் கொள்கையைத் தூக்கிப் பிடித்தார்கள். பாரதீய ஜனதா கட்சியும் இதைத்தான் தூக்கிக் கொண்டு பிரச்சனைகளைக் கிளப்பிற்று, கிளர்ச்சிகளைச் செய்தது.

இந்த இந்துத்துவாவை மையமாகக் கொண்டுதான், ஜூன் 11, 1989 ஆம் ஆண்டு பாபரி மஸ்ஜித் இருக்கும் இடத்தில் இராமர் கோயிலைக் கட்டுவோம் என அத்வானி ஓர் இயக்கத்தைத் தொடங்கினார். 1998 முதலே பாரதீய ஜனதாவின் தேர்தல் அறிக்கைகள் "நமது தேசிய அடையாளம், நமது கலாச்சார அடையாளம் என்பனவற்றை முன் நிறுத்தின. இப்படிப் பச்சையாகவும் கொச்சையாகவும் மதம் அரசியலில் நுழைக்கப்பட்டது.

அப்போதே இதை உச்ச நீதிமன்றத்தால் தடுத்திருக்க முடியும், தடுத்திருக்க வேண்டும். ஆனால் உச்ச நீதிமன்றம் செய்யவில்லை. மாறாக உச்ச நீதிமன்றம் அதற்கு ஜால்ரா போட்டது. உச்ச நீதிமன்றம் எப்படி இதில் அநியாயங்களைச் செய்தது என்பதைப் இப்படி வரிசைப்படுத் தலாம்...

### முதல் அநீதி : July-4, 1995 தீர்ப்பு

இந்தத் தீர்ப்பு (Dr. Das Rao Dashmukh VS Kamal Kishore nanasaheb Kadam & Others)

அதாவது டாக்டர் தாஸ் ராவ் தேஷ்முக் யந கமல் கிஷோர் நானா சாகிப், காதம் மற்றும் பலர் என்ற வழக்கில் வழங்கப்பட்டது.

இதில், இந்துத்துவ பாசிஸ்ட்டுகள், காங்கிரஸ் கட்சியின் ஆட்சியை மையப்படுத்தி சில பல குற்றச்சாட்டுகளை காங்கிரஸ் கட்சியின் மீது சுமத்தி, அந்தக் கட்சி, இந்துக்களுக்கு எதிரானது எனப் பிரச்சாரம் செய்தனர். வாக்காளர்களை இந்துக்கள் என்றும், முஸ்லிம்கள் என்றும் பிரித்தனர்.

பாரதீய ஜனதா கட்சி இந்துக்களின் உரிமைகளைக் காத்திடும் கட்சி என வாக்காளர்களை நம்ப வைத்தனர். இந்த சூழ்ச்சியில் காங்கிரஸ்–ஐ முஸ்லிம்களின் கட்சி எனப் புனைந்துரைத்தனர். இந்துக்களுக்கு மிகப்பெரிய அளவில் அநியாயம் இழைக்கப்படுவதாகவும், அவர்களைக் காப்பாற்றிடத்தான், பாரதீய ஜனதா கட்சி அவதாரம் எடுத்திருப்பதாகவும் பிரச்சாரம் செய்தார்கள். வாக்காளர்களை இந்துக்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும் பிரித்து பிளந்து போட்டார்கள். அதாவது வகுப்புவாதத்தைப் பச்சையாக வளர்த்தார்கள்.

இப்படி வாக்காளர்களை இந்துக்கள் என்றும் முஸ்லிம்கள் என்று பிரிக்கக்கூடாது அது மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்திற்கு (Peoples Representation Act 1951) க்கு எதிரானது என்றும் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு எதிரானது என்றும் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கியத் தீர்ப்பில் “காங்கிரஸ் முஸ்லிம்களைத் திருப்திப்படுத்தும் வகையில் நடந்து கொள்கிறது. இந்துக்களுக்கு அநியாயம் செய்கின்றது. காங்கிரஸ் செய்வது தவறு தேசத்தின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் எதிரானது. இதனால் இந்துக்களுக்கு அவர்களின் உரிமைகளை உணர்த்துவதும், அவர்களை விழிப்படையச் செய்வதும், மதத்தின் பெயரால் ஓட்டு கேட்பதாகாது” எனக் கூறியது.

### ஏமாற்றம்

வாக்காளர்களை இந்துக்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும் பாசிச சக்திகள் பிரிப்பதை நியாயப்படுத்தியது உச்ச நீதிமன்றம். அதாவது இந்தியாவின் மத சார்பற்றத் தன்மைக்கு உலை வைத்தது.

ஆனால் நாட்டின் இரண்டாவது பெரும்பான்மையினரும் மிகப்பெரும் சிறுபான்மையினருமான (முஸ்லிம்கள் இதர சிறுபான்மையினரான தலீத்கள், கிருஸ்தவர்கள், ஜைனர்கள் இவர்களெல்லாம் நமது உச்ச நீதிமன்றம் முதலாய அரசியல் அமைப்பால் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்கள் மத சார்பின்மையின் அடிப்படையில் இயங்குவதாக நம்புகின்றனர். ஏமாறுகின்றனர். தொடர்ந்து ஏமாந்து கொண்டே இருந்தாலும் உச்ச நீதிமன்றத்தை நம்புகின்றனர். ஆனால் உச்ச நீதிமன்றம் தொடர்ந்து இந்துத்துவாவுக்கு தூபம் போட்டு, மத சார்பின்மையை மண்ணிலே வீழ்த்திவிட்டது. இந்து ராஷ்டிராவுக்கு வழிவிட்டுக்கொண்டே வருகின்றது.

### இரண்டாவது அநீதி 1995

அதேபோல் இந்துத்துவா பற்றிய உச்ச நீதிமன்றத்தின் மற்றொரு மகத்தான அநீதி.

இது *1995*–ல் வழங்கப்பட்ட தீர்ப்பு : SCC : 169 (Manohar Joshi VS Nitin Bhawzar B.2 others) அப்போது நடைபெற்று முடிந்த மராட்டிய மாநில சட்ட மன்ற தேர்தலில் பாரதீய ஜனதா கட்சியின் பிரதான பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர், பிரமோத் மஹாஜன் இப்படிப் பேசினார்.

“இந்துக்களே இந்துத்துவாவைக் காப்பாற்றுவதற்கு பாரதீய ஜனதா கட்சிக்கு – சிவசேனா கூட்டணிக்கு வாக்களியுங்கள். திருவாளர் இராஜீவ் காந்திக்கு தன்னுடைய சொந்த மதத்தையே தெரியாது. ஆகவே இராஜீவ் காந்திக்கு இந்துஇசம் பற்றி பேசுவதற்கு எந்த உரிமையுமில்லை. இப்போது நடந்து கொண்டிருக்கும் தேர்தலின் முடிவுகள் மக்கள் எதிர்நோக்கும் உணவுப் பிரச்சனையையும் உடைப் பிரச்சனையையும் மட்டுமே தீர்ப்பதில்லை, மாறாக இந்துத்துவ சாம்ராஜ்யம் ஒன்று மராட்டிய மாநிலத்தில் மலருமா அல்லது வீழுமா என்பதையும் முடிவு செய்யும். மராட்டிய மாநிலத்தில், இந்துத்துவா வீழுமேயானால் தேச விரோத முஸ்லிம்கள் வலுப்பெறுவார்கள். அவர்கள் ஹிந்துஸ்தானை பாகிஸ்தானாக மாற்றுவார்கள். இந்துத்துவா என்ற கொள்கை கொழுந்துவிட்டெரியும் என்றால் முஸ்லிம்கள்சுட்டுப் பொசுக்கப்பட்டு சாம்பலாக்கப்படுவார்கள்”.



கொலை செய்யப்பட்ட காந்தியின் உடல்

"இராஜீவ்காந்தி இந்துத்துவாவைப் பற்றிப் பேசுவதென்பது ஒரு விபச்சாரி கற்பைப் பற்றி பேசுவது போன்றதாகும் இராஜீவ் காந்தியின் தாய் இந்து, தந்தை பார்சி. அதனால் அவர் எந்த இந்துக் கலாச்சாரமுமில்லாதவர்".

(ஆதாரம் : மும்பை உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம், இவற்றில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் (மற்றும் ஏ.ஜி. நூராணி, பிரண்ட் லைன், பெப்ருவரி 3, 2017–இல் எழுத்தாண்டவை) Religion and Law review : Published by : IOS

இப்படி பிரமோத் மகாஜன் பேசியது தவறு, எனச் சுட்டிக்காட்டி மும்பை உயர்நீதிமன்றம், இந்தப் பிரச்சாரம் நடந்த தொகுதிகளிலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்தது. ஆனால் உச்ச நீதிமன்றம் இவர்கள் நம்பிக்கைகளைத்தான் வெளிப்படுத்தி இருக்கின்றார்கள் சில உண்மைகளைத்தான் பேசி இருக்கின்றார்கள் எனக் கூறி அவர்களை மீண்டும் பதவியில் அமர்த்தியது.

மும்பை உயர் நீதிமன்றம், இதேபோல் பிரச்சாரம் செய்த இன்னும் பல வேட்பாளர்களை அவர்கள் மதத்தின் பெயரால் வாக்குகளைச் சேகரித்தர்கள் என கூறி பதவி நீக்கம் செய்தது. அவர்களையும் மீண்டும் பதவியில் அமர்த்தியது உச்ச நீதிமன்றம்.

**மூன்றாவது : அநீதி**

இதுபோன்று உச்ச நீதிமன்றம் தொடர்ந்து செய்த அநீதிகள் மிகவும் கொச்சையானது மராட்டிய மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் மனோகர் ஜோஷியின் விவாதத்தில் நடந்தது.

மனோகர் ஜோஷி தனது தேர்தல் பிரச்சாரங்களில், அதாவது மராட்டிய மாநில சட்ட மன்றத்திற்கு நடந்த தேர்தல் பிரச்சாரங்களில் இப்படிப் பேசினார். அங்கு "எங்களுடைய கட்சி சிவசேனா வெற்றி பெற்றால் மராட்டிய மாநிலம்தான் "முதல் இந்து ராஷ்டிரா" நாங்கள் முஸ்லிம்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவர்களின் வாக்குகள் எங்களுக்கு வேண்டாம். இந்துக்களின் வாக்குகளே போதும். (Source : Hinduthuva Judgement of the Indian Supreme Court 1995-1996 Extracted from Religion and law review Vol. 5, 1996, Published by IOS)

இந்தத் தேர்தல்கள் அதாவது மராட்டிய மாநில சட்ட சபைக்கு 13 டிசம்பர், 1987–இல் நடத்தப்பெற்றன. இந்தத் தேர்தலில் பிரச்சாரம் செய்த சிவசேனாவின் பால்தாக்கரே பேசியதாவது...

"நாங்கள் இந்தத் தேர்தலை இந்து இசத்தை பாதுகாக்கவே சந்திக்கின்றோம். இதனால் நாங்கள் முஸ்லிம்களின் வாக்குகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. இந்த நாடு இந்துக்களுக்குச்

சொந்தமானது. இந்துக்களுக்கு சொந்தமான தாகவே இருக்கும்'' ''இந்துஇசம்'' இந்தத் தேர்தலில் வெற்றிபெறும். நீங்கள் ஒவ்வொரு 'மஸ்ஜித்'ஐயும் இடித்து விட்டு கீழே தோண்டிப் பாருங்கள் அங்கே கோயிலொன்று இருக்கும். இந்துக்களுக்கு எதிராக நிற்பவர்களை ஷூக்களால் (காலணிகளால்) அடிப்போம்''.

இதே பால்தாக்கரே இன்னொரு கூட்டத்தில்...

''நாங்கள் 'இந்துஇசம்' என்ற கொள்கை யோடு வந்திருக்கின்றோம். சிவசேனா இந்துஇச கொள்கையை நிலை நாட்டும் ; இந்த நாடு இந்துக்களுக்குத் தான் சொந்தம் என்றாலும் இராமனும், கிருஷ்ணனும் அவமானப்படுத்தப் படுகின்றார்கள். எங்களை எதிர்த்து இந்தத் தேர்தலில் நிற்பவர்கள் இந்துக்களாகிய உங்களின் வாக்குகளை விட முஸ்லிம்கள் வாக்குகளையே அதிகமாக மதிக்கின்றார்கள்''.

''ஆனால் நாங்கள் தெளிவாகப் பிரகடனப் படுத்துகின்றோம் எங்களுக்கு முஸ்லிம்களின் வாக்குகள் வேண்டாம். ஷஹாபுதீன் என்ற பாம்பு ஜனதா கட்சியில் அமர்ந்திருக்கின்றது. நிஹால் அஹ்மத் போன்றவர்களும் ஜனதா கட்சியில் இருக்கின்றார்கள். ஆகவேதான் கூறுகின்றோம். வைல் பார்லி தொகுதி மக்கள் ஜனதா கட்சியை இங்கேயே போட்டு புதைத்து விட வேண்டும்''.

இதுபோன்ற உரைகளை நிகழ்த்தி வாக்காளர் களை இந்துக்கள் என்றும், முஸ்லிம்கள் என்றும் பிரித்தார்கள். எதிர் கட்சியை விட முஸ்லிம் களையே எதிரிகளாகக் காட்டினார்கள். வகுப்புத் துவேஷத்தை வளர்த்தார்கள். மதத்தின் பெயரால் வாக்கு கேட்டார்கள். தேர்தல் களத்தை வகுப்பு வாதப் போர்க்களமாக மாற்றினார்கள்.

இவற்றையெல்லாம் உயர் நீதிமன்றத்திலே நிரூபித்தார்கள். இதனால் மும்பை உயர் நீதி மன்றம் சிவசேனா கட்சியைச் சார்ந்த பின்வரும் சட்ட மன்ற உறுப்பினர்கள் மதத்தில் பெயரால் வாக்கு சேகரித்ததால் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டது செல்லாது என பதவி நீக்கம் செய்தது.

**அப்படி பதவி இழந்த சிவசேனா சட்ட மன்ற உறுப்பினர்கள்**

*1) மனோகர் ஜோஷி – மராட்டிய மாநில முதல்வர், 2) யஷ்வந்த்பிரபு, 3) எஸ்.வி. மகாதிக், 4) இராமாகாந்த் மேயேகர், 5) சந்திரகாந்த் கோயல், 6) மகேஸ்வர் சேவ், 7) இராமச்சந்திரா காப்சி*


என்.பி.சிங்

இவர்கள் இல்லாமல் மதத்தின் பெயரால் தங்கள் வேட்பாளர்களுக்கு வாக்கு கேட்டார்கள் என சிவசேனாவின் தலைவர்கள் மீதும்

*1. பால்தாக்கரே என்பவர் மீதும், 2) பதாக்கி, 3) பிரமோத் மகாஜன், 4) சார்வீ ரீதாம்பரா, 5) சங்கான் பாக்பால் ஆகியோர் மீதும் வழக்குகள் தொடரப்பட்டன.*

தேசத்தின் ஒற்றுமைக்கும் ஒருமைப் பாட்டிற்கும் ஊறுவிளைவித்தார்கள் என்றும் வழக்குகள் தொடரப்பட்டன. அவர்களை மும்பை நீதி மன்றம் கண்டித்தது, தண்டனை களைப் பிறப்பித்தது.

**முதல்வர் பதவி : பறிப்பு ?**

மும்பை நீதிமன்றம் மனோகர் ஜோஷி –ஐ பதவி நீக்கம் செய்யும்போது அவர் மராட்டிய மாநிலத்தின் முதல்வராகப் பதவி ஏற்றிருந்தார்.

மும்பை நீதிமன்றம் அவரை மதத்தின் பெயரால்வாக்குக்கேட்டார். அதனால் அவரைத் தேர்ந்தெடுத்தது செல்லாது எனத் தீர்ப்பளித் தவுடன் அவர் பதவி இழந்தார்.

உடனேயே உச்ச நீதிமன்றத்திற்கு ஓடினார். மும்பை நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறுத்தி வைத் திடச் சொல்லி வேண்டினார். உச்ச நீதிமன்றம், மனோர் ஜோஷி கேட்ட வரங்களையெல்லாம் அள்ளிக் கொடுத்தது. அவர் பதவியில் நீடித்தார்.


1948-ல் காந்தியை கொலை செய்தவுடன் மும்பை நடந்த கலவரத்தில் உயிரிழந்தவர்கள்

இது ஒரு பெரும் அநீதி. மதசார்பின்மையை மாய்த்த செயல்.

உச்ச நீதிமன்றம், மும்பை நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறுத்தி வைக்காமலிருதிருந்தால் இந்த நாட்டில் மத துவேஷங்கள் வளர்ந்திருக்காது. நாடு மதவாதிகளின், பாசிஸ்ட்டுகளின் கைகளில் சிக்கி இருக்காது, சீரழிந்திருக்காது.

ஆனால் உச்சநீதிமன்றம் மத வாதத்திற்குத் துணைபோனது. மத சார்பின்மையைக் குழி தோண்டி புதைத்தது.

மராட்டிய முதல்வர் மனோகர் ஜோஷியின் முழு பதவிக் காலமும் முடிந்த பின்னரே மூல வழக்கை விசாரணைக்கு எடுத்தது உச்ச நீதிமன்றம். இது அவருக்குத் தந்த மிகப்பெரிய அங்கீகாரம்.

### உச்ச நீதிமன்றத்தின் குளறுபடி - விளக்கம்

இந்துத்துவா இந்துஇசம் – இவற்றிற்கு விளக்கம் என்ற பெயரில் உச்ச நீதிமன்றம் இல்லாதது பொல்லாதது எல்லாவற்றையும் நீட்டி முழக்கிற்று இறுதியில் இவர்கள் மதத்தின் பெயரால் வாக்குகளை சேகரித்தது – ஓட்டுக்களை கேட்டது – முஸ்லிம்கள் / இந்துக்கள் என வாக்காளர்களைப் பிரித்தது, இவற்றில் தவறில்லை என விளக்கம் தந்து அவர்களை மும்பை நீதிமன்றம் பதவி நீக்கம் செய்ததை ரத்து செய்தது. அன்று முதலே இந்துத்துவா இந்து இசம் – குறிப்பாகச் சொன்னால் பாசிசம் உச்ச நீதிமன்ற அங்கீகாரத்தோடு பாரதத்தில் பவனி வரத் தொடங்கியது. இந்துத்துவாவைத் தீவிர வாதிகள் நாட்டின் செல்லப் பிள்ளைகள் என ஆனார்கள்.

அவர்கள் வெடிக்கும் குண்டுகள், மேற்கொள்ளும் தீவிரவாத தாக்குதல்கள் இவை தேசபக்த செயல்களாகி விட்டன. இந்தப் பின்னணியில் தான் பிரக்யாசிங் இப்போது நடந்த தாக்கூரின் பிணையைப் பார்த்திட வேண்டும் இவர்தான் மலேகான் குண்டு வெடிப்பின் மூல மூளை.


பால்தாக்கரே

இப்படித் தொடர்ந்து தீவிர வாத தாக்குதல்களை நடத்தி –பழியை அப்பாவி முஸ்லிம்களின்மேல் போட்டு ஆட்சியைப் பிடித்துவிட்டார்கள். இதற்கு எல்லா விதத்திலும் உற்ற துணையாக நின்றது உச்ச நீதிமன்றந்தான். – இந்த தீர்ப்பை டிசம்பர் 11, 1995–ல் வழங்கியது.

### 1995 டிசம்பர் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிர்ப்பு

உச்ச நீதிமன்றம் மதசார்பின்மை – பொது ஒழுக்கம் இவற்றிற்கெதிராகவும், மக்கள் பிரதி நிதித்துவச் சட்டத்திற்கு முற்றிலும் முரணாகவும் தந்த தீர்ப்புகள், இந்த நாட்டு மக்களின்

நல்வாழ்விலும் நாட்டு மக்களின் ஒற்றுமையிலும் ஒருமைப்பாட்டிலும் நம்பிக்கை வைத்திருந்த நல்லவர்களின் மனசாட்சியை உறுத்திற்று. உலுக்கிற்று, இதனால் அவர்கள் உச்ச நீதிமன்றத்தின் தேசவிரோத தீர்ப்புக்கு எதிராக வெகுண்டெழுந்தார்கள்.

### உச்ச நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்த மழவர்கள்

1) சட்ட மேதை பத்மபூஷன் சோலி சிஜே சொரப்ஜி. இவர் 1998–களில் இந்திய அரசின் தலைமை வழக்கறிஞராக இருந்தவர். Attorney General of India & President United Lawyers Association - ஒருங்கிணைந்த வழக்கறிஞர்களின் அமைப்பின் தலைவர். Transparency International என்ற சர்வதேச அமைப்பின் அவைத்தலைவர் 1997–ஆம் அண்டு முதல் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தின் – சிறப்பு ஆலோசகராக இருந்து வருபவர்.

சர்வதேச வழக்கறிஞர்களின் அவையின் துணைத் தலைவர்

2) பி.பிராவ் (எ) பவானி பரமேஷ்வர ராவ். – மூத்த உச்ச நீதிமனற் வழக்கறிஞர்.

3) மூத்த வழக்கறிஞர் – நீதிக்கான மாபெரும் போராளி, எழுத்தாளர், பந்நூல் ஆசிரியர் – ஏ.ஜி. நூராணி, சிறந்த வரலாற்று அறிஞர், ஆய்வாளர்.


4) இராஜேந்திர சச்சார் – டெல்லி உயர் நீதிமன்றத்தில் முன்னாள் தலைமை நீதிபதி. புகழ்பெற்ற சச்சார் அறிக்கையின் ஆய்வாளர், ஆசிரியர்

5) இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தின் மிகப்பெரிய மேதை என மக்களால் புகழப்பட்ட நானி பல்கிவாலா

6) நீதியரசர் வி.எம். தார்குண்டே – மூத்த உச்ச நீதிமன்ற வழக்கறிஞர், மனித உரிமை வழக்கறிஞர் 'மக்கள் உரிமை இயக்கத்தின் தந்தை' "Father of Civil Rights Movements" என அழைக்கப்பட்டவர். நீண்ட காலம் பம்பாய் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தவர். மனித உரிமைகளுக்காக போராடி நீதிபதி பதவியை இராஜினாமா செய்தவர்.

7) பி. இராம் ரெட்டி – ஹைதராபாத்–ஐ சார்ந்த வழக்கறிஞர்.

8) டானியல் லத்தீஃப்



மனோகர் ஜோஷி

9. இராஜீவ் தாவான் – மூத்த வழக்கறிஞர், உச்ச நீதிமன்றத்தில் பலமனித உரிமை வழக்குகளில் வாதாடியவர்.

10. முதுபெரும் பத்திரிகையாளர் குல்தீப் நய்யார் .

இவர்கள் தங்கள் எதிர்ப்புகளை உச்ச நீதிமன்றத்திலும், பொது மேடைகளிலும் காட்டினார்கள். அத்தோடு மக்கள் இயக்கங்களையும் நடத்தினார்கள். – உச்ச நீதிமன்றத்தின் கழுவுற மீனில் நழுவுகிற மீனாக வந்த நீண்ட, தீர்ப்பை கடுமையாக விமர்சித்தார்கள்.

இந்த விமர்சனங்கள் எதுவரை சென்றது என்றால் நீதிபதிகளைப் பார்த்து 'கணம் பொருந்திய நீதிபதிகளே நீங்கள் வழங்கியத் தீர்ப்பை நீங்களே படித்துப் பாருங்கள், உங்களுக்குப் புரிந்தால் சொல்லுங்கள்'' என்றார்கள்.

இந்த விமர்சனம் மிகவும் முக்கியமான ஒன்று. ஏனெனில், நீதிபதிகளின் நோக்கம், இந்துத்துவாவை இந்து இசத்தை – அதாவது இந்து மதத்தின் பெயரால் வாக்குகள் கேட்பதை – இந்த வழக்குகளில் வாக்குகள் கேட்டதை நியாயப்படுத்திட வேண்டும் என்பதே! அதை நியாயப்படுத்திவிட்டார்கள்.

முதலமைச்சர் மனோகர் ஜோஷி உள்ளிட்டவர்களைத் தேர்ந்தெடுத்தது கூடும், அவர்களை பதவி இழந்திடச் செய்ததுதான் தவறு எனக்


# இந்துத்துவாவிற்கு சாதகமான தீர்ப்பை எதிர்த்தவர்கள்



சோலி சோராப்ஜி




பி.பி.ராவ்




ராஜேந்திர சச்சார்



நானி பல்கிவாலா



ராஜீவ்தாவன்



குல்திப் நய்யார்

காட்டிட தலைப்பட்டார்கள், காட்டி விட்டார்கள்.

அதற்காக நீதிபதிகள் தந்த விளக்கங்கள், ஒரு வரட்டு சிந்தாந்த விரிவாக்கம், அதை எழுதியவர்கள் உட்பட யாருக்கும் அது புரியாது. படிப்பவர்களுக்குக் குழப்பந்தான் மிஞ்சும் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரிந்ததுதான்.

**விமர்சனங்களைத் தாங்கிட இயலாத நீதிபதிகள்?**

மேலே நாம் குறிப்பிட்ட சட்ட நிபுணர்களின் விமர்சனத்தால் நீதிபதிகள் நொந்து போய் விட்டார்கள்.

உண்மையைச் சொன்னால் அவர்களின் மன சாட்சியே அவர்களை உறுத்தியதுபோலும், அதனால் அவர்களே முன்வந்து ஓர் தன்னிலை விளக்கத்தைத் தந்தார்கள்.

அந்த விளக்கம் அவர்கள் தந்த தீர்ப்பை விட குழப்பமாகவும் இருந்தது. அப்போது அதை தமிழகத்தில் நாம் வெள்ளரிகாய்க்கு, வெண்ணை தடவிய விளக்கம் என விமர்சித்தோம்.

நாம் மேலே சுட்டிக் காட்டிய சட்ட மேதை கள், பத்திரிகையாளர்கள் இவர்கள் மீண்டும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் விளக்கத்தை கடுமை யாகச் சாடினார்கள். அந்த விளக்கம் தீர்ப்பைவிட

குழப்பமாக இருக்கின்றது என்பது அவர்களின் விமர்சனம். (நாமும் அந்தத் தீர்ப்பையும் விளக்கத்தையும் முழுமையாகப் படித்திருக்கின்றோம்)

**முஸ்லிம்களின் எதிர்ப்பு :**

நாம் மேலே விவாதித்தத் தீர்ப்புகள், டிசம்பர் 11, 1995–இல் வழங்கப்பெற்றவை என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். முஸ்லிம்களின் எதிர்ப்பு எப்படி இருந்தது என்பதை நாம் மேலே குறிப்பிட்ட ஆவணத் தொகுப்பு, இப்படிக் கூறுகின்றது.

"The muslim reaction to it has been in low key, partly because the leadership is devided and grappling for an issue and partly because the community feels that the worst that could be fall them has already happened in 6th December 1992 and what fallowed in its wake"

இதன் பொருள் :

“முஸ்லிம்களின் எதிர்ப்புகள் செயல்பாடுகள் மிகவும் அழுத்தம் குறைந்தனவாகவே இருந்தன. காரணம் முஸ்லிம்களின் தலைவர்கள் கருத்தால் பிளவுபட்டு நின்றார்கள். மறுபாதி அவர், அவர்களுக்கு நடத்திட வேண்டியதெல்லாம் டிசம்பர் 6, 1992 இலேயே நடந்து முடிந்துவிட்டது. மிச்சம் மீதி இருந்தால் டிசம்பர்6,1992–ஐதொடர்ந்து நடந்தவற்றால் முடிந்து விட்டது.

நீதிபதிகள் :

இந்துத்துவாவை தூக்கிப் பிடித்து, புரியாத விளக்கங்களையும் பலமுறை தந்து இந்துத்துவ தீர்ப்பை எழுதிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் 1) நீதிபதி ஜெ.எஸ். வர்மா, "Justice J.S. Varma 2) நீதிபதி என்.பி.சிங் – Justice N.P. Singh 3 ) ஜெ.ஜெ.வெங்கடசாமி – Justice J.J.Venkatasamy

நீதிபதி வர்மா அல்லாத இரண்டு நீதிபதிகளும், வர்மாவின் அத்தனை விளக்கங்களுக்கும் களுக்கும் ஆமாம் சாமி போட்டார்கள்.


**ஊடகங்கள் தந்த பாராட்டு!**

இந்த நீதிபதிகள் தந்த தீர்ப்புகள், இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கும் – மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951–க்கும் முற்றிலும் முரணானது.

அதேபோல் இந்த நாட்டில் இழையோடி நின்ற அத்தனை அடிப்படை கொள்கைகளுக்கும் எதிரானது. நாட்டில் மிகைத்து நின்ற ஒற்றுமை ஒருமைப்பாடு இவற்றிற்கு முற்றிலும் முரணனானது.

என்றாலும், ஊடகங்கள் இந்தத் தீர்ப்பை அமோகமாக வரவேற்றன.

இந்துஸ்தான்டைம்ஸ்: Hindustan Times என்ற ஆங்கில நாளிதழ் “இந்துத்துவாவின் பெயரால் தேர்தல் நடத்துவது செல்லும் Hintutuva as Poll Plank, Valid bonanza for the BJP - பாரதீய ஜனதா



# R. S. S. Leader Presented Godse With Revolver

## Countrywide Arrests Continue

www.truthofgujarat.com TruthOfGujarat TruthOfGujarat

NAGPUR, Feb. 6.

According to very reliable information, the revolver Godse used to assassinate Gandhiji was presented to him at Nagpur by one of the R.S.S. leaders who has been taken in custody. According to the same source he was given a send-off by the owner of the revolver and the Editor of a Marathi daily.

Thursday passed off peacefully except for searches at various places. A dozen persons were arrested, prominent among them being Prof. Varahadpande of the City College. Another Professor of Science of the College who, it is alleged, had said to his students a day before Gandhiji's assassination that he (Gandhiji) would be murdered, disappeared.

Two-fire-engines of the Nagpur Municipality were sent to Umrer, about 3 miles from here, on receipt of news that houses of leading lights of the R.S.S were set on fire.

## Plot to Murder Leaders

### Alleged Member of Gang Taken to Lucknow

BENARES, Feb. 5.

After preliminary interrogation by the Police here, Devendra Kumar Wadse, an alleged associate of the gang, which is reported to have plotted the assassination of top-ranking national leaders, has been sent to Lucknow under armed escort.

Devendra Kumar is reported to have surrendered himself to the District Magistrate of Mirzapur on Monday last. He was brought here for interrogation.—A.P.I.

### Measures to Check Leakage

கோட்சேவிற்கு காந்தியை கொலை செய்ய துப்பாக்கியை பரிசாக தந்தவர் ஆர்.எஸ்.எஸ். தலைவர் என்று அன்றே (இந்தியன் எக்ஸ்பிரஸ், பிப்ரவரி-6 1948) பத்திரிகையில் வந்த செய்தி

கட்சிக்கு மிகப்பெரிய பரிசை உச்ச நீதிமன்றம் வழங்கிற்று”.

அப்போதைய மராட்டிய மாநில முதல்வர் மனோகர் ஜோஷி, தங்கள் கட்சி ஜெயித்தால் மராட்டிய மாநிலம்தான் முதல் இந்து ராஷ்டிரா எனச் சொன்னதை உச்ச நீதிமன்றம், அது ஒரு



THE HINDU

Home Today's Paper All Sections News National International Opinion Business Sport

Andhra Pradesh Karnataka Kerala Tamil Nadu Telangana Other States

NATIONAL » OTHER STATES

MEERUT, January 26, 2016

Updated: January 26, 2016 19:28 IST

**Hindu group observes Republic Day as 'black day'**

MOHAMMAD ALI

COMMENT · PRINT · T T

Like Share 16 Tweet G+1 1 in Share Share

TOPICS
politics
national politics

*Akhil Bharatiya Hindu Mahasabha demands that India to be declared a "Hindu state."*

Akhil Bharatiya Hindu Mahasabha observed January 26, Republic Day, as "black day" and took oath to make India a "Hindu Rashtra."

Over hundreds of activists of the Hindutva group waved black flags on the streets of Meerut on Tuesday.

**குடியரசு தினத்தை கருப்பு தினமாக அறிவித்த இந்துத்துவாதிகள்**

நம்பிக்கைதான் Hope at best எனக்கூறி உதாசீனப் படுத்தி இருந்தது. இதை அவர், "உண்மை வெல்லும்" எனக்கூறி பாராட்டினார்.

அவுட்லுக் :

27 டிசம்பர் 1995–இல் அவுட்லுக் "Outlook" என்ற ஆங்கில வார இதழில் வெளிவந்த ஒரு கட்டுரை ; எல்லோராலும் மேற்கோள் காட்டப் பட்டதால், அதில் சில பகுதிகளை இங்கே தருகின்றோம்.

"உச்ச நீதிமன்றம் பம்பாய் உயர்நீதிமன்றத் தின் தீர்ப்பை வழிமொழிந்தால் – நாம் அரசியல் நடத்திட இயலாது என பாரதீய ஜனதா கட்சி யினரும் சிவசேனாவும் அஞ்சின. உண்மையில் உச்ச நீதிமன்றம் மும்பை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆமோதித்திருந்தால் இவர்களின் எதிர் காலம் இருண்டதாகவே இருந்திருக்கும். உச்ச நீதிமன்றம் மும்பை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை தள்ளுபடி செய்ததால் பாரதீய ஜனதா கட்சியின ரும், சிவசேனாவினரும் சங்கபரிவாரத்தைச் சார்ந்தவர்களும் மட்டற்ற மகிழ்ச்சியில் மூழ்கி னார்கள். மத சார்பற்ற சிந்தனையாளர்கள், இடது சாரிகள், இவர்கள் எல்லாம் இனி இந்தியா வகுப்புவாதத்தால் ஆட்கொள்ளப்படும் எனக் கைப்பிசைந்து நின்றார்கள். செய்வதறியாது திணறிபோய் நின்றார்கள். அதாவது இந்தியாவில் ஜனநாயகம், மதசார் பின்மை எல்லாம் டிசம்பர் 11, 1995 உச்ச நீதி மன்றத் தீர்ப்போடு செத்துப் போய்விட்டன.

இந்தியாவின் விடுதலைக்காகப் போராடி யவர்கள், பெற்றுத்தந்த உரிமைகள், விழுமியங்கள் இவையெல்லாம் மரணத் தின் மடியல் வீசப்பட்ட நாள் டிசம்பர் 11, 1995. மரணத்தின் மடியில் வீசியது உச்ச நீதிமன்றம்.

இதனால் இந்துத்துவா என்ற இந்துஇசம் உச்ச நீதிமன்றத்தின் முத்திரை யோடு உலா வருகின்றது. அதாவது இந்துத்துவ பாசி சம் இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தால் அங்கீகரிக் கப்பட்ட ஒன்று.

அன்றுமுதல் மீடியாக்கள் என்ற நமது ஊடகங்கள், இந்துத்துவ பாசிசத்தை நியாயப் படுத்திடும் அளவில், விவாதங்கள், கட்டுரைகள், ஆதரவான செய்திகள் இவற்றை வெளியிட்டு அதனை மக்கள் மன்றத்தில் ஏற்றுக்கொள்ளச்செய் திட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

**இந்துத்துவாவிற்கு வலு சேர்த்திட இன்னொரு தீர்ப்பு**

பேராசிரியர் இராமச்சந்திரா காப்சி VS ஹாரி பான்ஷ்ஆர் சிங் 1996.

இதில் பாரதீய ஜனதா கட்சி பச்சையாக வாக்காளர்களை இந்துக்கள் எனவும், முஸ்லிம் கள் எனவும் பிரித்து, வாக்குகளைக் கேட்டது. பள்ளிவாசல்களை கோயில்களாக மாற்றுவோம் என்பதைத் தன் தேர்தல் அறிக்கையில் அறிவித்தது. இந்தத் தேர்தல் அறிக்கையை முன் வைத்து பாரதீய ஜனதாக கட்சியின் வேட்பாளர் வெற்றி பெறுகின்றார். அந்த வேட்பாளர்கள் பேராசிரியர் இராமச்சந்திரா காப்சி இவருடைய வெற்றி செல்லாது என மும்பை உயர்நீதிமன்றம் அறிவித்தது.

மதத்தின் பெயரால் வாக்குகளைக் கேட்டார். அதனால் Corrupt practice - இல் ஊழல் நடவடிக் கையில் ஈடுபட்டார். அதனால் அவரது தேர்தல் செல்லாது என அறிவித்த மும்பை உயர்நீதி மன்றத்திற்கு எதிராக, உச்ச நிதிமன்றம் சென்றார்.

உச்ச நீதிமன்றம் மிகவும் விசித்தரமான தீர்ப்பொன்றை வழங்கியது. அது ""A candidate connot be held responsible" for the contents of the election manfesto of his party ( the BJP-1996) SCC: 206.

இதன்பொருள் : ஒரு கட்சியின் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றவைக்கு அதன் வேட்பாளரை பொறுப்பாளியாக்கிட முடியாது (ஆதாரம்: உச்சநீதிமன்ற1996 ஆம் ஆண்டு தீர்ப்பு, வழக்கு எண். SCC 256. (Front Line : Feb 3, 2017 : The sad betrayal of the SC : by A.G. Noorani)

இப்படிச் சொல்லி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தள்ளுபடி செய்தது உச்ச நீதி மன்றம். இந்தத் தீர்ப்பை PUCL அறிக்கை ஒன்று. இப்படித் தலைப்பிட்டு அழைத்தது. Supreme Court Judgement a blow to Secular Democracy" 19th January 1996.

இதன்பொருள் : உச்ச நீதிமன்றத் தீர்ப்பு மதசார்பற்ற ஜனநாயகத்திற்கு பேரிடி.

## நமது தேர்தல் விதிகள் :

நம் நாட்டில் நடக்கும் தேர்தல்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் சட்டம் "மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951". இது 171 பிரிவுகளைக் கொண்டது. இதில் பகுதி (VI) 6–இல் அடங்கியுள்ள பிரிவுகள் 80–122 வரை உள்ளவை தேர்தல் சம்பந்தமாக எழும் வழக்குகள் பற்றியவை.

பிரிவு 80–ஏ மாநில உயர்நீதிமன்றங்கள் தேர்தல் சம்பந்தமாக வரும் வழக்குகளை விசாரிக்கலாம் என அதிகாரத்தை வழங்குகின்றது.

பிரிவு 116–ஏ, உயர்நீதி மன்றங்கள் வழங்கும் தீர்ப்புகளுக்கு எதிராக வரும் வழக்குகளை விசாரிக்கும் உரிமை உச்ச நீதிமன்றத்திற்கு உண்டு எனக் கூறுகின்றது.

பிரிவு 98, ஒரு தேர்தலை செல்லாது என அறிவிக்கும் உரிமையை நீதிமன்றங்களுக்கு வழங்குகின்றது.

பிரிவு 100 எந்தெந்த காரணங்களுக்காக ஒரு தேர்தலை செல்லத்தக்கது அல்ல, என அறிவிக்கலாம் எனக்கூறுகின்றது. இதில் பிரிவு–பி அதாவது (100–ஏ) இப்படிக் குறிப்பிடுகின்றது.

தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் அல்லது



ஜே.எஸ்.வர்மா

அவருடைய (ஏஜெண்ட்) முகவர் அல்லது அவருடைய வேறேதும் ஆதரவாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரின் சம்மதத்தோடு அல்லது அவருடைய ஏஜெண்ட் –இன் சம்மதத்தோடு ஊழல் நடவடிக்கைகளில் (Corrupt practice) ஈடுபட்டால் – அந்த வேட்பாளரைத் தேர்ந்தெடுத்தது செல்லாது என அறிவிக்கலாம் எனக் கூறு கின்றது.

பிரிவு–99, ஒரு வேட்பாளர் தேர்தலின் போது என்னென்ன தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்பதைப் பதிவு செய்ய வேண்டும் என்கின்றது.

பிரிவு–98 வேட்பாளர் ஊழல் நடவடிக்கைகளில் (Corrupt practice) ஈடுபட்டார் என்பது நிரூபிக்கப்பட்டது என்பதையும், எப்படி நிரூபிக்கப்பட்டது என்பதையும் பதிவு செய்ய வேண்டும் என நிபந்தனை விதிக்கின்றது.

அதேபோல் நீதிமன்றம் வழங்கும் உத்தரவில் யார், யார், தவறான செயல்களில் ஈடுபட்டார்கள் என்பதை பெயரோடு விரிவாகக் குறிப்பிட வேண்டும் என்கின்றது.

நாம் மேலே குறிப்பிட்ட வழக்குகளில் அதாவது மும்பை நீதிமன்றம் சிவசேனா மற்றும் பி.ஜே.பி.யின் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களை பதவி இழக்கச் செய்திடும்

போது பால்தாக்கரே, பிரமோத் மகாஜன், சாத்வீ ரீதாம்பரா போன்றவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டே தீர்ப்பு வழங்கி இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நமது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951 கட்சிகளில் இல்லாதவர்களும் இதுபோல் தவறான நடவடிக்கைகளில் அதாவது மதத்தின் பெயரால் வாக்கு கேட்கும் வேலையைச் செய்தால், அவர்களையும் அழைத்து விளக்கம் கேட்க வேண்டும். அவர்கள் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவும் அனுமதிக்க வேண்டும் என அவகாசம் வழங்குகின்றது.

பகுதி-7, பிரிவு-123 ஊழல் நடவடிக்கைகள் (Corrupt practice) என்பவை என்ன? என்பதை எடுத்துக் கூறுகின்றது.

அவை : துணை பிரிவு (3), மதத்தின் பெயரால் ஒருவருக்கு வாக்களியுங்கள் அல்லது ஒரு மதத்தைச் சார்ந்தவர்களுக்கு வாக்களிக்காதீர்கள் என ஒரு வேட்பாளரோ அவருடைய (ஏஜெண்டோ) முகவரோ அல்லது அவருடைய ஒப்புதலைப் பெற்ற ஒருவரோ பிரச்சாரம் செய்தால் அது ஊழலாகும். (Corrupt practice) ஆகும்.

அதேபோல் ஒருவருடைய இனம், ஜாதி, சமுதாயம் அல்லது மொழி ஆகியவற்றின் பெயரால் வாக்களியுங்கள் அல்லது வாக்களிக்காமலிருங்கள் எனக் கேட்பதும் ஊழலாகும். அதேபோல் மத அடையாளங்களைப் போட்டு வாக்குக் கேட்பதும் ஊழலாகும். இவற்றால் ஒரு வேட்பாளர் தனக்கு ஆதரவு கேட்பதும் அல்லது வேறொருவருக்கு ஆதரவு தரக்கூடாது எனப் பிரச்சாரம் செய்வதும் ஊழலாகும் என விவரிக்கின்றது.

ஆனால் தேர்தல் ஆணையம் ஒருவருக்கு வழங்கும் சின்னத்தை மத அடையாளச் சின்னம் எனக்கொள்ளக்கூடாது. (இந்தப் பிரிவு 1975 ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டது)

பிரிவு 3-ஏ, இந்தியக் குடிமக்களுக்கிடையே வெறுப்பையும், பகையும் உருவாக்குதல் அல்லது உருவாக்கும் முயற்சிகளை மேற்கொள்வது, பகைமையையும், பூசலையும் வளர்ப்பது, வளர்க்கும் முயற்சிகளை மேற்கொள்வது இவையெல்லாவற்றையும் கொண்டு வாக்குக் கேட்பது அல்லது இன்னொருவருக்கு கிடைக்கும் வாக்குகளைத் தடுக்க முயல்வது இவையெல்லாம் ஊழலாகும்.



அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்ட மாலேகான் குண்டு வெடிப்பில் குற்றம் சுமத்தப்பட்ட பெண் சன்னியாசித் தாகூர்

இவையெல்லாம் மதவாதம், வகுப்புவாதம் இவற்றை அரசியலிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளாகும்.

ஆனால் இன்று பிரதமராக இருக்கும் மோடி இவற்றையெல்லாம் - இந்த ஊழல்களையெல்லாம் செய்தவர், எல்லா இந்துக் கடவுள்களின் படத்தையும் போட்டு வாக்குகளைக் கேட்டார். ஆனால் தேர்தல் ஆணையம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நின்றது.

ஆக நீதித்துறை உட்பட அனைத்து அரசியல் அமைப்பு நிறுவனங்களும் சோரம் போய்விட்டன. பாசிசமே தலைதூக்கிற்று. இந்தியாவின் எதிர்காலம் இருண்ட காலமாகவே போய் விட்டது.

இதனை மீட்க மக்கள் அனைவரையும்

ஓரணியில் ஒன்றிணைத்து பெரும் முயற்சிகளை முஸ்லிம்கள் மேற்கொள்ள வேண்டும்.

## இந்தியா மதச்சார்பற்ற நாடல்ல...

# சர்வதேச சட்ட வல்லுநர்கள் அவையில் ஆய்வறிக்கை தாக்கல்

பேராசிரியர் : வி.எஸ். ரெஹ்கி அவர்கள் அமெரிக்காவில் நடந்த சர்வதேச சட்ட மாநாட்டில் இப்படிக் கூறினார்கள்.

“இந்தியா ஒரு பெரும் வீழ்ச்சியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது. இந்தக் காலக் கட்டத்தில் முன்னர் ஒத்துக்கொள்ளப்பட்ட மத சார்பற்றத் தன்மை என்ற கொள்கை ஒரு பெரும் மாற்றத்திற்கு ஆளாகியுள்ளது. சட்டமன்ற, நாடாளுமன்ற அவைகளுக்கு மக்கள் பிரதிநிதி களைத் தேர்ந்தெடுப்பதில், மதத்தை நுழைக் கக் கூடாது என்ற கொள்கை முற்றாகக் கை விடப்பட்டுவிட்டது”.

“நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலி லும், சில மாநில சட்ட சபைகளுக்கு நடந்த தேர்தல்களிலும் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுப்பதில் மதமே முக்கியப் பங்காற்றியது. இந்திய வாக்காளர்கள் இப்போது மதம், ஜாதி இவற்றின் அடிப்படையில் உள்ள கோஷங் களையே அதிகமாக கேட்டார்கள். இன்றளவும் அவர்கள் மதம், ஜாதி இவற்றின் பெயரால் இவ்வளவு அழுத்தந்தரும் முழக்கங்களைக் கேட்ட தில்லை. தேர்தல் போட்டிகள் மத சண்டைகள் – ஓடும் இரத்தம் என மாறிவிட்டன.

நாடு பிரிவதற்கு முன்னால் நடந்த மதக் கலவரங்களைவிட மோசமான மதக்கலவரங்கள் நடக்கின்றன. தேர்தல்களுக்குப் பீடிகையாக.

(இதனை உண்மைப்படுத்திடும் ஓர் ஆதாரம் : 1200 மதக் கலவரங்களை 5 ஆண்டுகளில் நடத்தி 325 சட்ட மன்ற இருக்கைகளை உத்திர பிர தேசத்தில் இந்துத்துவ பாசிஸ்ட்டுகள் பிடித்தனர்)

ஆக இந்தியாவை இன்னும் மதசார்பற்ற நாடு எனச் சொல்வதில் அர்த்தமில்லை. (Source : Religion, Politics and Law in Contemporay India

முடிவாக : இந்தியாவில் மத சார்பின்மை மண்மூடிப்போய் விட்டதால் இனி மத சார்பின் மையை பேசிடுவதில் பொருளில்லை – எனக் கூறினார்.

**முடிவுரை :**

இனி இந்தியாவின் பிரச்சனைகளுக்கு இஸ்லாம் தரும், தீர்வுகளை விளக்கிச் சொல்லி, இஸ்லாத்தின் பரிபாலத்தின் கீழ் மக்களை வாழ வைப்போம்.

அந்த ஆட்சியின் கீழ்தான் எல்லா மக்களும் நிம்மதியாக வாழ்ந்திட இயலும். உலகெங்கும் இதை நிலை நாட்டிய வரலாறு இஸ்லாத்திற்கு மட்டுமே உண்டு!

ஆக இஸ்லாமே மாற்று! மாற்றம்.

இன்ஷா அல்லாஹ்! எழுவோம் இந்தியாவை பாசிசத்தின் பிடியிலிருந்து மீட்போம்.

# இந்தியாவைக் காப்பாற்றிட எழுந்த முஸ்லிம்

அரசியல் நிர்ணயச் சட்டத்தையும், மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தையும் உச்ச நீதிமன்றம் வளைத்தது – குழப்பியது. புரியாத விளக்கங் களைத் தந்தது.

இந்தப் புரியாத விளக்கங்களைச் சொன்ன நீதிபதிகள், புரியும் படியாகத் தீர்ப்புகளை எழுதத் தெரியாதவர்கள் அல்ல. மாறாக நன்றாக எல்லோருக்கும் புரியும் படியாக எழுதத் தெரிந்தவர்கள்தாம்.

ஆனால் அவர்கள் “இந்துஇசம்” என்ற இந்துத்துவா –வை இந்த நாட்டில் கொண்டு வந்திட வேண்டும் என விரும்பினார்கள். அதனால் குழப்பினார்கள். அதனால் வெள்ளரிக் காயில் வெண்ணை தடவியதுபோல் தீர்ப்புகளை வழங்கினார்கள்.

இதிலிருந்து அதாவது, உச்ச நீதிமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதிலிருந்து இந்தியாவை மீட்க ஒரு முஸ்லிம் முன் வந்தார், அவர்தான் முஹம்மத் அஸ்லம்.

இவர் மார்ச்சு மாதம் 1996 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தொடர்ந்தார். அதில் 11, டிசம்பர் 1995 ஆம் ஆண்டு உச்ச நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு செல்லாது. ஏனெனில் அது நமது அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு

32–க்கு எதிரானது எனக்கூறி இருந்தார்.

இதனால் உச்ச நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை – அதாவது இந்துத்துவாவை நியாயப்படுத்திடும் தீர்ப்பை ரத்து செய்திட வேண்டும், எனக்கோரி இருந்தார். இந்த வழக்கின் தீர்ப்பு 22 மார்ச்சு 1996 ஆம் ஆண்டு வந்தது.

ஆனால் உச்ச நீதிமன்றம், தனது தீர்ப்பை அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 32–க்கு உட்பட்டதல்ல என்று கூறிவிட்டது. அதாவது அரசியல் நிர்ணயச் சட்டம் 32–ஐ கொண்டு எங்கள் தீர்ப்பை செல்லாது எனச் சொல்லிட முடியாது என்றார்கள்.

முஹம்மத் அஸ்லம் அவர்களின் வழக்கை தள்ளுபடி செய்திட இந்தக் காரணமேபோதும் என்றது, என்றாலும் "உச்ச நீதிமன்றம் தன் பொறுப்பில் சில விளக்கங்களைச் சொல்ல வேண்டும் என விரும்புகின்றது என்று கூறி சில விளக்கங்களையும் சொன்னார்கள்". அந்த விளக்கம் இன்னும் அதிகமாகவே குழப்பியது என்றாலும் வேறுபல வழிகளில் இந்துத்துவா – இந்துஇசம் பாசிசத்தின் பெயரால் வாக்கு கேட்பது இவற்றை நியாயப்படுத்தியது. கடைசியில் நீதிபதிகள் கூறிய சொற்கள் வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுவது போலிருந்தது.

அந்த வரிகள்

"If the Representation of the people's Act 1951. was deficient in curbing the trends of exploiting religious sentiments in search of electoral gain the court could do nothing about it. If is for the legislature to make up the deficiency by suitably amending the law.

இதன் பொருள் :

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951– ஆல் மதத்தின் பெயரால் ஓட்டுக்கேட்பதைத் தடுக்க முடியவில்லைஎன்றால்அதற்குநீதிமன்றம் பொறுப்பல்ல. சட்டமியற்றுபவர்கள் தான் அதைச்செய்திட வேண்டும்.இந்தத்தீர்ப்பையும்– நீதிபதி ஜெ.எஸ். வர்மாதான் எழுதி இருந்தார்.

இந்துத்துவா பாசிசத்தை நியாயப்படுத்திடும் வேகத்தில் அவர் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தையே (1951)யே தூக்கி வீசினார். தொடர்ந்து வந்த எதிர்ப்புகளால் மனமுடைந்த நீதிபதிகள் இந்த மொத்தப் பிரச்சனையையும் ஒரு முழு அரசியல் அமைப்பு பெஞ்சுக்கு மாற்றி Full Contitution Bench முழுமையாகவிசாரித்துத்தீர்ப்பு வழங்க வேண்டும் எனக்கூறினர் அன்று அதாவது 1996–இல்.

20 ஆண்டுகள் முடிந்துவிட்டன. இப்போது பிப்ரவரி 2017–ல் வழங்கியத் தீர்ப்பிலும் இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டது உச்ச நீதிமன்றம்.

மொத்தத்தில் இந்துத்துவ பாசிசம் ஆட்சியில் அமர்ந்து மொத்த நாட்டையும் துவம்சம் பண்ணிட வழிவிட்டு விட்டது.

–எம்.ஜி.எம்.

**இந்தக் கட்டுரையில் இடம் பெற்ற தகவல்கள் அனைத்தும் Religion and Law Review என்ற கட்டுரைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது. இந்த தொகுப்பு 316 பக்கங்களைக் கொண்டது. (ஆங்கிலம்) இதனை ஆங்கிலத்தில் படிக்க விரும்பும் வழக்கறிஞர்களும், பத்திரிகையாளர்களும் உண்மை நகலை உரிய கட்டணத்தைச் செலுத்தி "வைகறை வெளிச்சம்" அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**



# 16 ஆண்டுகளுக்குப்பின் 10 வெடிகுண்டு வழக்குகளில் விடுதலையான முஸ்லிம் இளைஞர்கள்

“என்னே அவமானம்? அவன் 11 (குண்டு வெடிப்புகளில்) 10 வழக்குகளில் விடுதலை ஆகிவிட்டான். மீதமுள்ள ஒரு வழக்கில் காவல் துறையினர் சாட்சியங்களைச் சமர்பிக்க மாட்டேன் என்கின்றார்கள். நமது காவல் துறையின் பிரச்சனை என்னவென்றால் மனிதர் களை சிறையில் வைத்து விடுகின்றார் கள். ஆனால் அவர்களுக்கு எதிராக எந்த சாட்சி யத்தையும் சமர்ப்பிப்பதில்லை”.

தலைமை நீதிபதி : ஜே.எஸ்.ஹேகர், நீதிபதி டி.வி.சந்திரசூட் ஆகியோர் எப்ரல் 25, 2017 அன்று உச்சநீதிமன்றத்தில் உச்சரித்த சொற்கள் இவை...

ஆமாம், 2001 ஆம் ஆணடு கைது செய்யப் பட்ட குல்ஸார் அஹ்மத் என்பவருக்கு பிணை வழங்கிட வேண்டும் என்ற மனுவை விசாரித்த நீதிபதிகள் தாம் இந்த வார்த்தைகளை உச்சரித்தார்கள்.

**குல்ஸார் அஹ்மதின் 16 ஆண்டுகால சிறை வாழ்க்கை...**

குல்ஸார் அஹ்மத், அலிகர் முஸ்லிம் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிப் படிப்பை பி.எச்.டி.–யை படித்துக் கொண்டிருந்தார். அவர் காஷ்மீரை சார்ந்தவர். அப்போது வயது 28.

ஒருநாள் விடுப்பில் ஊருக்குச் சென்று கொண்டிருந்தான். அப்போது அவன் ஓர் ரயில் நிலையத்தில் இறங்கி தண்ணீர் வாங்கச் சென்றான். இரண்டு சீருடை அணியாதவர்கள் அவனை மீண்டும் ரயிலில் ஏறவிடாமல் தடுத்தார்கள். இது 2001 ஜூலை 21ஆம் நாள் நடந்தது.

அவனை உத்திரப்பிரதேசத்தின் தலைநகர் லக்னேவ் கொண்டு சென்றார்கள். அங்கே அவனை சபர்மதி எக்ஸ்பிரஸ் ரெயிலில் குண்டு வைத்திட முயற்சி செய்து கொண்டிருக்கும்

போது கைது செய்ததாக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தார்கள். இதற்கு சாட்சியாக இரண்டு காவல் துறையினரைக் காட்டினார்கள்.

தொடர்ந்து 11 குண்டுவெடிப்புகளுக்கு அவன்தான் மூளை என குற்றப்பத்திரிகைகளைத் தாக்கல் செய்தார்கள்.

அத்தோடு நாடெங்கும் 56 முஸ்லிம்களைக் கைது செய்து சிறையிலடைத்தார்கள். அத்தனையும் பொய் வழக்குகள்.

குல்ஸார் அஹ்மத்–ஐ கீழ் நீதிமன்றங்கள் 10 குண்டு வெடிப்புகளில் குற்றமற்றவர் என விடுதலை செய்துவிட்டன.

11–ஆவது வழக்கில் காவல்துறை சாட்சியங்களைச் சமர்பிக்கவில்லை. அதனால் அந்த வழக்கில் அவரை கீழ் நீதிமன்றங்கள் அவரை விடுவிக்கவில்லை. இந்நிலையில் அவர் பிணை கேட்டு கீழ் நீதிமன்றங்களில் மனு போட்டார்.

10 குண்டு வெடிப்புகளில் அவர் விடுதலை ஆகிவிட்டதால் 11–ஆவது வழக்கிலும் அவர் விடுதலை ஆகிவிடுவார். அவர் தன் வாழ்வின் 16 அரிய ஆண்டுகளை சிறையில் கழித்து விட்டார். அவரை இப்போதாவது விடுதலை செய்திட வேண்டும் என அவருடைய வழக்கறிஞர் வாதித்தார்.

கீழ் நீதிமன்றங்களில் பிணையை மறுத்து விட்டதால் உச்ச நீதிமன்றத்தின் முதன்மை அமர்வு நீதிமன்றந்தான் மேலே நாம் சொன்ன சொற்களை சொன்னது.

முடிவாக, உச்ச நீதிமன்றம் இப்படிச் சொன்னது "அக்டோபர் 31, 2017–க்குள் கீழ் நீதிமன்றத்தில், காவல் துறையினர் குல்சார் மீதுள்ள 11வது வழக்கில் சாட்சியங்களை ஒப்படைக்க வில்லையென்றால் எதிர்வரும் நவம்பர் 1, 2017 அன்று குல்ஸார் அஹ்மத் பிணையில் வெளிவந்துவிடலாம்" என்றது

இதில் நீதிபதிகள் 10 குண்டு வெடிப்பு வழக்குகளில் ஒரு அப்பாவி முஸ்லிம்களைப் பொய்யாக இணைத்த காவல் துறையினர் மீது எந்தத் நடவடிக்கையையும் பரிந்துரைக்கவில்லை.

குல்ஸார் அஹ்மதுடன் குற்றம் சாட்டப் பெற்ற ஏனைய குற்றவாளிகளெல்லாம் வெளியே வந்துவிட்டார்கள். அந்த அப்பாவிகளையும் குண்டு வெடிப்புகளில் இணைத்த காவல்துறையினர் மீது எந்த நடவடிக்கையும் பரிந்துரைக்கவில்லை.

இந்த வகையில் நீதிமனறங்களின் தீர்ப்புகள், காவல்துறையினருக்கு முஸ்லிம்இளைஞர்கள் மீது பொய் வழக்குகளை ஜோடிக்க உற்சாகம் தருவதாகவே அமைகின்றன.

இந்தப் பொய் வழக்குகளை ஜோடித்த காவல்துறை அதிகாரிகள் பலர், ஓய்வு பெற்று சென்று விட்டார்கள்.

28ஆம் வயதில் சிறைக்குச் சென்ற குல்சார் அஹ்மத் 44ஆம் வயதில் தான், ஒருவேளை பிணையில் வருவார். இதேபோல்தான் இவரோடு கைது செய்யப்பட்ட இதர குற்றவாளிகளும் இவர்களின் குடும்பங்களும் சிதைந்து, சீரழிந்து போய்விட்டன. இது முஸ்லிம்களைக் கூண்டோடு ஒழிக்க இந்துத்துவ தீவிரவாதிகள் போட்ட திட்டங்களுள் ஒன்று.

**இப்போதைய வினா?**

**இந்த குண்டு வெடிப்புகளை நடத்தியது யார்? அவர்கள் நமது சங்கப் பரிவாரத்தினர்தான். இப்படி குண்டு வெடிப்புகளை நடத்தித்தான் அவர்கள் ஆட்சியைப் பிடித்தார்கள். பழியை சுமப்பதும், சிறையில் அடைந்து சீரழிவதும் முஸ்லிம்கள்.**

செய்தி ஆதாரம் : Tol : 26-4-2017, MG : 1-15, Sep 2011

**இந்த வழக்குகளை 16 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்திய சகோதரர் வழக்கறிஞர் ஹைதர் அப்பாஸ் – முஹம்மத் இர்ஷத் ஹபீப் ஆகியோருக்கு அல்லாஹ் நிரம்ப நற்கூலிகளைத் தந்திடுவானாக!**




# மோடியின் ஆட்சியில் தமிழக விவசாயிகள்?

ஒரு மாதத்திற்கும் குறையாமல் தமிழக விவசாயிகள் இந்திய தலைநகர் டெல்லியில் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றும்படி போராடினார்கள் ஆனால் எந்த அரசும் அவர்களின் போராட்டங்களை கண்டுகொள்ளவில்லை எப்படியாவது முடக்க வழி செய்தனர். ஆனால் மக்கள் மனதை வென்றனர் விவசாயிகள்.

**அவர்களது கோரிக்கைகள்!.**

மத்திய அரசு தமிழகத்திற்கு வறட்சி நிவாரணத்தை அதிகப்படுத்தி தர வேண்டும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடனை ரத்து செய்வது, காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பது, விவசாயிகளுக்கு பென்சன் வழங்குவது போன்ற முதன்மையான கோரிக்கைகளை முன்னிறுத்தி தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க தலைவர் அய்யாகண்ணு தலைமையில் பெண்கள் உட்பட 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் டெல்லியில் உள்ள ஜந்தர் மந்தரில் போராட்டத்தை நடத்தி வந்தனர்.

பல முறை மாநில அரசின் சார்பாக அமைச்சர்களும் மத்திய அரசின் அமைச்சர்களும் சந்தித்து சமாதானப்படுத்தி போராட்டத்தை கைவிடுமாறு கூறினார்கள். ஆனாலும் விவசாயிகள் தங்கள் கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டத்தை கைவிடப் போவதில்லை என்று போராட்டத்தை தொடர்ந்தனர்.

**யார் இந்த அய்யாகண்ணு!.**

இந்திய பிரதமரை தவிர ஒட்டுமொத்த இந்தியாவின் கவனத்தை தங்கள் பக்கம் திருப்பிய விவசாய போராட்டத்தின் தலைவரும் போராட்டத்தின் நாயகனுமான, பி. அய்யாகண்ணு திருச்சியை சேர்ந்தவர், 72 வயது முதியவர். விவசாயும் வக்கீலுமாவார். இப்போது தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு சங்கத் தலைவராக உள்ளார்.

இதுவரை தமிழகத்தில் விவசாயிகளுக்கு ஏதேனும் பிரச்சனை எனும்போது முன்னின்று போராட்டக்

களம் காண்பவர் அய்யா கண்ணு. திருச்சி சார்ந்த பகுதியில் கவன ஈர்ப்பு போராட்டத்திற்கு பெயர் போனவர். இன்று இந்தியா வின் கவனத்தை தன் பக்கம் ஈர்த்துள்ளார்.

**போராட்டத்திற்கான காரணங்கள்.**

சமீபத்தில் மட்டும் தமிழ கத்தில் 250 க்கும் மேற்பட்ட விவசாயிகள் வறட்சியின் காரணமாக தற்கொலை செய் துள்ளனர். தமிழகம் மாநில அளவில் வறட்சி மாநிலமாக வும் அறிவிக்கப்பட்டுள்ளது ஆனால் வறட்சி நிவாரணத் தொகையை தமிழகத்திற்கு போதிய அளவில் மத்திய அரசு வழங்கவில்லை.

தமிழக விவசாயத்திற்கு முக்கிய நீர் ஆதாரம் காவிரி நீர். இதனை உயர்நீதிமன்றமே தமிழகத்திற்கு நீர் திறந்து விட வேண்டும் என உத்தர விட்டும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க உத்தர விட்டும் மத்திய அரசு இன்னும் அமைக்கவில்லை கர்நாடக அரசு காவிரி நீரை பாய்ச்சவுமில்லை.

தொடர்ச்சியாக தமிழ கத்தின் மீது மத்திய அரசின் பார்வை விழவேயில்லை என்பதனால் டெல்லியில் போராட்டத்திற்கு முகாமிட் டனர் விவசாயிகள்.

சென்ற ஆண்டு அய்யா கண்ணு தலைமையில் ஒரு குழு தமிழகத்திலிருந்து டெல்லி சென்று அரசாங்கத்தை சந்தித்து பிரச்சனைகளை கூறி உறுதி பெற்று வந்தார்கள். ஆனால் சொன்னதை போல் எந்தவொரு முயற்சியும் மத்திய அரசு எடுக்கவில்லை என்பதாலும் மத்திய அரசின் மீதான நம்பிக்கையின்மை யாலும் விவசாயிகள் டெல் லியை முகாமிட்டனர்.

**விவசாயிகளின் கவன ஈர்ப்பு போராட்டம்!**

தமிழக விவசாயிகளின் ஒரு மாதக்காலமாக தொடர்ந்தே போராட்டத்தில் அரசின் கவனத்தை தன் பக்கம் திருப்ப பல சிரமங்களை எடுத்துக் கொண்டார்கள்.

எலிக்கறி, பாம்பு கறி, முயல் கறி சாப்பிடுவது! மீசை யையும் முடியையும் பாதி மழித்து போராட்டம், ஆண் களெல்லாம் சேலை உடுத்தி போராட்டம், தரையில் உருண்டு அங்கப்பிரதஸ்னம் செய்து போராட்டம், மோடி யின் கையால் சாட்டையடி வாங்குவது போன்ற சாட்டை யடி போராட்டம்!

உடம்பு முழுக்க விவசாயி களின் குறைகளை மையால் எழுதி போராட்டம், விவசாயி களின் தற்கொலைகளை உணர்த்த தூக்கு கயிறு கழுத்தில் ஏந்தி போராட்டம், விவசாயிகளின் மனைவிகள் விதவைகளாக்கப்படுவதை மத்திய அரசுக்கு உணர்த்த சேலை உடுத்தி தாலி அறுக் கும் போராட்டம், வீதிகளில் பிச்சை எடுத்து போராடுவது என நமக்கு சோறு போட்ட வர்கள் பலவிதமான போராட் டங்களை நடத்தியும்



நாட்டின் பிரதமரின் கவனம் மட்டும் இவர்கள் மீது விழவே இல்லை.

**விவசாயிகளின் பரிதாப நிலை!**

விவசாயிகளின் வருமா னத்தை பத்தாண்டுகளுக்கு ஒருமுறை தேசிய மாதிரி ஆய்வு ஆணையம் கணக் கிட்டு வருகிறது. அதனடிப் படையில் 2002-03ன் படி ஒரு விவசாயினுடைய குடும்ப வருமானம் 2,115 ரூபாய். 2012-13 கணக்கெடுப்பின் படி ஒரு விவசாய குடும்பத்தின் வருமானம் 6,425 ரூபாய். தங்களது வாழ்வாதாரத்தை பூர்த்தி செய்து கொள்ளும்

அளவுக்கு கூட இல்லாத வருமானம் தான் விவசாயிகள் பெறுகின்றனர் எனலாம்.

கடந்த 30 ஆண்டுகளில் விவசாயிகளின் வருமானம் 19 சதவீதம் உயர்ந்துள்ளது. அதே சமயம் இதே கால இடைவெளியில் அரசு ஊழியர்களின் சம்பளம் 370 சதவீதம் உயர்ந் துள்ளது. கார்ப்பரேட் ஊழியர்களின் சம்பளம் ஆயிரம் சதவீதம் உயர்ந்துள்ளது. ஆனால் விவசாயிகளுக்கான உரிமைகளில், வாழ்வாதா ரங்களில் இதுவரை ஆட்சியில் இருந்த எந்த ஆளும் அரசுகளும் கவனம் செலுத்தவில்லை. இன்றைய மத்திய பாஜக அரசும் ஒருபடி மேல்சென்று விவசாயிகளின் உரிமைப் போராட்டத்தை நாடகம் என்கிறார்கள்.

இந்தியாவில் உள்ள 70 சதவீதம் பேர் நேரடியாகவும் மறைமுகமாகவும் விவசாயம் அதை சார்ந்த தொழில் செய்பவர்களாகவே உள்ளார்கள். நேரடியாக விவசாயத்தில் ஈடு படும் விவசாயிகளில் முக்கால்வாசி பேர் கடன் வாங்கி சாகுபடி செய்பவர்கள். இன்றைய விவசாய நலிவுநிலையால் பல விவசாயிகள் கட்டுமானத் துறை நோக்கி நகரும் பரிதாபங் களும் பெருகியுள்ளது.

தமிழகத்தை பொறுத்தவரை நிலத்தடி நீர் உட்பட அனைத்தும் பெரும் வறட்சியை சந்தித்துள்ளது. பெரும்பாலான இடங்களில் 800 அடிகளுக்கு கீழ் தான் நிலத்தடி நீர் கிடைக் கிறது. ஒருமுறை போர் போடுவதற்கு ஆகும் செலவு லட்சத்திற்கும் மேல்! 1000 அடிகள் தோண்டிய பிறகும் தண்ணீர் கிடைக்காத பகுதிகளும் உண்டு. அண்ணா பல்கலைக்கழக அறிவிப்பின் படி, நிலத்தடி நீரை துல்லியமாக கணக்கிட முடியாது ரேண்டமாகத் (உத்தேசம்) தான் சொல்ல முடியும் என்கிறது. எல்லா நிலைகளிலும் வலுவிழந்து காணப்படுகிறது விவசாயமும் அதை சார்ந்தவர்களின் வாழ்வாதாரமும். (தி இந்து 14-04-17)

**விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவளித்தவர்கள்!**

விவசாயிகளின் போராட்டத்திற்கு ஜல்லிக் கட்டு போன்றதொரு மாபெரும் புரட்சி தமிழகத்தில் தோன்றிவிடக்கூடாது என்பதில் தமிழக அரசு மிகுந்த எச்சரிக்கையாக இருந்தது. தமிழகம் முழுவதும் ஆங்காங்கே கல்லூரி மாணவர்கள் சார்பாக போராட்டம் நடத்தப் பட்டது. ஆனால் அவர்கள் சில நிமிடங்களில் கைது செய்யப்பட்டனர். சென்னை கிண்டி கத்திபாரா பாலத்தில் இயக்குனர் கௌதமன் தலைமையில் நடத்தப்பட்ட மாணவ போராட்டம் கவனத்தை ஈர்த்தது.

கத்திபாரா பாலத்தின் இரு பகுதிகளையும் பூட்டு போட்டு கிட்டத்தட்ட 30 நிமிடங்கள் டெல்லியில் போராடும் விவசாயிகளுக்கு ஆதரவாக போராட்டம் நடைபெற்றது. போலி சார் சிறிது நேரத்திற்கு பிறகு போராட்டக் காரர்களை தூக்கி சென்று கைது செய்தனர்.

டெல்லியில் போராடும் தமிழக விவசாயி களுக்கு ஆதரவாக உ.பி, ஹரியானா, பஞ்சாப் மாநில விவசாயிகள் போராட்டத்தில் கலந்து கொண்டு தங்களது ஆதரவை தெரிவித்தனர்.

அரசியல் கட்சிகளின் சார்பாக காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தி உட்பட பல தலைவர்கள் போராட்டக்களத்திற்கு ஆதர வளித்தனர். தேசிய ஊடகங்கள் தொடங்கி தேசிய கட்சிகள் வரை எல்லோரிடத்திலும் தமிழக விவசாயிகளின் போராட்டம் கவனத்தை ஈர்த்தது நாட்டு பிரதமரை தவிர.

**விவசாயிகளுக்கு எதிரான மத்திய பாஜக அரசின் அலட்சியப் போக்கு!**

தமிழக விவசாயிகள் போராட தொடங்கி யதில் இருந்து தங்களது குரல் அரசாங்கத்திற்கு கேட்க பல்வேறு விதமாக தங்களது போராட் டத்தை கொண்டு சென்றனர். ஆனாலும் மத்திய அரசின் பார்வை இவர்கள் மீது பட வில்லை.

பாஜகவை சார்ந்த மத்திய அமைச்சர்கள் விவிசாயிகளை சந்தித்து போராட்டத்தை கைவிடக்கோரும் போது பிரதமர் எங்களை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினால் ஒழிய நாங்கள் போராட்டத்தை கைவிட மாட்டோம் என்று வெளிப்படையாகவே போராட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் அய்யாகண்ணு அறிவித் தார். ஆனாலும் பிரதமர் இறுதி வரை இதை பற்றி ஒருவார்த்தை கூட பேசவும் இல்லை.

போராட்டத்தின் போது அய்யாகண்ணு உள்ளிட்ட ஏழு விவசாயிகளை பிரதமர் மோடி யிடம் பேச வைப்பதாக அழைத்து சென்றனர். பிரதமர் அலுவலகத்திற்குள் சென்றதும் அங்குள்ள ஒரு செயலாளரிடம் தங்கள் கோரிக்கைகளை கூறிவிட்டு செல்லும் படி நிர்பந்திக்கப்பட்டதும் தங்களது அவல குரல் களை எப்படியாவது பிரதமருக்கு எட்டிட வேறு வழியில்லாமல் தங்கள் மானம் துறந்து அலுவலக வாசலில் நிர்வாணமாக நின்று போராட்ட கோஷங்களை எழுப்பினார்கள். ஆனாலும், மோடியின் காதுகள் இந்த கோஷங் கள் கேட்க முடியாத அளவுக்கு அடைக்கப் பட்டிருந்தது!

தமிழகத்தை சார்ந்த பாஜகவின் தேசிய ஊடக பிரிவுச் செயலாளர் எச்.ராஜா, அய்யாக் கண்ணு ஆடி கார் வைத்திருந்தார், போராடு வதை போன்று நாடகமாடுகிறார் என்று தனி மனித வன்மத்தை பதிவு செய்தார். அய்யாக் கண்ணு

இது சம்பந்தமாக பேசும் போது,

அப்படியெல்லாம் எதுவும் இல்லை. எனக்கு ஆடி கார் இருக்கிறது என நிரூபித் தால் தூக்கில் தொங்குகிறேன் என உணர்ச்சி மிக பேசினார். ஒரு விவசாயி ஆடி கார் வைத்திருந்தால் தான் என்ன குற்றம்? விவசாயி என்பவன் கோவணத்தை தவிர வேறு போடக்கூடாது என்பது போன்ற கீழ்தரமான எண்ணம் கொண்டவர்களை என்னவென்று சொல்வது?. இவர்களால் தான் விவசாயிகளின் உணர்வுகளை புரிந்து கொள்ள முடியுமா?..

**மோடியின் முகமூடி கிழிந்தது.**

மோடி தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது "காங்கிரஸ் அரசு தங்களது நிலங்களை அப கரித்து விடுமோ என்ற பயத்தில் விவசாயிகள் உள்ளனர்" என்று விவசாயிகளுக்கு எதிராக காங்கிரஸ் அரசு செயல்படுவதாக குற்றம் சாட்டினார்.

ஆனால், மோடி ஆட்சிக்கட்டிலில் அமர்ந்த தும் எதை செய்ய மாட்டோம் என்று வாக் குறுதி அளித்தாரோ அதற்கு நேர்மாறான விட யங்களை செய்ய தொடங்கினார். விவசாய நிலங்களை கையகப்படுத்தும் சட்டத்தை நடை முறைப்படுத்த பெரும்பாடு பட்டு பல அவசர சட்டங்களை இயற்றி தோல்வி அடைந்தது மோடி தலைமையிலான பாஜக அரசு.



2016ல் உத்திரபிரதேசத்தில் மோடி பேசும் போது

"2022ம் ஆண்டிற்குள் விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக மாற்றுவது தான் தனது கனவு என்றார்." அது புள்ளிவிவரங்கள் அடிப்படையில் நடைபெறாத ஒன்று என்றா லும் வெற்று வாக்குறுதிகளை கொடுக்கும் மோடி தனது அலுவலகத்தின் வெளியே தங்களது வாழ்வாதாரத்திற்காக போராடும் விவசாயிகளை சந்திக்க கூட நேரம் ஒதுக்க வில்லை. இதில் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவேன் என பொதுமேடைகளில் பேசுகிறார்!. தாகம் எடுத்தவனுக்கு தண்ணி கேட்டால் உங்களுக்கு கோக் தருகிறேன் என பாசாங்கு காட்டி ஏமாற்றுகிறார்.

**பாஜகவின் மோடி அரசுக்கு மக்கள் வைத்த கேள்விகள்!**

ஒரு மாதத்திற்கும் மேலாக விவசாயிகள் போராடினர். இந்த போராட்டம் தேசிய அளவில் முக்கியத்துவத்தை கொடுத்தும் பிரதமர் மோடியை சந்தித்து பேசாத வரை போராட்டம் தொடரும் என போராட்ட ஒருங்கிணைப்பாளர் அய்யாகண்ணு சொன்ன பிறகும்! மோடி அவர்களிடமிருந்து எந்த பதிலும் இல்லை!

தமிழகத்தில் போராட்டம் நிகழ்த்திய



மாணவர்களிடம் இதை பற்றி கேட்கும் போது,

"சிவராத்திரி அன்று தமிழகம் வந்து கோவை ஈஷா மையத்தில் ஆதிசிவன் சிலையை திறக்க நேரமிருக்கிறது, நடிகைகள் கவுதமி, கஜோல் போன்றவர்களை சந்திக்க நேரமிருக்கிறது, பாகுபலி தொடர்பான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள நேரமிருக்கிறது! ஆனால் தன் அலுவலக வாசலில் ஒரு மாதத்திற்கும் மேலாக தங்களது போராட்ட வழிமுறை மூலம் இந்தியாவையே திரும்பி பார்க்க செய்த விவசாயிகளை சந்திக்க நேரமில்லையா?." திரையில் தோன்றும் சினிமா பிரபலங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் கூட இந்நாட்டின் உணவு உற்பத்தி செய்யும் உழைப்பாளிகளுக்கு இல்லை!..

பாஜகவினர் தொடர்ச்சியாக கூறும் பொய்: இன்னும் ஆறு ஆண்டுகளில் விவசாயிகளின் வருமானம் இருமடங்காக்கப்படும் என்கின்றனர். மக்களை முட்டாளாக நினைத்து போலி வாக்குறுதிகளை வழங்கும் பாஜகவிடம் மக்கள் கேட்பதெல்லாம் "கடந்த 30 ஆண்டுகளில் ஒன்றுமே செய்யவில்லை இன்னும் ஆறு ஆண்டுகளில் விடிவு வந்துவிடும் என சொல்வதெல்லாம் அண்டப்புழுகு இல்லையா?. பாஜக ஆட்சிக்கு அமர்ந்த பின்னால் தான் தமிழகத்தில் கெயில், மீத்தேன், ஹைட்ரோகார்பன் என விவசாயத்திற்கு எதிரான அத்தனை திட்டமும் தமிழகம் நோக்கி வந்தது! விவசாயிகளையே இல்லாமல் ஆக்கிவிட்டு யார் வருமானத்தை இருமடங்காக மாற்றப்போகிறார் மோடி?."

ரூ.6 லட்சம் கோடி வங்கி கடன்களை வாராக்கடனாக அறிவித்தது மத்திய அரசு. இந்த கடனை பெற்றவர்களெல்லாம் பெரு முதலாளிகள்! இவர்களை பார்த்து யாராவது ஆடி கார் வைத்திருக்கின்றார்களா? எவ்வளவு வசதியானவர்கள் என யாராவது கேட்டதுண்டா? ஆனால் தனது வாழ்வாதாரத்திற்காக தன் உரிமைக்காக போராடும் விவசாயிகளை கீழ்தரமாக விமர்சிக்கும் போக்கு பாஜகவினரிடம் மட்டுமே காணப்படுகிறது!

நான் டீ விற்று வளர்ந்தவன் பகட்டான ஆடைகளை உடுத்தி வளர்ந்தவன் இல்லை என காங்கிரஸ் அரசை குற்றம் சாட்டி விட்டு ரூ.10 லட்சத்திற்கு கோட் போட்டு ஊர் சுற்றும் அரசியல்வாதிகள் எப்படி எவ்வித கூச்சமும் இல்லாமல் விவசாயிகளை பார்த்து அவர்களின் வசதிகள் பற்றி கேள்வி கேட்க முடிகிறது?

பாஜகவினர் சிலர் ஏன் டெல்லியில் போராடுகிறார்கள் இங்கே சொந்த ஊரில் போராட வேண்டியது தானே என நக்கலாக கேட்கின்றனர்! அவர்களுக்கு, "மொத்த அதிகாரத்தையும் டெல்லியில் வைத்து விட்டு ஊரில் போராடி என்னவாகப்போகிறது! முதலில் இக்கேள்வி கேட்பதற்கு முன் முடிவெடுக்கும் அதிகாரத்தை மாநில அரசிற்கு சட்டபூர்வமாக வழங்குங்கள் பிறகு தமிழகத்தில் போராடி எங்கள் உரிமையை நாங்கள் பெற்றுக் கொள்கிறோம்" என மக்கள் புறத்தில் இருந்து பதில் வந்தது.

**போராட்டம் வாபஸ்!**

ஏப்ரல் 20ம் தேதி போராட்ட ஒருங்கிணைப்பாளர் அய்யாகண்ணு அவர்கள் தங்களது போராட்டத்தை இரண்டு நாளைக்கு மட்டும் வாபஸ் செய்துள்ளார். ஏப்.22ம் தேதி மத்திய அரசிடம் இருந்து உறுதிமொழி கிடைக்காத பட்சத்தில் தங்கள் போராட்டம் தொடரும் என்றும் கூறியுள்ளார்.

விவசாயிகளுக்கு எதிராகவே தொடந்து சிந்தித்தும் செயல்பட்டும் வரும் மத்திய பாஜக அரசு இந்த விவசாயிகளின் போராட்டத்திற்கு பின்னராவது அவர்களது கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். சோறு போட்டவர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமையது. அதை செய்யாத போது மக்கள் மனதிலிருந்து தூக்கியெறியப்படுவார்கள் விரைவில்.

-அபூ. சித்திக்

# மூன்று எதிரிகளில் முதன்மை எதிரி யார்?

எது முதலில்?

**பெருமானார் (ஸல்) அவர்களின் வழிமுறைகளை விரித்துரைக்கும் அறிஞர் இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்கள் 'ஜிஹாத்' இன் பதிமூன்று படித்தரங்களைக் கூறுகிறார்.**

ஆத்மாவுடன் போராடுவதில் நான்கு படித்தரங்கள், ஷைத்தானுடன் போராடுவதில் இரண்டு படித்தரங்கள், அநியாயக்காரர்கள், நவீன வழிபாட்டுக்காரர்கள், தீயவர்கள் ஆகியோருக்கு எதிராக போராடுவதில் மூன்று படித்தரங்கள் இறை மறுப்பாளர்களுடன் போராடுவதில் நான்கு படித்தரங்கள் மொத்தம் பதிமூன்று படித்தரங்கள்.

உள்ளத்தால், நாவால், செல்வத்தால் செய்யும் ஜிஹாதும் இதில் அடங்கும்.

மேலும் இப்னுல் கய்யிம் (ரஹ்) கூறுகின்றார் : கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் உண்மையைப் பேசுவது மிகச் சிறந்த ஜிஹாத். எதைப்பேசினால் இன்னலும் இடுக்கண்களும் இடையறாது வரும் என்று அஞ்சப்படுமோ அதை அஞ்சாமல் எடுத்துரைப்பது சிறந்த ஜிஹாத்.


இவ்வாறான ஜிஹாதில் இறைத்தூதர்கள் சளைக்காமல் முன்னேறுகின்றார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இதை நிறைவாகவும் முழுமையாகவும் செய்தார்கள் என்கிறார் இப்னுல் கய்யிம் (ரஹ்)

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள் : ''இறை வழிபாட்டில் (ஈடுபட மறுக்கும்) தன் மனதுடன் போராடுபவரே போராளியாவார். அல்லாஹ் தடை செய்தவற்றை வெறுத்து ஒதுக்குபவரே தியாகியாவார்'' (அறிவிப்பாளர் : ஃபழாலாபின் உபைர் (ரழி) நூல் : அஹ்மது)

எதிரிகளுடன் களத்தில் மோதுவதும் ஓர் இறை வழிபாடுதான். இதர வணக்க வழிபாடுகள் போல. எனவே தீய ஆன்மாவுக்கு எதிராகப் போராடுவதன் ஒரு பிரிவுதான் களத்தில் நிற்கும் எதிரியுடன் யுத்தம் செய்வது, தீய ஆத்மா வணக்க வழிபாடுகளில் ஈடுபட விரும்பாது, எதிரியுடன் ஜிஹாத் செய்யவும் முன் வராது.

ஆக, களத்தில் எதிரியுடன் மோதுவதை விடவும் முதன்மையானது ஆத்மாவுடன் போராடுவதே, அதுமட்டுமல்ல, ஆத்மாவுடனான போராட்டம்தான் எதிரியுடனான போராட்டத்தின் அசல்.

தன் ஆத்மாவுடன் போராட இயலாதவன் எப்படி எதிரியுடன் போராட முடியும்?



இமாம் யூசுப் அல்கர்லாவி

தனக்குள்ளேயே தன்னை அடக்கியாளும் எதிரியை வைத்துக்கொண்டிருப்பவன் வெளியிலுள்ள எதிரியை வீழ்த்த முடியுமா?.

இவ்விரண்டு எதிரிகளுடனும் ஜிஹாத் செய்யும்படி கட்டளையிட்டு அல்லாஹ் தன் அடியானைச் சோதிக்கிறான்.

மூன்றாவது ஓர் எதிரியும் உண்டு. அவனை வீழ்த்தாமல் இவ்விரண்டு எதிரிகளையும் வீழ்த்த முடியாது. அவனுடன் மோதுவது இவ்விருவருடனும் மோதுவதற்கு அடிப்படையாகிறது. ஏனெனில் அவன்தான் இவ்விருவருடனும் மோத விடாமல் தடுப்பான். கோழையாக்குவான், ஏமாற்றுவான், பயங்காட்டுவான். இவ்விருவருடனும் ஜிஹாத் செய்தால்

கடும் விளைவுகள் ஏற்படும் என மிரட்டுவான். அபிலாஷைகளை அடைய முடியாது என்பான். உலக சுகங்களை இழக்க நேரிடும் என்பான்.

எனவே இவனை வீழ்த்தாமல் அவ்விரு எதிரிகளையும் வீழ்த்த முடியாது. அவன் யார் தெரியுமா?

அவன்தான் ஷைத்தான்.

இதோ அல்லாஹ் கூறுகிறான் : நிச்சயமாக ஷைத்தான் உங்களின் எதிரியே! அவனை நீங்கள் எதிரியாகவே கருதுங்கள். (35 :6)

அவனை எதிரியாகவே கருத வேண்டும் என்பதில் ஓர் எச்சரிக்கை இருக்கிறது. அவனை வீழ்த்திடவும் அவனோடு மோதிடவும் தயங்கக் கூடாது. அதில் முனைப்புடன் இருக்க வேண்டும். ஏனெனில் அவன் சோர்வின்றி உழைப்பவன், அடியார்களின் எண்ணிக்கை எவ்வளவு அதிகரித்தாலும் அவன் வேலை குறையாது என்பதே அந்த எச்சரிக்கை.

இந்த மூன்று எதிரிகளுடனும் இவ்வுலக வாழ்வில் மோத வேண்டும், சண்டையிட வேண்டும் என்று தன் அடியார்களுக்கு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்.

இது அடியார்களுக்கு அல்லாஹ் உலகில் வைத்துள்ள பரீட்சை, சோதனை. யார் அல்லாஹ்வையும் அவனின் திருத்தூதரையும் நேசித்து அவர்களின் வழியில் செல்கிறார்கள், யார் ஷைத்தானை நேசித்து அவன் வழியில் போகிறார்கள் என்று அல்லாஹ் சோதிக்கிறான்.

தனக்கு அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்ச வேண்டும் என்று அல்லாஹ் கூறுகிறானல்லவா? அதுபோல தனக்காக முறைப்படி ஜிஹாத் செய்ய வேண்டும் என்றும் கூறுகிறான்.

முறைப்படி அஞ்ச வேண்டும் என்றால் அவனுக்குக்கட்டுப்பட வேண்டும். மாறு செய்யக் கூடாது. அவனை நினைத்துக் கொண்டே இருக்க வேண்டும். மறக்கக் கூடாது, அவனுக்கு நன்றிச் செலுத்த வேண்டும். நன்றிக் கெட்டத்தனமாக நடக்கக் கூடாது என்று பொருள்.

முறைப்படி ஜிஹாத் செய்ய வேண்டும் என்றால் ஒரு அடியான் தனது உள்ளம், நாக்கு, உறுப்புக்கள் அனைத்தையும் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட வைக்க வேண்டும். இதற்காக அவர் தன் ஆத்மாவுடன் ஜிஹாத் செய்ய வேண்டும்.

தனக்கென தனி ஆசை ஏதுமற்று வாழ்பவராக அல்லாஹ்வுக்காக வாழ்பவராக அல்லாஹ் கூறியபடியே தன்னை இயக்குபவராக அவர் இருக்க வேண்டும்.

ஷைத்தானுடன் அவர் ஜிஹாத் செய்ய வேண்டும். அவன் தரும் வாக்குறுதிகளை நம்பாமல் அவனுக்கு கட்டுப்படாமல் அவன் செய்யக்கூடாது என்று தடுப்பவற்றைச் செய்து வாழ வேண்டும்.

ஏனெனில் அவன் தரும் வாக்குறுதிகள் வெற்றுக் கற்பனை, அவன் ஏமாற்றுக்காரன் “தர்மம் கொடுக்காதே, வறுமை வருமென்பான், மானக்கேடான அருவருப்பான செயல்களை செய்யத் தூண்டுவான்.

இறையச்சம், நேர்வழி, தன்மானம், பொறுமை முதலிய ஈமானின் நற்குணங்களில் ஒன்றைக்கூட கடைப்பிடித்துவிடாதபடி தடுப்பான். எதற்கும் பிடிகொடுக்காமல் அவனிடமிருந்து தள்ளியே நிற்க வேண்டும்.



ஆத்மா, ஷைத்தான் இவ்விரண்டு எதிரிகளுடனும் ஜிஹாத் செய்வதால் ஒரு பலம் கிடைக்கும். ஒரு ஆற்றல், வலிமை கிடைக்கும். இதைக்கண்டு களத்தில் ஆயுதம் ஏந்திப் போராட வரும் எதிரியை எதிர்கொள்ள வேண்டும்.

இந்த எதிரி எப்படிப்பட்ட ஆயுதங்களுடன் வந்தாலும் சரியே. செல்வம், உள்ளம், நாக்கு, கை என எந்த ஆயுதம் எதிரியுடன் இருந்தாலும் அல்லாஹ்வின் வாக்கை மேலோங்கச் செய்வதற்காக அவனுக்கு எதிராக ஜிஹாத் செய்ய வேண்டும்.

அறிஞர் இப்னுல் கய்யிம் (ரஹ்) கூறுகிறார் : மேலே தரப்பட்டவற்றை நீங்கள் புரிந்து கொண்டால் உங்களுக்கு இன்னொன்றையும் கூறுகிறேன்.

**ஜிஹாத் நான்கு படித்தரங்கள் உண்டு.**

**1) ஆத்மாவுடன் போராடுவது,**

**2) ஷைத்தானுடன் போராடுவது,**

**3) இறை மறுப்பாளர்களுடன் போராடுவது,**

**4) நயவஞ்சகர்களுடன் போராடுவது.**

ஆத்மாவுடன் போராடுவது நான்கு படித்தரங்கள் உண்டு.

அ) நேர்வழியை போதிக்க முயல்வது, மேலும் ஒருவன் இவ்வுலக வாழ்விலும் மறுமை வாழ்விலும் ஈடேற்றம் பெற்றிடத் தேவையான சத்திய மார்க்கத்தை அந்த ஆத்மாவுக்குப் பயிற்றுவிக்க வேண்டும். எப்போது ஒருவன் நேர்வழி தவறுகிறானோ அப்போதே அவன் ஈருலகத் தோல்விக்கு ஆளாகிறான்.

ஆ) நேர்வழி எதுவென்று அறிந்தபின் அதைச் செயல்படுத்திட அந்த ஆத்மாவுடன் போராட வேண்டும். ஏனென்றால் செயல்பாடு இல்லாமல் வெறும் கல்வி மட்டும் இருந்து என்ன பயன்? அதனால்தான் ஒன்றும் இடையூறு இல்லை என்றாலும் கூட பலனும் இல்லாமலிருக்கிறதே!

இ) தாம் பெற்ற நேர்வழியை நோக்கி மற்றவர்களை அழைப்பதற்கு போராட வேண்டும். அறியாதவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். இதைச் செய்யாவிட்டால் கற்ற கல்வியால் பயனேது? இது அல்லாஹ் இறக்கியருளிய நேர்வழியையும் தெள்ளத் தெளிவான சான்றுகளையும் மறைப்பதாகிவிடுமே! இவ்வாறு மறைப்பதே தண்டனைக்குரிய குற்றமல்லவா?

ஈ) இவ்வாறான பிரச்சாரப் பணியில் அழைப்புப் பணியில் ஈடுபடும்போது அதில் ஏற்படும் இன்னல்களைத் தாங்கிக் கொள்ள வேண்டும். மக்கள் தரும் தொல்லைகளை அல்லாஹ்வுக்காக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இதை ஆத்மா ஒப்புக்கொள்ளத் தயங்கும் போது அதனுடன் போராடி ஒப்புக்கொள்ள வைப்பது ஜிஹாத்.

இந்த நான்கு படித்தரங்களிலும் ஒருவர் முழுமை பெற்றுவிட்டால் அவர் ரப்பானிய்யீன் எனப்படும் இறைவனைச் சார்ந்தோரில் ஒருவராகிவிடுவார்.

ஒரு மார்க்க அறிஞர் அவர் அறிஞராக இருப்பதால் மட்டுமே 'ரப்பானீ'யாகி விட முடியாது. சத்தியத்தை அறிந்து அதன்படி செயல்பட்டு, பிறர்க்கும் அதைக் கற்பித்தால் மட்டுமே அவர் 'ரப்பானீ'யாக முடியும்.

இவர்தான் வானங்களின் அரசாட்சியில் மகத்தான மாமனிதராக அழைக்கப்படுவார். அடுத்து ஷைத்தானுடன் செய்யும் ஜிஹாத். இதற்கு இரண்டு படித்தரங்கள் உண்டு.

அ) மனிதனிடம் ஷைத்தான் ஏற்படுத்தும் ஐயங்கள், ஈமானில் அவன் உருவாக்கும் சந்தேகங்கள் ஆகியவற்றை விரட்டுவது.

முந்தையதை உறுதி எனும் ஆயுதத்தால் வீழ்த்த வேண்டும். இரண்டாவதை பொறுமை எனும் ஆயுதத்தால் முறியடிக்க வேண்டும்.

இதோ அல்லாஹ் கூறுகிறான் : அவர்கள் பொறுமையுடனிருந்து நம் வசனங்களை உறுதியாக நம்பி ஏற்றுக்கொண்டபோது நம் கட்டளைப்படி நேர்வழி காட்டும் தலைவர்களை அவர்களில் ஏற்படுத்தினோம். *(32:24)*

இவ்வசனம் நமக்குக் கூறுவதென்ன? திடமான உறுதியும், பொறுமையும் உள்ளவரே மார்க்கத் தலைமைக்குத் தகுதியானவர் என்பதுதானே!

ஆம்! தீய அகத்தூண்டல்களையும் ஆசையூட்டல்களையும் பொறுமை வீழ்த்திவிடும், ஐயங்களையும் குழப்பங்களையும் திடமான உறுதி விரட்டி விடும்.

அடுத்து, இறை மறுப்பாளர்களுடன் செய்யும்

ஜிஹாத். நயவஞ்சகர்களுடன் செய்யும் ஜிஹாத். இவை ஒவ்வொன்றும் நான்கு படித்தரங்கள் கொண்டவை.

**1) உள்ளத்தால் வெறுப்பது,**
**2) நாவால் சான்றுகள் மூலம் அழைப்பது திருந்தச் செய்வது,**
**3) செல்வத்தை இதற்காக செலவு செய்வது,**
**4) கரத்தால் (பலப்பிரயோகத்தால்) தடுப்பது.**

இதில் இறை மறுப்பாளர்களுக்கு எதிரான ஜிஹாதில் கரம் (பலப்பிரயோகம்) பயன்படும். நயவஞ்சகர்களுக்கு எதிரான ஜிஹாதில் நாவு (சான்றுகள் மூலம் திருத்துதல்) பயன்படும்.

அடுத்து, அநியாயக்காரர்கள் தீயவர்கள், நூதன (பித்அத்) வழிபாட்டுக்காரர்களுக்கு எதிரான ஜிஹாத் மூன்று படித்தரங்கள் கொண்டது.

1) வாய்ப்பிருந்தால், சக்தியிருந்தால் பலப் பிரயோகம் செய்ய வேண்டும். 2) அதற்கு இயலாதபோது நாவைப் பயன்படுத்த வேண்டும். (பிரச்சாரத்தின் மூலம் திருந்தச் செய்ய வேண்டும்) 3) அதற்கும் இயலாதபோது மன தால் அதை வெறுக்க வேண்டும்.

இவ்வாறு ஜிஹாதுக்கு பதிமூன்று படித்தரங்கள் உண்டு என்கிறார் அறிஞர் இப்னுல் கய்யிம் (ரஹ்) (நூல் : ஸாதுல்மஆத்)

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள் : போராடா மலும் போராட வேண்டுமென்ற எண்ணமில்லா மலும் ஒருவன் இருந்தால் அவன் நயவஞ்சகத்தின் ஒரு கிளையிலேயே இறந்திருக்கிறான் (அறிவிப் பாளர் : அபூஹுரைரா (ரழி) (நூல்: முஸ்லிம்)

மேலே கூறப்பட்டுள்ள ஜிஹாதின் பதிமூன்று படித்தரங்களில் முதல் ஆறு படித்தரங்கள் (ஆத்மாவுடன் ஜிஹாத் ஷைத்தானுடன் ஜிஹாத் ஆகியவற்றின் படித்தரங்கள்) சமுதாய உருவாக்கம் பற்றிக் கூறப்படும் இவ்விடத்திற்குத் தேவையானவை.

ஏன்?

ஜிஹாதை விட தர்பியா ஏன் முதலிடம் பெறு கிறது என்பதற்கு சில நுட்பமான காரணங்கள் உண்டு, அவற்றை இப்போது கூறப்போ கிறேன்.

1) இஸ்லாத்தின் பார்வையில் ஜிஹாத் என்பது எப்படி வேண்டுமானாலும் யுத்தம் செய்யலாம் என்பதல்ல.

மாறாக குறிப்பிட்டதொரு லட்சியத்துக்காக தூய எண்ணத்துடன் செய்யப்படுவதே ஜிஹாத். அல்லாஹ்வின் பாதையில் செய்யப்பட வேண்டும் அது.

அண்ணல் நபி (ஸல்) விடம் "ஒருவர் இன வெறியை நிலை நாட்டப் போராடுகிறார், இன்னொருவர் தமது வீரத்தைப் பறைசாற்றும் கொள்கைகாகப் போராடுகிறார். இன்னொருவர் கனிமத் எனும் போர்ச் செல்வங்களை அடைந் திடப் போராடுகிறார். இவர்களில் யார் அல்லாஹ் வின் பாதையில் போராடுகிறார்?" என்று கேட்கப் பட்டபோது "யார் அல்லாஹ்வின் வாக்கை மேலோங்கச் செய்வதற்காக போராடுகிறாரோ அவரே அல்லாஹ்வின் பாதையில் போராடிய வராவார்" என்று பதிலளித்தார்கள். (அறிவிப் பாளர் : அபூமூஸா (ரழி) நூல் : புகாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, நஸயீ, இப்னுமாஜா, அஹ்மது)

இப்படி உலகக் காரணங்கள் எதனாலும் உந்தப்படாமல் தூய நோக்கத்தில் ஜிஹாத் செய்யும் உணர்வு 'சும்மா வந்துவிடாது' அதற் கொரு நீண்ட பயிற்சி இருக்க வேண்டும்.

யார் அல்லாஹ்வுக்காக செயல்படுகின்ற ஈரோ, யாரை அல்லாஹ் தனது மார்க்க பணிக் காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டானோ அவரே இப்படிப்பட்ட தூய லட்சியவாதியாக இருக்க முடியும். எனவே 'தர்பியா'வே முதன்மையானது.

2) இவ்வுலகில் ஒரு முஸ்லிம் எதிர்கொள் கின்ற ஜிஹாதின் லட்சியமும் அதன் பலனும் என்ன? அல்லாஹ்வின் சட்டங்களைச் செயல் படுத்தும் ஓர் அரசை அமைப்பதும் அல்லாஹ்வின் உதவியுடன் அந்த அரசை நடத்திச் செல்வதும் தான்.

இது, ஆளும் தகுதியை தன்னில் வளர்த்துக் கொண்ட, ஆட்சியாளர்களின் கடமைகளை செவ்வனே செய்கின்ற உண்மையான இறை நம்பிக்கையாளரின் கரத்தினால்தான் சாத்தியம்.

இதோ அல்லாஹ் கூறுவதைப் பாருங்கள் ; அல்லாஹ்வுக்கு (மார்க்கத்துக்கு) யார் உதவி செய்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் நிச்சயமாக உதவி செய்வான். அல்லாஹ் வலிமைமிக்கவன்,

மிகைத்தவன். இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் நாம் பூமியில் இவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கினால் தொழுகையை நிலை நாட்டுவார்கள். ஸகாத் (தர்மம்) வழங்குவார்கள், நன்மையை ஏவி தீமையைத் தடுப்பார்கள். *(22:40, 41)*

மேலும் அல்லாஹ் கூறுகிறான் : உங்களில் யார் இறை நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிந்து கொண்டிருக்கின்றார்களோ அவர்களை, இவர்களுக்கு முன்னிருந்தோரை பூமியில் ஆட்சி யாளர் களாக்கியதுபோல பூமியில் ஆட்சியாளர் களாக நிச்சயமாக ஆக்கிவைப்பதாகவும் அவன் அவர்களுக்கு பூரண திருப்தியுடன் வழங்கியுள்ள மார்க்கத்தில் அவர்களை நிலைப்படுத்தி வைப்ப தாகவும் அவர்கள் அச்சத்துடனிருந்த நிலையை மாற்றி அமைதியளிப்பதாகவும் அல்லாஹ் வாக்குறுதி அளித்துள்ளான். அவர்கள் எனக்கு எதையும் இணையாக்காமல் என்னை (மட்டுமே) வணங்குவார்கள். *(24:55)*

ஆக, 'தர்பியா'வின் மூலம் பண்படுத்தப் படாதவர்கள் ஆட்சியதிகாரத்துக்கு வந்தால் அவர்களால் ஏற்படும் நன்மைகளை விட தீமைகளும் சீர்கேடுகளுமே அதிகமாகும்.


எனவே ஜிஹாதைவிட முதன்மையானது தர்பியாதான்.

அல்லாஹ் தனக்கென ஒரு நியதியை வைத்திருக்கின்றான். ஆட்சியதிகாரத்தை யாருக்கும் அவன் எளிதாகத் தந்துவிடுவதில்லை.

சோதனை எனும் உலைக் களத்தில் போட்டு உருக்கி எடுக்கிறான். சிரமங்களையும் இன்னல்களையும் தந்து அவர்களைத் தூய்மைப்படுத்துகிறான்.

அவர்களின் இதயத்திலிருக்கும் தீய பண்பு களை அகற்றவும் நற்பண்புகளை வெளிக் கொண்டு வரவும், நல்லவன் யார்? கெட்டவன் யார் என்று தெளித்து எடுக்கவும் அல்லாஹ் கடைப்பிடிக்கும் வழி இது.

இது 'தர்பியா'வின் மற்றொரு வகை. செயலால் பண்படுத்துவது எனும் வகை. இறைத்தூதர்கள் பெருமளவில் இப்படிப்பட்ட சோதனைகளுக்கு ஆளாகியுள்ளனர். அல்லாஹ்வின் மார்க்கத்துக்கு மக்களை அழைக்கும் பணிக்கு தம்மை அர்ப் பணித்துக் கொண்டவர்களும் சோதனைகளைச்



சந்தித்துள்ளனர்.


இமாம் ஷாஃபீ (ரஹ்) விடம் "ஒரு முஃமீனுக்கு எது நல்லது? அவர் சோதனைகளுக்குள்ளாக் கப்படுவதா? ஆட்சியதிகாரம் வழங்கப்படுவதா? என்று கேட்கப்பட்டபோது "சோதனைகளைச் சந்தித்த பிறகுதானே ஆட்சியதிகாரம் கிடைக் கும்! இறைத்தூதர் யூசுப் நபியை அல்லாஹ் சோதித்தான், பின்னர் அவர்களுக்கு ஆட்சியதி காரத்தை வழங்கினான்" என்று பதிலளித்தார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான் : இப்படித்தான் தாம் விரும்பியபடி செயலாற்ற யூசுபுக்கு நாம் பூமியில் அதிகார வாய்ப்பை வழங்கினோம். இவ்வாறே நாம் நாடுவோருக்கு அருள் கிடைத்திடச் செய்கிறோம். நன்மை செய்வோரின் நற்கூலியை நாம் வீணாக்க மாட்டோம். *(12:56)*

ஆட்சி அதிகாரத்தை எவ்வித சிரமமுமின்றி எளிதாகப் பெற்றவர்கள் இலகுவாக அதை அடைந்தவர்கள் அதை வீணாக்கிவிடக் கூடும். அதன் பலன்களை முழுமையாகப் பயன்படுத்திட மாட்டார்கள்.

அதே நேரத்தில் உயிர், பொருள், சுக வாழ்வு அனைத்தையும் அர்ப்பணித்து சிரமங்கள், இழப்புக்கள் உடல்நல பாதிப்புக்கள் அனைத்தை யும் கடந்து அல்லாஹ்வின் உதவியை இறுதி யாகப்பெற்று அதிகாரத்தைப்பிடிப்போர் அப்படி நடந்து கொள்ள மாட்டார்கள்.

எனவே ஜிஹாதை விட முதன்மையானது தர்பியாதான்.



அபுல்ஹசன் அலீ நத்வீ

# ஐரோப்பிய இனவெறி மதமும் அதன் அங்கங்களும்

**இந்த (இனதுவேஷ)ப் பாதையில் இரண்டாவது காலடி எட்டு எப்படி இருந்தது தெரியுமா?**

ஐரோப்பாவிலிருந்து பிரதேசங்களும் இனங்களும் அவை சிறியனவோ பெரியனவோ தனித்தனி உலகங்களாக இருந்தன. நதிகள் மலைகள் என இயற்கையாக அமைந்த எல்லைகள் அல்லது அரசியல் விளைவுகளால் காலனியாதிக்கத்தால் ஏற்பட்ட எல்லைகள் என ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் எல்லைகள் இருந்தன.

ஒவ்வொரு பிரதேசமும் தன் எல்லைக்கு வெளியே இருந்த இன்னொரு பிரதேசத்தைப் பற்றி ஏதுமறியாமலிருந்தது. இன்னொரு பிரதேசத்தில் மனிதன் இருக்கிறானா இல்லையா என்று கூட நினைக்கவில்லை. தம் எல்லைக்கு அப்பால் வாழ்வோரை அறிந்திருக்கவில்லை. அவர்களை மதிக்கவுமில்லை.

ஒவ்வோர் இனமும் தம் இனப்பற்றே கடவுள் எனக் கருதிற்று. ஒரு மதத்தை நம்பும் மனிதன் அதைப் பெருமைப்படுத்துவான் அதையே புனிதம் என்பான் அதற்காக தியாகங்களை செய்வான். பிற மதத்தினரின் உதிரங்களையும் உடல்களையும் செல்வங்களையும் நகரங்களையும் அழிப்பான். போர் செய்வான். தம் வாழ்வையும் மரணத்தையும் அதற்காக அர்ப்பணிப்பான். இதேபோல் ஐரோப்பியர்கள் தமது இனவெறியை ஒரு மதமெனக் கருதி அவ்வனைத்தையும் அதற்காகச் செய்தனர்.

இந்த இனவெறி எனும் மதம் இரண்டு உள்ளடக்கங்களைக் கொண்டிருந்தது. ஒன்று நேர்மறை, மற்றொன்று எதிர்மறை.

நேர்மறை உள்ளடக்கம் : (நம்முடைய) இந்த இனமே அனைத்திலும் மேலானது, சிறந்தது. (இதில் கடவுள் நம்பிக்கையுள்ள சமுதாயம் என்றால் கடவுளின் பெயரையும் தேவைக்கு ஏற்ப இதில் தெரிந்து கொள்வார்கள்) கடவுள் இதைவிடச் சிறந்த, மேலான, உயர்வான, தூய, வலிமையான, ஆளத்தகுதியான, தலைமைக்குரிய, இதர சமுதாயங்களை ஆள வேண்டிய இன்னொரு இனத்தைப் படைக்கவில்லை. இந்த இனம்தான் உலகத்தைக் கவனித்துக் கொள்ள படைக்கப்பட்டிருக்கிறது.

இந்த இனம்தான் பூமியின் காவலன், பொறுப்பாளன், வழிகாட்டி. இந்த இனம் வாழும் நிலங்களே நேசத்துக்குரியவை. இதைவிடச் சிறந்த நகரங்களையோ இதைவிடத் தூய மண்ணையோ கடவுள் படைக்கவே இல்லை என்ற எண்ணமோ, நம்பிக்கையோ நேர்மறை உள்ளடக்கம்.

இதை நம்பாதவர்களை தமது நகரங்களில் வாழ விடுவதில்லை. இந்த இனவெறி எனும் மதம் பண்டைய கால ஐரோப்பாவில்தான் இந்த நிலை என்றில்லை. நிகழ்கால ஐரோப்பிய சமூகமும் அதன் நாடுகளும் இந்த இனவெறி எனும் மதத்தை கடைப்பிடிக்கத் தயங்க வில்லை.

சில வெளிப்படையாகவும் வேறுசில மறை முகமாகவும் கடைப்பிடிக்கின்றன. சில நாடுகள் அதைச் சொல்லிலும் செயலிலும் காட்டு கின்றன. வேறு சில நாடுகள் சொல்வதில்லை. ஆனால் செய்து விடுகின்றன.

ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள் இனவெறி எனும் வித்து ஒரு நிலத்தில் ஊன்றப்பட்டு விட்டால் விடு விடுவென வளர்ந்து, வேர் விட்டு, இலை பரப்பி விரைவில் பெரு மரமாகி தம் இனத்துக்கு நிழல் தரத் தொடங்கி விடு கின்றது.

அது மாத்திரமென்று அளவுக்கதிகமாக மதுக் குடித்தவன் மதிமயங்காமலிருக்க முடியுமா? உளறாமலிருப்பது சாத்தியமா? இல்லையல்லவா? அதேபோல்தான் இன வெறிக் கோட்பாட்டின் மீது நம்பிக்கை வைத்துவிட்ட சமுதாயம் பிற சமுதாயங்களை அழிக்கும். அவர்களைப் பழிக்கும். எல்லை மீறும் எவருக்கும் அநீதி செய்யும். அத்துமீறும், இதெல்லாம் நடக்காமலிருக்கச் சாத்திய மில்லை.

ஒரு கவிஞர் அருமையாகப் பாடினார்

**அவன் கை, கால்களைக் கட்டிக்**
**கடலில் எறிந்தான்.**
**கவனம், கவனம் நீரில் நனைந்து**
**விடாதே என்றும் கூறினான்.**

இனவெறி என்பது சாதாரணமாக இருந்தாலே இப்படி இருக்கும்.

அறிவும், இலக்கியமும் கவிதையும் தத்து வமும் வரலாறும் இயற்பியல் கலைகளும் இந்த இனவெறியை குலப் பெருமையை பாரம்பரிய இறுமாப்பை முற்கால ஆணவத்தை ஊட்டி வளர்த்தால் எப்படி இருக்கும்!

இப்படி உருவாக்கப்பட்ட இனவெறியை எந்த நற்பண்பால் தடுக்க முடியும்? எந்த மதம் இதை ஒழிக்க முடியும்? இன வெறியை மட்டுமே தமது லட்சியமாகவும், இலக்காக வும் கொண்டவர்கள் மக்களை வழி நடத்த வந்தால் எதனால் அல்லது யாரால் இன வெறியை வீழ்த்தி அழிக்க முடியும்? எவராலும் முடியாதல்லவா?

அடுத்து இனவெறி எனும் மதத்தின் எதிர்மறை உள்ளடக்கத்தைப் பார்ப்போம்...

அச்சம் வெறுப்பு, இன வெறிக்கு மிக முக்கியமானவை. ஓர் இனத்திடம் இனவெறி நிலைத்திருக்கவும் வெளிப்படவும் வேண்டு மானால் (இன்னொரு இனத்தின் மீது அதற்கு) அச்சமும் வெறுப்பும் இருக்க வேண்டும்.

எனவே இனவாதத் தலைவர்கள் தூண்டி விட்டுக்கொண்டே இருப்பார்கள். வெறி தனியாமல் பார்த்துக் கொள்வார்கள். (எதிர் இனத்தின் மீது) வெறுப்பையும் அச்சத்தையும் ஊட்டிக் கொண்டே இருப்பார்கள். இவ்விரண்டு உணர்வுகளும் இல்லாவிட்டால் இன வெறி மோகம் கலைந்து போய்விடும். இனவாத வெள்ளம் வற்றிப் போய்விடும்.


பேராசிரியர் ஜோடு அவர்கள் இதை உளவியல் பார்வையுடன் விளக்குகிறார்...

'எல்லா உணர்வுகளின் கலவைதான் மனிதன். இந்த உணர்வுகளின் கூட்டத்தில் மிக எளிதாகத் தூண்டிவிடக் குடியவையாக இருப்பவை அச்சம், வெறுப்பு ஆகிய இரண்டும், பெண்ணம் பெரும் பேரழிவுகள் இவற்றால் ஏற்பட்டிருக்கின்றன'

'அன்பு, ஈகை, கருணை, தயாளம் ஆகிய நற்பண்புகளைக் கிளர்ந்தெழச் செய்வதுதான் கடினமானது. பயத்தையும் வெறுப்பையும் விரைவாக ஏற்படுத்தி விடலாம்''.

''எனவேதான் ஓர் இனத்தை ஏதேனுமொரு நோக்கத்துக்காக ஆள விரும்புவோர் அவ்வினம் அஞ்சுகின்ற வெறுக்கின்ற இன்னொரு இன த்தைக் காட்டுகின்றனர்''.

''பூமியில் வாழும் எல்லா இனங்களையும் ஓரணியில் திரட்ட வேண்டும் என்று நான்



ஆனால் இப்படி ஓர் எதிரியை நாம் உருவாக்கவோ கற்பிதம் செய்யவோ தேவையில்லை. சந்திரன், செவ்வாய் போன்ற கிரகங்களிலிருந்து அவனை வர வைக்கவும் வேண்டியதில்லை. இத்துணை பெரும் தூரத்திலிருந்து எப்படி கொண்டு வருவது!

நம்முடைய சன் மார்க்கம் கூறும் உண்மை என்னவென்றால் ஆதம் நபியின் பிள்ளைகளான மனிதனுக்கு ஓர் எதிரி இருக்கிறான். அவனை எதிர்ப்பதும் அவனை வீழ்த்திட ஒருவர் மற்றவருக்கு ஒத்துழைப்பதும் அனைவர் மீதும் கடமை.

இதோ திருக்குர்ஆன் கூறுகிறது : "நிச்சயமாக ஷைத்தான் உங்களின் எதிரியே. அவனை எதிரியாகவே கருதி செயல்படுங்கள். தன் அணியினரை அவன் நரகவாசிகளாக்கிடவே அழைக்கிறான் (35:6)

இன்னும் கூறுகிறது : ஓரிறை நம்பிக்கையுள்ளவர்களே! இஸ்லாத்தில் பூரணமாக நுழைந்துவிடுங்கள் ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்கு தெளிவான எதிரி (2:208)

மனித உலகத்தை இஸ்லாம் இரு அணியாக மட்டுமே பிரிக்கிறது. அல்லாஹ்வின் நேசர்கள், ஷைத்தானின் நேசர்கள், உண்மையின் உதவியாளர்கள், பொய்யின் உதவியாளர்கள் சண்டை, யுத்தம் என்பதெல்லாம் இந்த ஷைத்தானின் உதவியாளர்கள், பொய்யின் உதவியாளர்கள் ஆகியோருக்கு எதிராக மட்டுமே. அவர்கள் எங்கிருப்பினும் சதியாளராக இருப்பினும் சரி.

இதோ அல்லாஹ் கூறுகிறான் : இறை நம்பிக்கைகொண்டோர் அல்லாஹ்வின் பாதையில் போரிடுகின்றனர். இறை மறுப்பாளர்கள் தீய சக்தி (தாகூத்) களின் பாதையில் போரிடு

விரும்பினால் இவர்கள் அஞ்சிட வேண்டிய ஓர் எதிரி சந்திரன் போன்ற வேற்றுக் கிரகத்திலாவது இருக்கிறான் என்று நான் காட்டியாக வேண்டும்".

"இக்காலத்திலுள்ள இனவாத அரசுகள் தம் அண்டை நாடுகளுடன் நடந்து கொள்ளும் விதத்தைப் பாருங்கள். பயம், வெறுப்பு, இவற்றினடிப்படையில்தான் நடக்கின்றன. இந்த உணர்வுகளின் அடிப்படையில்தான் ஆள்பவர்கள் வாழ்கிறார்கள். இதே உணர்வுகளின் அடிப்படையில்தான் இன ஒற்றுமையும் வலிமை பெறுகிறது. (Source : Guide to MOdern wickednewss P.150)

### இஸ்லாத்தின் தீர்வு என்ன?

சமுதாயங்களுக்கு இடையேயான சிக்கல்கள், போர்அபாயங்கள், இனமோதல்கள் ஆகியவற்றுக்கு பேராசிரியர் ஜோடு அவர்கள் முன் வைத்திடும் தீர்வு நேர்மையானது அறிவுப் பூர்வமானது.

மக்களிடையே நிலவும் பகைமை, சமூகங்களிடையே உலாவும் பகை, வெறுப்பு ஆகியன அகல வேண்டுமானால் அவர்களுக்கு ஒரு புது எதிரி வர வேண்டும். அந்த எதிரியை எதிர்க்க அவனுக்கு அஞ்ச, அவனுடன் மோத அனைவரும் ஒன்றிணைந்து விடுவர். இதுவே அவர் கூறும் தீர்வு.

கின்றனர். ஷைத்தானின் நேசர்களுடன் சண்டை யிடுங்கள். நிச்சயமாக ஷைத்தானின் சூழ்ச்சி பலஹீனமானது. (4:76)

இந்த அடிப்படையில் நடந்த போர்களால் பெரும் நன்மைகள் விளைந்தன. குருதிகள் குறை வாக சிந்தின, உயிரிழப்புக்கள் கொஞ்சமே ஆயின. இப்போர்களால் மனித இனத்துக்கே ஏராளமான பொது நலன்கள் கிடைத்தன. வனப்பும், வளமும் வாய்த்தன இப்பேர் பட்ட நன்மைகளைத் தந்த போர்களை வரலாறு கண்டன.

ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் தொடங்கி ஒன்பதாம் ஆண்டுவரை நீடித்த போர்கள், மோதல்கள், சண்டைகள் இரு தரப்பிலும் சேர்த்து ஏற்பட்ட மொத்த உயிரிழப்பு ஆயிரத்து பதினெட்டைத் தாண்டவில்லை. முஸ்லிம் களில் இருநூற்று ஐம்பத்து ஒன்பது பேர். முஸ்லிமல்லாதோரில் எழுநூற்று ஐம்பத்து ஒன்பது பேர் என்ற அளவோடு நின்றுவிட்டன உயிரிழப்புக்கள்.

ஆனால் கி.பி. 1914–1918 வரை (நான்கு வருடங்கள் மட்டுமே) நடந்த முதலாம் உலகப் போரில் காயப்பட்டவர்கள் எண்ணிக்கை சரியான கணக்குப்படி இரண்டு கோடியே பத்து லட்சம். கொல்லப்பட்டவர்கள் எழுபது லட்சம் பேர்.

கி.பி. 1939–ல் தொடங்கிய இரண்டாம் உலக மகாப் போரில் ஐந்து கோடி பேர் காயப் பட்டனர் என்கிறார் இங்கிலாந்து நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர் Maxtion அவர்கள். முதலாம் உலகப் போருக்கு ஏற்பட்ட மொத்தச் செலவு முப்பத்து ஏழு மில்லியன் பவுண்ட் (37,000,000,000 பவுண்ட்) அதாவது கொல்லப் பட்ட ஒவ்வோர் உயிருக்கும் செலவிடப்பட்ட தொகை பத்தாயிரம் பவுண்ட். இரண்டாம் உலகப் போரில் ஒரு மணி நேரத்துக்கு ஒரு மில்லியன் பவுண்ட் (பத்து லட்சம் பவுண்ட்) செலவிடப்பட்டதாகச் சொல்கிறார் Maxtion (1943 ஜனவரி 31 தேதி தி இந்து நாளிதழில் H. Tawansend எழுதியுள்ள கட்டுரையில் மேலதிக விபரங்கள் உள்ளன)

இங்கிலாந்து நாட்டின் அப்போதைய பிரதமரும் உலக மகா யுத்த கதாநாயகருமான Mr. Luwaid George சொல்கிறார் :

“நம் எஜமான் ஜீஸஸ் அவர்கள் உலகத் துக்கு திரும்பி வந்தால் நெடுநாள் வாழ்ந்திட முடியாது. அவரால் இரண்டாயிரம் ஆண்டு களுக்குப் பின்னரும் மனித இனம் தன் சொந்த இனத்தையே கொன்று குவித்து அழித்து, அடித்துப் பறித்து சீரழிக்கும் காட்சிகளையும் அதில் சுகமடைவதையும் அவர் பார்த்திருப் பார்”

“அது மட்டுமா? வரலாறு கண்ட மகா யுத்தங்கள் மனித உடலின் குருதியை மிச்சம் வைக்காமல் உறிஞ்சப்படுவதையும் அதனால் மக்கள் பசியால் வாடுவதையும் கண்டிருப்பார்”

“மனிதா ! ஜீஸஸ் ஈஸா எதைக் கண்டிருப் பார்? சொல் பார்க்கலாம்! மக்களெல்லாம் சகோதரர்களாக, நண்பர்களாக கை கொடுத்துக் குலவும் காட்சிகளையா அவரால் பார்க்க முடியும்! ஏற்கனவே நடந்த போர்களைவிடவும் படு பயங்கரமான கொடூரமான போர்களுக்கு மக்கள் தயாராகிக் கொண்டிருக்கும் காட்சி யையும் சகமனிதனைவிதவிதமாய்ச்சித்ரவதைச் செய்திடவும் சாகடித்திடவும் உண்மையான பேரழிவு ஆயுதங்களைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கும் காட்சிகளையும் தான் அவர் கண்டிருப்பார்”

இவ்வாறு கூறியுள்ளார் இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் Mr. Lywaid George

இப்படி ஒவ்வொரு இனமும் பிரிதொரு இனத்துடன் மோதுவது பகையை வளர்ப்பது அதற்குக் காரணமான இனவாதம், இனத்து வேஷம் இவையெல்லாம் மனிதனை அவனின் உண்மையான எதிரியிடமிருந்து திசை திருப்பி மறக்கச் செய்து விட்டது. தின்று அழித்திட எதுவும் கிடைக்காவிடில் நெருப்பு தன்னைத் தானே தின்று கொள்ளுமாம். அதேபோலத் தான் இந்த இனவெறியும்.

அரபுக் கவிஞர் ஒருவர்
இப்படிப் பாடினார்...

## “நம் சகோதர இனமான பக்ரு இனத்தையே நாம் சில வேளை அழிப்போம். எதிரிகள் என யாரும் கிடைக்காத போது”

ஓர் இனம் தன்னுடைய உண்மையான எதிரி யார்? அவனால் தமக்கு என்ன ஆபத்து? அவனின் பலமென்ன, அதன் விளைவு என்ன என்றெல்லாம் தெரிந்து கொண்டால்தான் வீண் பகை, சுய நலம், வஞ்சகம், தேவையற்ற போட்டி, போலியான பகை ஆகியவற்றைத் துறந்து மெய்யான எதிரியை வீழ்த்திட முன்வரும்.

“ரோஷம் வந்துவிட்டால் அது எதிரியை அழித்திட நேரம் காலம் பார்த்துக் காத்திருப் பதில்லை” என்றொரு அரேபியப் பழமொழி உண்டு.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இறைத் தூதை கைஏற்றம் பெற்ற பொழுது அரபுலகின் இனக்குழுக்கள் முட்டி மோதி உதிரம் சிந்திக் கொண்டிருந்தன. மதீனாவில் அவ்ஸ், கஸ்ரஜ் ஆகியனவும் தீபகற்பப் பகுதியில் அதனான் கஹ்தான் ஆகியனவும் உலகின் பல்வேறு பகுதியில் பல்வேறு இனங்களும் மோதிக் கொண்டிருந்தன.

அவை அனைத்தையும் ஒரே கனமாக இறை மறுப்புக்கும் அஞ்ஞானத்துக்கும் எதிராகப் போரிடும் ஒரே இராணுவமாக ஆக்கிக் காட்டினார்கள்.

இந்த இனங்கள் எதிர்க்க வேண்டியதும், வெறுக்க வேண்டியதும் இன்னொரு இனத்தை அல்ல. பாத்தில் எனும் அசத்தியம். தாகூத் எனும் தீய சக்தி. அவற்றின் காவலர்கள் உதவியாளர்கள் ஆகியோரே எதிர்க்கவும் வெறுக்கவும் பட வேண்டியவர்கள் என்று வழிகாட்டி அவற்றுக்கு எதிரான போரில் எல்லா இனத்தவர்களையும் ஈடுபடுத்தினார்கள்.

“இறை நம்பிக்கையுள்ளோர் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவார்கள். இறை மறுப்பாளர்கள் ஷைத்தானின் பாதையில் போரிடுவார்கள். எனவே நீங்கள் ஷைத்தானின் நேசர்களுக்கு எதிராக சண்டையிடுங்கள். நிச்சயமாக ஷைத்தானின் சூழ்ச்சி பலஹீனமானதே” (4:76) என்ற இறைமறையின் இவ்வசனத்தை ஓதிக் காட்டினார்கள்.

இதனால் அரபு இனங்கள் தம் உட்பகை, உட்பூசல் இவற்றை மறந்தன. உண்மையான எதிரியுடன் மோதின, வெற்றி கண்டன.

மெய்யான எதிரியிடமிருந்து திசை மாறி அவனின் பகையைக் கண்டு கொள்ளாமல் அவனுடன் மோதாமலிருந்த காலம் வரை பழைய உட்பகை எட்டிப் பார்க்கவில்லை.

அதை மறந்த போது பழைய பகைவந்தது. சகோதர யுத்தங்கள் வந்தன. வரலாறு கண்ட பெரும் குழப்பங்களும் வந்தன.

– தொடரும்.

– தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

அன்பு கோல்டு

ANBU GOLD

SINCE : 1966

நகைகள் மீட்க / விற்க, அதிக பணம் பெற!

உடன் பணம்

தொடர்புக்கு

9600848215

8667261343

# இரகசியம் நிறைந்த கட்டிடவியல் தொழில்நுட்பம்

பழங்கால எகிப்தியர்களால் கட்டப்பட்டவற்றில் அதி முக்கியமான படைப்பு பிரமிடுகள். அது இன்றளவும் பார்வையாளர்களை தன் பக்கம் கவர்ந்து இழுக்கின்றது. ஹெரோடோட்டஸ் (Herodotus) காலத்திலிருந்தே வரலாற்று ஆசிரியர்களும், தொல்இயல் நிபுணர்களும் பிரமிடுகள் எவ்வாறு கட்டப்பட்டன என்பதற்கு பலவிதமான கருத்துகளை கூறியுள்ளனர்.

சிலர் இக்கட்டிடப் பணியில் அடிமைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக கூறுகின்றனர். சரிவுப் பாதைகளை (Ramp Technique) எழுப்பி பிரமிடின் மேல்தளம் வரை உருவாக்கியிருக்கலாம் என்றும் கூறுகின்றனர்.

ஒருவேளை அடிமைகள் பயன்படுத்தப்பட்டிருந்தால், அவர்களின் எண்ணிக்கை 2,40,000 வரை இருந்திருக்கும்.

ஒருவேளை ரேம்ப் டெக்னிக் பயன்படுத்தப்பட்டிருந்தால், பிரமிடுகள் கட்டி முடிந்தபின் அந்த சாய்தள பாதையை அப்புறப்படுத்துவதற்கு எட்டு வருடங்கள் எடுத்துக் கொண்டிருக்கும், டானிஸ் நாட்டை சார்ந்த கட்டுமானப் பொறியாளர் Garde-Hanson இதை ஒரு நகைப்பிற்குரிய கோட்பாடு என்றார். ஏனெனில் சாய்தள பாதையை நீக்கிய பின், ராட்சத பாளங்கள் மீதமிருக்கும். இதற்கான சான்றும் சுற்று வட்டாரங்களில் காணக்கிடைக்கவில்லை.


முஸ்தபா கதல்லா தன்னுடைய Historical Deception: The Untold Story of Ancient Egypt என்ற புத்தகத்தில் பின்வருமாறு கூறுகிறார்

“நீங்கள் பிரமிடை பார்வையிட சென்றால், பிரமிப்பை ஏற்படுத்தும் இந்த தகவல்களை கண்முன் கொண்டு வாருங்கள்.

4000 சுரங்க தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு 330 தூண்கள் வீதம் வருடம் முழுவதும் உருவாக்குகின்றனர். வெள்ளப்பெருக்கு நேரத்தின் போதும், 4000 தூண்களை நைல் நதிக்கு கொண்டு வந்து அதை கடந்து கிசா என்ற மேட்டு நிலத்தை அடைய வேண்டும். நிமிடத்திற்கு 6.67 தூண்கள் வீதம் வந்தடைய வேண்டும்.

கற்பனை செய்து பாருங்கள் 60 நொடியில் 6.67 தூண்கள்”

ஒவ்வொரு பிரமிடின் பரப்பளவும் 5.5 ஏக்கர் என்பதை மனதில் வைத்துக்



கொள்ளுங்கள். ஒவ்வொரு பரப்பள விற்கும் 115,000 வெளிப்புற கற்கள் தேவை. இந்த கற்களை மிகவும் நுணுக் கத்துடன் காகிதம் பொருந்தும் அளவில் இடைவெளி விட்டு அருகருகே வைக்க வேண்டும்.



பிரமிடு கட்டுமானத்தில் உள்ள இரகசியங்கள் 21 ஆம் நூற்றாண்டிலும் தெளிவாக விளக்கப்பட வில்லை என்பதை மேலே கூறப்பட்ட மறுப்பிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

ஒருவர் மறுபடியும் பிரமிடை கட்ட விரும்பினால்:

1978 இல் சுண்ணாம்புக் கல் தயாரிப்பின் உலகின் முன்னணி நிறுவனமான, இந்தியான லைம்ஸ்டோன் இன்ஸ்டிட்யூட் ஆப் அமெரிக்கா, கிஷா பிரமிடை போல கட்டுவதற்கு எவ்வளவு மனிதவளமும், எந்த வகையான மூலக்கூறுகளும் தேவைப்படும் என ஓர் ஆய்வை செய்தது.

இந்த நிறுவனத்தினுடைய அதிகாரிகள், இதை கட்டுவதில் உள்ள சிரமங்களை விளக்கினர். தற்போது தயாரிக்கப்படும் சுண்ணாம்புக் கல்லின் உற்பத்தி, அவற்றை வெட்டி எடுத்தல், நிர்மாணித்தல், கப்பலில் ஏற்றுதல் இவை அனைத்தையும் மூன்று மடங்காக உயர்த்தியும் 27 ஆண்டுகள் ஆகும் என கூறினர். நவீன அமெரிக்க தொழில் நுட்பத்தை பயன்படுத்தியே இந்த வேலை களும் செய்யப்படும். அதாவது திரவ பொருள் களின் சக்தியை கொண்டு இயக்கப்படும் சுத்தியல், மின் சக்தியை கொண்டு இயங்கும் ரம்பங்களும் பயன்படுத்தப்படும். பிரமிடு கட்டுவதற்கான ஆய்வுக் கூட சோதனை மற்றும் இதர முன்னேற்பாடுகளை தவிர்த்து சுண்ணாம்புக் கல்லை தோண்டி எடுத்தல் மற்றும் போக்குவரத்து மாற்றத்திற்கும் மட்டும் அதிக அளவிலான முயற்சிகள் தேவைப்படுகின்றன.

இப்படியிருக்க எவ்வாறு மிகப் பெரிய பிரமிடுகளை பழங்கால எகிப்தியர்கள் எழுப்பினார்கள்?

எந்த இயந்திரத்தின் சக்தியை பயன்படுத் தினார்கள்? எந்த தொழில் நுட்பத்தினை கொண்டு மேல் தளத்தை அமைத்தார்கள். எவ்வாறு குகை கல்லறைகள் வடிவமைக்கப் பட்டன? கட்டுமானத்தின் போது எவ்வாறு வெளிச்சம் கொடுக்கப்பட்டது? (பிரமிடு, கல்லறையின் உள்ளே எந்தவிதமான கறை களும், புகைக்கரியால் ஏற்படும் சுவடுகளும் அங்குள்ள சுவர்களிலோ கூரையிலோ காணப் படவில்லை)

எவ்வாறு சுரங்கத்திலிருந்து கற்கள் வெட்டி எடுக்கப்பட்டன? கரடு முரடான கற்களை எவ்வாறு கரடு முரடு அற்றதாக ஆக்கினார்கள். பல டன் எடை கொண்ட கற்களை எவ்வாறு தூக்கி வந்தார்கள். 1/1000 சென்டிமீட்டர் அளவு இடைவெளியில் துல்லியமாக எவ்வாறு அவைப் பொருத்தப் பட்டன?

இதைப் போன்ற எண்ணற்ற கேள்வி களுக்கு, பரினாமவியலாளர்கள் கூறும் மனித இன வரலாற்றில் விடை கிடைக்குமா? நிச்சயமாக இல்லை.

கலை, மருத்துவம், கலாச்சாரம் இவற்றில் பழங்கால எகிப்தியர்கள் மிகப் பெரிய நாகரீகத்தை உருவாக்கியுள்ளனர். அவர்கள்

விட்டு சென்ற ஆக்கங்கள், மருத்துவ சிகிச்சைகள் மற்றும் ஒருமித்த அறிவுத்திறன்கள், அனுபவங்கள் இவை அனைத்துமே முக்கியமான சான்று. இன்று சில அறிவியலாளர்கள் எகிப்தியர்கள் உருவாக்கிய ஆக்கங்களை வேற்று கிரக வாசிகளால் உருவாக்கப்பட்டது என்கிறார்கள். ஆனால் இதற்கு தகுந்த விளக்கத்தை அவர்களால் தர இயலவில்லை. தங்களது பரிணாம தத்துவத்தால் இதை விளக்க முடியாது என்பதால் வேற்று கிரக வாசிகள் இதை உருவாக்கினர் என்ற கருத்தினுள் ஒழிந்து கொள்கின்றனர்.

உயிர் வாழ்கையின் அடித்தளமான உயிரணுக் கருவில் காணப்படும் டி.என்.எ மூலக்கூறுகளின் மிக சிக்கலான, நூதன கட்டமைப்பை புரிந்து கொண்ட பின், அவர்களுக்கு இந்த கருத்து உதித்துள்ளது.

வேற்று கிரகத்தில் இருந்து வந்தவர்கள், பூமிக்கு முதன் முதலாக ஜீவராசிகளை கொண்டு வந்து விட்டு சென்றனர் என்ற கூற்று நகைப்புக்குரியது.

பகுத்தறிவும், மனத்திட்பமும் கொண்ட மக்களால் உருவாக்கப்பட்டதே பழங்கால எகிப்தில் காணப்பட்ட நாகரீகமும், வரலாற்றில் நமக்கு கிடைத்த மற்ற நாகரீகங்களும். 3000 BCE இல் உருவாக்கப்பட்ட கலை வேலைப்பாடுகளை கண்டு நாம் ஆச்சர்யப் படுகிறோம். இவை எவ்வாறு உருவாக்கப் பட்டன என்பதை பற்றி அறிவியலாளர்களும் வல்லுநர்களும் இன்றும் விவாதம் புரிகின்றனர். ஆயிரமாயிரம் வருடங்களாக பெற்ற ஒரு மித்த அறிவை கொண்டும் அனுபவத்தை கொண்டும் எழுப்பபட்டவையே இந்த நாகரீகங்கள்.

**சுமேரியன் நாகரீகம்:**

“மனித இன வரலாற்றை” பரிணாமத்தை அடிப்படையாக கொண்டு விளக்கும் போது, பரிணாமவியலாளர்கள் மற்றுமொரு வாதத்திலும் எந்த வித விளக்குமும் இன்றி திணறுகின்றனர். அது மனித மனம். இதன் மூலமே மனிதன், பல்கலைகழகங்கள், மருத்துவ மனைகள், தொழிற்சாலைகள் மற்றும் மாகாணங்களை அமைத்தான். இசைகளை இயற்றினான். ஒலிம்பிக் விளையாட்டுகளை நடத்தினான். விண்வெளிக்கு பயணம் செய்தான். சுருக்கமாக சொன்னால் மனிதனுடைய மனமே அவன் என்னவாக இருக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கிறது.

சிம்பன்சியிலிருந்து பரிணாமம் அடைந்த பின் மனிதனுடைய மனம் தற்போதுள்ள திறமைகளை பெற்றுக் கொண்டது என பரிணாமவியலாளர்கள் கூறுகின்றனர். கருவிகளை உற்பத்தி செய்யும் திறனில் முன்னேற்றத்தையும், மூளையில் திடீர் மாற்றத்தையும் மனம் உணர்ந்ததாக பரிணாமவியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இதே கதைகளை தொலை காட்சிகளிலும், செய்திதாள்களிலும், பருவ இதழ்களிலும் நாம் அடிக்கடி காணலாம். குரங்கு மனிதன் முதலில் கற்களிலிருந்து கத்தியையும், பின் ஈட்டியையும் செய்யக் கற்றுக் கொண்டான் என அதில் கூறப்பட்டிருக்கும். ஆனால் இந்த பரப்புரை ஏற்புடையதல்ல. அவர்கள் இந்த விவரங்கள் அறிவயல் பூர்வமானது என்று கூறினாலும் உண்மையில் அவை டார்வினுடைய புனைவு. இவற்றில் எல்லாவற்றிலும் முக்கியமான ஒன்று மனிதனுடைய மனதை ஜடப்பொருளாக கருதி விட முடியாது என்பதே. இந்த ஓர் உண்மையை வைத்தே மனித மன பரிணாமத்தின் எல்லா கூற்றுகளின் அடிப்படைகளை தகர்த்து பொருள் முதல் வாதத்தை தவறு என்று நிரூபிக்கலாம்.

மனம் பரிணாம முறையில் உருவாகியது என்கின்றனர் பரிணாமவியலாளர்கள். ஆனால் அறிவுத் திறன் வளர்ச்சி நிலையில் எது தொடக்க நிலை என்பதற்கோ, பரிணாம முறையில் அதன் தன்மையை விளக்குவதற்கோ எந்த அனுபவமும் அவர்களுக்கு இல்லை.

பரிணாமவியலாளரும் (Nature) நேச்சர் இதழின் ஆசிரியருமான ஹென்றி ஜி, வெளிப்படையாகவே பின்வரும் கூற்றில் எந்த வித அறிவியல் ஆதாரமும் இல்லை என ஒத்துக் கொள்கிறார்.

உதாரணமாக மனிதன் எவ்வாறு பரிணாமம் அடைந்தான் என்றால், அவனுடைய தோற்றம், மூளையின் அளவு, கை மற்றும் கண்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு, ஆகியவற்றில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் காரணமாகவே பரிணாமம் பெற்றான். இதுவே அவனை நெருப்பை கண்டுபிடிக்கவும், கருவிகளை உருவாக்கவும், மொழிகளை பயன்படுத்தவும் செய்தது.

ஆனால் இந்த விவரங்களை நம்மால் உணரமுடியும். இவற்றை சோதனை மூலம் சரிபார்க்க இயலாது.

மேலும் அந்த விவரங்கள் தர்க்க ரீதியாகவும் ஏற்புடையதல்ல. பரினாம வியலாளர்களின் கூற்றுப்படி "அறிவுத்திறன்" என்பது பரிணாமத்தின் வாயிலாகவே உருவாகியது. எனினும் மனிதனின் அறிவுத்திறன் ஏற்கனவே இருந்தால் மட்டுமே இந்த முன்னேற்றம் சாத்தியமாகும். மேலும் பரிணாமத்தின் வாயிலாக, தொழில்நுட்பம் முதலில் உருவாகியதாஅல்லது மனித மனம் முதலில் உருவாகியதா என்ற கேள்வி விடை சொல்லப்படாமலேயே இருக்கிறது.

டார்வினசத்தை மிகவும் விமர்சிக்கிற பிலிப் ஜான்சன் என்பவர் பின்வருமாறு கூறுகிறார்.

"மனிதனால்விளைந்த(உருவாக்கப்பட்ட) தத்துவத்தை கொண்டு தத்துவத்தை உருவாக்கிய மனதை விளக்கிட இயலாது. சிறந்த அறிவியல் மனங்கள் கண்டுபிடித்த உண்மை என்னவென்றால் மனம் என்பது தரபட்ட (அருளப்பட்ட) ஒன்று என திருப்தியடைவதே. அதை விட்டுவிட்டு நாம் மனம் என்ன என்பதை விளக்க முற்படுவோமேயானால் நாம் வெளி வாசல் இல்லாத கண்ணாடி மாளிகையில் நின்று கொண்டிருக்கிறோம்.

உண்மை என்னவெனில், மனிதனின் கலாச்சாரம், மற்றும் சமூக வரலாறு பற்றி டார்வினிஸ்ட்கள் கூறிய கூற்றுகள் தவறானவை. அவர்களின் மனங்கள் உருவாக்கியவற்றை அவர்களாலேயே முழுமையாக விளக்கம் சொல்ல இயலவில்லை.



பாகம்-2

# சமூக நலனின் பெண்கள்



### இறைவன் தன் திருமறையிலே கூறுகிறான் :

“இந்தக் குர்ஆனை ஒரு மலையின் மீது நாம் இறக்கியிருந்தால் அது அல்லாஹ்வின் அச்சத்தால் நொறுங்கி விடுவதைக் காண்பீர். மனிதர்கள் சிந்திப்பதற்காக இந்த உதாரணங்களை அவர்களுக்கு கூறுகிறோம்” *(59:21)*

இந்த பூமி தன் சுழற்சியின் காரணத்தால்சுற்றிக்கொண்டே இருக்கும்போது, அதனால் பூமியில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் மனிதர்களுக்கும் சுழற்சி ஏற்பட்டு விடக்கூடாது, ஆபத்துக்கள் நிகழ்ந்து விடக் கூடாது என்பதற்காகவே இறைவன் பூமியிலே முளைகளாக மலைகளை நிறுவியுள்ளான்.

நாமெல்லாம் மலைகளைப் பார்த்து பிரமித்து போவோம். ஏதாவது பலம் வாய்ந்த ஒரு விஷயத்திற்கு உதாரணமாக மலையை சொல்வோம், அப்பேற்பட்ட மலையே அருள்மறையை சுமக்க பயந்து போய்விடுமாம், அல்லாஹ்வின் அச்சத்தால் நொறுங்கி விடுமாம், ஏன் குர்ஆன் உடைய எடை அதிகம் என்பதாலா? இல்லை அதன் உள்ளே உள்ள செய்திகள், ஆக்கங்கள் அவ்வளவு கனமானவை, வாழ்வின் அனைத்து விஷயங்களையும் சட்ட திட்டங்களையும் தன்னகத்தே கொண்ட இந்த பொக்கிஷத்தை நம்மால் சுமக்க முடியுமா என்ற அச்சம்தான் காரணம்.

ஆனால் மனிதர்களாகிய நாம் இந்த குர்ஆனைப் பற்றி எந்த கவலையும்படாவதர்களாக ஏதோ ஓதிக்கொண்டு, மூடி மூலையிலேயே வைத்துக் கொண்டோம், நிசாரமாக இருக்கிறோம். அதனை சுமப்பதின் நோக்கமோ, சுமப்பதின் சுகத்தையோ, சுமப்பதின் நன்மையையோ அறியாமல் ஏதோ பெயருக்காக ஓதியும், ஓதாமலும் இருந்துக் கொண்டிருக்கிறோம்.

இப்படி நாம் வாழ்வது நமக்கு இரு உலகிலும் எந்த பலனையும் பெற்றுத் தராது. யாருக்கும் பலன் இல்லாமல், ஏன் நமக்கே நம்மால் எந்த பலனும் இல்லாமல் இருக்கவா இறைவன் நம்மை படைத்தான். அப்படி என்றால் நம்மையும் 5 அறிவு உள்ள மனிதன் அல்லாத படைப்புகளாக படைத்திருக்கலாமே!

அந்த படைப்புகள் கூட செடி, கொடிகளாகவும் நமக்கு காய்கறிகளாகவும், நிழல் தரும் மரங்களாகவும் பல பலன்களையும் தருகிறது. மீன்களும், ஆடு, மாடுகளும் நமக்கு உணவாகவும், விவசாயம், தோல், பால் என எண்ணில் அடங்கா பலன்களை தந்துக் கொண்டே இருக்கிறது.

இவை ஊருக்கும், உலகிற்கும் இவ்வளவு பலன்களை தரும்போது ஆறறிவு இருக்கும் நம்மால் இதைவிட அதிகமாய் எவ்வளவோ செய்ய முடியும். அதற்கு வழிகாட்டியாகத்தான் அல்லாஹ் நமக்கு குர்ஆனையும், ஹதீஸையும் தந்துள்ளான்.

இறைவன் கூறுகிறான் :

"அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பி, அல்லாஹ்வை அதிகம் நினைப்பவருக்கு அல்லாஹ்வின் தூதரிடம் அழகிய முன் மாதிரி இருக்கிறது". (33:21)

நபி (ஸல்) கூறினார்கள் :

"நான் உங்களிடையே இரண்டு விஷயங்களை விட்டுச் செல்கிறேன், அந்த இரண்டையும் பற்றிப் பிடித்திருக்கும் காலமெல்லாம் நீங்கள் வழிதவற மாட்டீர்கள். 1) அல்லாஹ்வின் வேத மாகிய குர்ஆன், 2). என்னுடைய வழிமுறை (ஹதீஸ்)

ஆக நாம் வழி தவறாமல் இருக்க வேண்டும் என்றால், நேர்வழியில் நடக்க வேண்டும் என்றால் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம் வாழ்க்கை வழிகாட்டியாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு உண்மையான முஸ்லிம் எந்த நிலையிலும் சுயநலம் கொண்டவனாக இருக்கவே மாட்டான். 'அ' முதல் 'ஃ' வரை எல்லா இடத்திலும், எல்லா நிலையிலும் தனக்கு எது நடந்தால் நன்மை என்று நினைக்கிறானோ, விரும்புகிறானோ அதையே பிற மனிதர்களுக்கும் விரும்பக் கூடியவனாகவே இருப்பான்.

"தாயைப் போல் பிள்ளை என்பார்கள். அண்ணன் எதை செய்கிறானோ அதையே தம்பியும் செய்கிறான், என்கிறோம். எந்த ஒரு மனிதனும் தனக்கு முன்னால் இன்னொரு மனிதன் செய்வதை பார்த்தே பல விஷயங்களைப் படிக்கிறான். எல்லா மனிதர்களும் ஒரு முன் மாதிரியை உற்று நோக்கியவர்களாகவே இருக்கிறார்கள்.

சினிமா நடிகர், நடிகைகளை பார்த்து நடை, உடை, அலங்காரம், பாவனை அனைத்தையும் அமைத்துக் கொள்கிறார்கள். இதனால் இரு உலகிலும் எந்த பலனுமே இல்லை.

ஆனால் ஒரு முஸ்லிம் எப்போதுமே பிறர் நலம், சமூக நலம் பேண காரணம் என்ன என்பதை பார்த்தோமானால், அவன் எடுத்துக் கொண்டுள்ள முன் மாதிரி யார் என்று பார்த்தால் நம் உயிரினும் மேலான நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மட்டுமே.

நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்

"உங்களில் ஒருவர் தனக்கு விரும்பக்கூடிய ஒன்றை தன் சகோதரனுக்காக விரும்பாத வரை அவரது ஈமான் முழுமை பெறாது"

இறைவனும் கூறுகிறான் :

"முஃமின்கள் அனைவரும் சகோதரர்களே" என்று (49:10)

இப்படி இஸ்லாமிய மார்க்கத்தில் எங்கு தேடிப்பார்த்தாலும் சகோதரத்துவமும், சமூக நலனையுமே அதிகமாகக் காணலாம்.

"உன் சகோதரனைப் பார்த்துப் புன்னகைப்பதும், தர்மமே" (நபிமொழி) என்கிறது இஸ்லாம்.

"பாதையில் நீ செல்லும்போது மனிதர்களுக்கு இடைஞ்சல் செய்யும் கல், முள் இன்னும் இது போன்றவை ஏதேனும் கிடந்தால் அதை எடுத்து அப்புறப்படுத்திவிட்டு செல்" (நபிமொழி) என்கிறது இஸ்லாம்.

இப்படி சின்ன சின்ன விஷயங்களிலே பிறர் நலம், சமூக நலனில் கண்ணும் கருத்துமாக இருக்கும் இஸ்லாம், நிச்சயமாக எவ்வளவு பெரிய விஷயத்திலும் பிறருக்கு கஷ்டத்தைக் கொடுக்காது. இதனை உணர்ந்ததால் தான் மக்கள் இன்றும் இஸ்லாத்தில் சாரை சாரையாய் இணைந்து வருகிறார்கள்.

இணைந்தவர்கள், அப்படியே இருந்து விடுவதில்லை. தனக்கு கிடைத்த இந்த நேர்வழி, நல்லதொரு வாழ்க்கை எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று அயராது உழைக்கிறார்கள்.

அன்றைய காலத்தில் இருந்தே பார்த்தோமேயானால் "உம்மு உமாரா (ரலி) அவர்களை எடுத்துக் கொண்டோமேயானால், இவர் ஒரு ஸஹாபிய பெண்மணி. அன்றைய காலத்தில் உம்மு உமாரா (ரலி) அவர்கள் இஸ்லாத்தைப் பற்றிக் கேள்விப்பட்டபோது அதனை ஏற்றுக் கொள்வதால் அபாயமிக்கச் சோதனைகள் ஏற்படும், தாம் இஸ்லாத்தில் இணைந்தது தெரிய வந்தால் தம் சமுதாயத்தினர் அனைவரும் கொதித்தெழுவார்கள் என நன்றாகவே அறிந்திருந்தார்கள். பல பிரச்சனைகள் தனக்கு வரும் என தெரிந்தும்,

விளைவுகளைப் பற்றி எல்லாம் கவலைப் படாமல் நபிகளை சந்திக்க சென்ற மதீனத்துக் குழுவினரைப் பின் தொடர்ந்தார்கள். நபியை

சந்திப்பதிலும், அவரது அறிவுரைகளை நன்றாக கவனமாகக் கேட்க வேண்டும் என்ற உறுதி யோடு தன் இடத்திலிருந்து வெளியேறினார்கள்.

இஸ்லாத்தை ஏற்ற பின் நபி (ஸல்) அவர் களிடம்தன் அணியினர் கொடுத்த வாக்குறுதி களை நிறைவேற்ற முன் வந்தால் எத்தகைய விளைவுகள் ஏற்படும் என்பதை அறிந்த பின் அவர்கள் பயத்தால் சோர்ந்து போகவோ, துவண்டு போகவோ இல்லை.

மாறாக கொள்கைகாகப் போராட வேண்டும் என்ற எண்ணமும், யான் பெற்ற நேர்வழி இவ்வையகமும் பெற வேண்டும் என்ற தேடலும், உறுதியுமே அவர்களின் உள்ளத்தில் பொங்கி எழுந்தன.

நபி (ஸல்) அவர்களின் அருள்மொழிகளைக் கேட்டு அறிவுரை பெறுவதில் உம்மு உமாரா (ரலி) அவர்கள் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்கள். இஸ்லாம் மகளிர் உரிமைகளை முழுமையாக வழங்கி இருந்தது. வாரிசுரிமை, சொத்துரிமை, திருமண உரிமை, விவாகரத்து உரிமை என எல்லாம் வழங்கி இருப்பதை அறிந்ததும், அதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் முறையில் ஒரு முறை நபி (ஸல்) அவர்களிடம் இவ்வாறு கேட்டார்.

“அனைத்திலும் ஆண்களுக்குத்தானே உரிமையுள்ளது. பெண்களுக்கு எந்த உரிமையும் இருப்பதாகத் தெரியவில்லையே என்று,

பெண்கள் ஆண்களுக்கு சமமானவர்கள் எனும் உண்மை இறைவாக்கிலும், கட்டளையி லும் அதிகாரப்பூர்வமாக இடம் பெற வேண்டும் என்பது உம்மு உமாரா (ரலி) அவர்களின் விருப்பம். அவருடைய விருப்பத்திற்கு பதிலளிக் கும் விதமாக இறைவன் ஒரு வசனத்தை இறக் கினான்.

“நிச்சயமாக முஸ்லிம்களான ஆண்களும், பெண்களும், நம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும் இறைவனுக்கு வழிபடும் ஆண்களும் பெண்களும், பொறுமையுள்ள ஆண்களும், பெண்களும், உள் அச்சமுள்ள ஆண்களும், பெண்களும், தர்மம் செய்யும் ஆண்களும், பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும், பெண்களும் தங்கள் வெட்கத்தலங்களை காத்துக் கொள்ளும் ஆண்களும், பெண்களும், அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூரும் ஆண்களும், பெண்களும் ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும், மகத்தான நற்கூலி யையும் தயார் செய்து வைத்துள்ளான்” ( 33:35)

என்று இவ்வாறு அன்றைய பெண்கள் தனக்கு தெரிந்தாலும் அந்த விஷயத்தை தனக்கு பின் வரும் உலக சமுதாய மும் அதை தெரிந்துகொள்ள வேண்டும் என முயற்சி செய்தார்கள்.

அவர்களின் முயற்சிக்கும், உழைப்பிற்கும் இறைவன் வசனங்களை இறக்கி உதவினான். அவர்களின் ஈமானை உறுதி செய்து வலுவூட்டி னான்.

ஆனால் இன்று பலவித வடிவங்களிலும் மாடல்களிலும் கையடக்க பிரதியாகவும், ஏன் மொபைல்களிலும் மொத்த குர்ஆன் வந்த பிற கும், அதை படித்து புரிந்து செயல்படவும், அதை பிறருக்கு போதிக்கவும், அதன் சமூக சீர்த்திருத் தங்களை செய்யவும் நாம் அசட்டையாகவே இருந்து வருகிறோம்.

இன்னும் இந்த வீரப் பெண்மணி உம்மு உமாரா (ரலி) யின் தியாகங்களும், சமூக அக்கறை யும்இவற்றைஎல்லாம்தெரிந்து கொள்ளும்போது நாமெல்லாம் பொதி சுமக்கும் கழுதைகளாகவே வாழ்கிறோம் என எண்ணத் தோன்றுகிறது.

இறைவன் கூறுகிறான்...

**“தவ்ராத் (வேதம்) சுமத்தப்பட்டு பின்னர் அதைச் சுமக்காமல் (அதன்படி நடக்காமல்) இருந்தார்களே அவர்களது உதாரணம் ஏடுகளைச் சுமக்கும் கழுதையைப் போன்றது. அல்லாஹ்வின் வசனங்களைப் பொய்யெனக் கருதுவோருக்குரிய உதாரணம் மிகவும் கெட்டது. அநீதி இழைக்கும் கூட்டத்திற்கு அல்லாஹ் நேர்வழி காட்டமாட்டான்” (62:4)**

இன்ஷா அல்லாஹ் தொடரும்.

- **நாதிரா அஸ்ரஃபியா**

# திப்பு சுல்தான்
## பொய்யும், மெய்யும்

2012- ஆம் ஆண்டு பாரதீய ஜனதா கட்சியில் இருந்து வெளியேறிய B.S.எடியூரப்பா கர்நாடகா ஜனதா பக்ஷா என்ற புதிய கட்சி ஒன்றை தொடங்கினார். முஸ்லிம் வாக்காளர் களை தன் பக்கம் இழுப்பதற்கு திப்புவின் தன்மைகளை ஆஹா ஓஹோ என்று புகழ்ந்து தள்ளினார்.

இரண்டு வருடத்திற்கு முன் பாரதீய ஜனதா கட்சியில் மீண்டும் தன்னை இணைத்து கொண்டதன்பின் நிலைமை தலைகீழ். 2016 நவம்பர் 10 ஆம் தேதி திப்பு ஜெயந்தியை கொண்டாடக் கூடாது என்பதில் மும்மரமாக இறங்கி பணியாற்றியவர் B.S.எட்டியூரப்பா. இப்படிப்பட்ட சந்தர்ப்பவாதிகளின் பிடியில் திப்பு சிக்கிக் கொள்வது முதல் முறையல்ல.



வரலாற்றில் சில தலைவர்கள் மட்டுமே தான் சார்ந்த சமுதாயத்தை தாண்டியும் அனைத்து தரப்பு மக்களாலும் போற்றப்படு கிறார்கள். அதில் மைசூர் வேங்கை திப்பு சுல்தானும் ஒருவர். (1750-1799)

திப்பு யுத்த களத்தில் வீர மரணமடைந்த பின்னர் அதாவது 1800 ஆண்டுகளில் திப்பு மறைந்த துயரத்தை வெளிப்படுத்தும் இரங்கற் பாக்கள் பல இயற்றப்பட்டன. இவை 19ஆம் நூற்றாண்டில் கர்நாடகாவின் பல பகுதிகளில் நாட்டுப்புற பாடல்களாகவும் கவிதைகளா கவும் வலம் வந்து கொண்டிருந்தன. பிரிட்டி ஷாரால் கொல்லப்பட்ட திப்பு மற்றும் அவரை போன்ற தலைவர்களுக்கு மட்டுமே இப்பாடல்கள் வரலாற்றில் காணக்கிடக் கின்றன என்பதும் மற்ற தலைவர்களுக்கு இப்பாடல்கள் இயற்றப்படவில்லை என்பதும் வரலாற்று உண்மை.

19, 20 ஆம் நூற்றாண்டுகளில் திப்பு சுல்தான் சரித்திரத்தை எடுத்து சொல்லும் பல மேடை நாடகங்கள் இயற்றப்பட்டுள்ளன. வரலாற்று பாடநூல்களும், இலக்கியங்களும், அமர் சித்ரா காதா போன்ற காமிக் புத்தகமும் திப்பு சுல்தானின் வீரத்தையும் அவர் பிரிட்டி ஷாருக்கு எதிராக மேற்கொண்ட போராட் டத்தையும் தெளிவாக விளக்குகின்றன. இதில் வியப்பு என்னவெனில் 1970 ஆம் ஆண்டு RSS வெளியிட்ட பாரத பாரதி தொடரில் திப்பு சுல்தானை ஒரு தேசப்பற்றுள்ளவராகவும்,

வீரத் திருமகனாகவும் புகழ்ந்துள்ளன. அவரை பற்றி எந்தவித எதிர்மறை கருத்துக்களும் அத்தொடரில் இடம் பெறவில்லை.

18 ஆம் நூற்றாண்டின் கடைசி 20 ஆண்டுகளில் ஆங்கிலேய அதிகாரிகள், எழுத்தாளர்கள், ஓவியர்கள் ஆகியோர் திப்புவை பற்றி அச்சத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தும் வகையிலே கருத்துக்களை பரப்பினர். பிரிட்டிஷ் படைகளுக்கு எதிராக திப்பு கிளர்ந்தெழுந்த பொழுது, அவரை முஸ்லிம் மதவெறியர் என்றும் ஹிந்து கோவில்களை இடித்தவர் என்றும் கிறிஸ்தவர்களை மதமாற்றியவர் என்றுமே இக்கருத்துக்களின் வழி பதிவு செய்தனர். மைசூரை வெற்றி கொள்ளவும் தங்களுடைய எண்ணங்களை நிறைவேற்றவும் இவை பிரிட்டிஷாருக்கு உதவியிருக்க கூடும் என்கிறார் ஆராய்ச்சியாளர் மைக்கேல் சொரகோ (Michael Soracoe).

கிழக்கு இந்தியா கம்பெனி ஒரு கறைபடிந்த நிறுவனம் அதனால் இந்தியாவில் ஆட்சி செய்ய முடியாது என்ற நிலையை ஒரங்கட்டி மறைத்து அதிலிருந்து வெளியே வந்திடவும் வெள்ளை ஆதிக்க கூறுகளின் இம்முயற்சிகள் உதவின என்கிறார் மைக்கேல் சொரகோ. 19 ஆம் நூற்றாண்டு முழுவதும் ஆங்கிலேயர்கள் திப்புவை இரக்கமற்றவர், மதவெறியர் என்றே தொடர்ந்து எழுதி தள்ளியவையே இன்று இந்துத்துவ வலது சாரிகளால் மேற்கோள் காட்டப்படுகிறது.

திப்புவின் ஆட்சியில் மைசூரின் நிர்வாகத் துறையில் பெர்சியன், கன்னட மற்றும் மராத்தி மொழிகளே பயன்படுத்தப்பட்டன. உயர் ஜாதி பிராமனர்களே முக்கிய அமைச்சர் பதவிகளை வகித்தனர். இந்து கோவில்களுக்கும், துறவிகளுக்கும் அவர் வழங்கிய தாராளமான அறக்கொடைகளும் மானியங்களும் வரலாற்று பதிவுகளில் நன்றாகவே காணக்கிடக்கின்றன. பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும் பிரமாண்ட தசரா கொண்டாட்டங்களையும் விழா நடைமுறைகளையும் நடத்தும் உரிமையை வோதையார் அரச குடும்பங்களே பெற்றிருந்தனர்.

கட்டாய மதமாற்றம் நடைபெற்றது என்ற குறிப்பு மைசூரின் எந்த பகுதியிலும் பதிவு செய்யப்படவில்லை.

பிரிட்டிஷாரின் ஆதிக்கம் பிற்காலத்தில் மாநிலங்களை சீரழித்துவிடும் என்று நிஜாம்களுக்கும் மராத்தியர்களுக்கும் அவர் கடிதம் எழுதியதை பார்க்கும் பொழுது சுதந்திர போராட்டத்தை அப்பொழுது முன்னெடுத்த வீரராகவே அவரை அடையாளம் காண முடிகிறது.

இராணுவ தளவாடங்களை அவர் மேம்படுத்தினார். வருமானங்களை முறையாக வசூல் செய்ய அவர் கொண்டு வந்த சீர்திருத்தம் இன்றளவும் பாராட்டப்படுகின்றது. திப்புவின் தனிபட்ட நூலகத்தில் மட்டும் 2000 புத்தகங்கள் குவிந்து கிடந்தன. இதில் வானியல், சட்டம், கணிதம் தொடர்பான புத்தகங்கள் மற்ற துறைகளில் திப்புவிற்கு இருந்த அறிவுத் தாகத்தை வெளிபடுத்துகின்றது. திப்பு சுல்தான் பல துறைகளில் கொண்டிருந்த ஆளுமைகளை இருட்டடிப்பு செய்து மத விவகாரங்களை மட்டும் பெரிது படுத்துவதையே வலது சாரிகள் தங்கள் திட்டமாக கொண்டு செயல்படுகின்றனர்.

### திப்பு - புனைவுகளும் பதில்களும்

1785 ஆம் ஆண்டு கூர்க் (கொடகு) பகுதியை தாக்கினார் திப்பு. தேவதிபரம்பு என்ற இடத்தில் வைத்து நிராயுதபாணியாக நின்றிருந்த 60,000 கொடவா இனமக்களை படுகொலை செய்தது திப்புவின் படை என்று வாதிடுகிறார் கொடவா நேஷனல் கவுன்சில் தலைவர் N.U. நச்சப்பா.

திப்புவும் கொடவா இன மக்களும் என்ற கன்னட புத்தகத்தை எழுதியவர் அத்தந்த கரியப்பா. இவர் திப்பு ஜெயந்திக்கு எதிரான போராட்ட குழுவை மாநில அளவில் வழி நடத்தி செல்பவர். ஹைதர் அலியும், திப்புவும் 32 முறை கொடகு பகுதியை தாக்கியதாகவும், அதில் 30 முறை அவர்கள் தோல்வியை தழுவியதாகவும் கூறுகிறார் கரியப்பா. சமாதான பேச்சு வார்த்தை என்ற கூறி கொடவா இராணு

வத்தை அழைத்து வரசெய்து ஏமாற்றினார் திப்பு. பின்னர் திப்புவின் படையில் இருந்த முஸ்லிம்களும் பிரெஞ்சு வீரர்களும் அவர்களை சூழ்ந்து கொண்டனர். அதன் பின்னர் அங்கே எந்த அளவுக்கு படுகொலைகள் நடந்தது என்று சொன்னால் காவிரி தண்ணீர் சிவப்பு நிறமாக மாறி ஓடியது என்கிறார் கரியப்பா.

80,000 - 111,000 பேர்களை திப்பு சிறை பிடித்து இருக்கலாம். அவர்கள் ஸ்ரீரங்கபட்டி னதிற்கு அழைத்து சென்று கட்டாய மத மாற்றம் செய்யப்பட்டனர் என்கிறார் கரியப்பா.

C.P.பெல்லியப்பா என்பவர் தன்னுடைய Nuggets From Coorg History என்ற நூலில் 80,000 பேர் சிறைபிடிக்கப்பட்டதாக குறிப் பிடுகிறார்.

### A.K. சுப்பையாவின் பதில்:

விராஜ்பெட்-ஐ சார்ந்த சுப்பையா ஒரு வழக்கறிஞர். மேலே வரலாற்று நிகழ்வுகள் என்று கூறப்பட்டவற்றை இவர் மறுக்கிறார். எந்தவிதமான படுகொலைகளும் தேவதிபரம்பு என்ற இடத்தில் நடைபெறவில்லை. கொட வாக்களில் சிலரையே திப்பு சிறைபிடித்தார். வகுப்புவாத சிந்தனையில் மூழ்கி திளைத்த சில கொடவாக்கள் இந்த சம்பவத்தை பற்றி இல்லாததும் பொல்லாததுமாக கூறுகின்ற னர். இவர்களை கொண்டே திப்புவுக்கு எதிரான பிரச்சாரம் முன்னெடுத்து செல்லப்படுவ தாகவும் இதில் பலர் BJP ஆதரவாளர்கள் என்பதையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும் என்கிறார் சுப்பையா.

1750 (அல்லது 1751) ஆம் ஆண்டு ஹைதர் அலிக்கு மகனாக பிறந்தார் திப்பு. 1761 -இல் ஹைதர் அலி மைசூரின் மன்னராக முடிசூட்டி கொண்டார். ஹைதர் அலி ஆட்சிக்கு வருவ தற்கு முன் மைசூரை ஆட்சி செய்து கொண்டி ருந்த வோதேயார் மன்னர்கள் கொடகு பகுதியை தங்கள் கட்டுபாட்டிற்குள் கொண்டு வர முயற்சி செய்தனர். 1765 இல் முதல் முறையும் 1773 இல் மறுபடியும் கொடகு பகுதிக்கு படைகளை கொண்டு சென்றார் ஹைதர் அலி.

அப்பொழுது ஹலேரி ராஜாக்கள் என்றழைக்கப்படும் லிங்காயத் அரசர்கள் கொடகு பகுதியை ஆண்டு கொண்டிருந்தனர். அவர்களுக்கு இடையே நிலவி வந்த பரம்பரை உட்பூசல்களை ஹைதர் அலி தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டார். 1782 இல் ஹைதர் அலி மரணமடைந்தார்.

திப்புவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய மொஹிப்புல் ஹசன் இப்படி பதிவு செய்கிறார். “வடக்கே கிருஷ்ணா நதி வரையும், தெற்கே திருவிதாங்கூர் சமஸ்தானம் மற்றும் திருநெல் வேலி மாவட்டம் வரையும், கிழக்கே கிழக்கு தொடர்ச்சி மலை வரையும், மேற்கே அரேபியா பெருங்கடல் வரைக்கும் உட்பட்ட மிகப் பெரிய நிலப்பரப்பை ஆளும் பொறுப்பை திப்பு ஏற்றுக்கொண்டார். கொடகு பகுதியும் அவருடைய ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளி லேயே வந்தது. ஸ்ரீரங்கபட்டினத்தையும் கடற்பகுதியையும் நேரடியாக இணைத்திடும் பகுதியாக கொடகு பகுதி அமைந்தது அதன் அமைவிட சிறப்பை உணர்த்துகிறது.

### திப்புவும் கொடகுவும்:

ஹைதர் அலிக்கும், திப்புவிற்கும் எதிராக அடிக்கடி கொடகு பகுதியினர் கிளர்ச்சி செய்து கொண்டே இருந்தனர். அவருடைய படைத் தளபதிகளால் சூழ்நிலையை சமாளிக்க முடியாமல் போகவே திப்புவே 1785 இல் கொடகு பகுதிக்கு வருகிறார்.

திப்பு சில காலங்கள் அங்கே தங்கியதாக அவருடைய ஆட்சியை பற்றிய தகவல்களை தொகுத்த வரலாற்று பதிவாளர் மிர் ஹுசைன் அலிகான் கிர்மானி குறிப்பிடுகிறார்.

"திப்பு அங்கிருந்த போதுதான் மடிக்கேரி கோட்டையை தன் முழு கட்டுபாட்டிற்குள் கொண்டு வந்தார். 7 மாதங்களில் 80,000 பேர்களை சிறைபிடித்தார். சுல்தான் ஸ்ரீரங்க பட்டினதிற்கு வந்த பின்பு, கைதிகள் அனை வரும் முஸ்லிம்களாக மாற்றப்பட்டனர். எட்டு பிரிவுகளாக அவர்கள் பிரிக்கப்பட்டனர். அவர்களுக்கு நெறிமுறைகளை பயிற்றுவிப்ப

தற்கு துறைதேர்ந்த அதிகாரிகளும் நியமிக்கப்பட்டு, சில நாட்களிலேயே இராணுவ பயிற்சிகளிலும் அவர்கள் கைத்தேர்ந்தவர்களாக மாறினார்."


நச்சப்பாவும், கரியப்பாவும் கிர்மானியின் எழுத்தையே முதல் ஆதாரமாக எடுத்து தங்களுடைய தேவதிபரம்பு குறித்த விவாதங்களை முன்வைக்கின்றனர். ஆனால் கிர்மானி எங்கேயும் படுகொலைகள் நடந்ததாக குறிப்பிடவில்லை. கூர்மதியுடைய வரலாற்றாசிரியர்கள் அனைவரும் கிர்மானியின் எழுத்தை மிகுந்த கவனத்தோடும் எச்சரிக்கையோடும் தான் பயன்படுத்துகின்றனர்.

திப்புவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய மொஹிப்புல் ஹசன் இப்படி குறிப்பிடுகிறார். "திப்புவையும் அவருடைய தந்தையையும் கிர்மானிக்கு நன்றாகவே தெரியும். ஸ்ரீரங்கபட்டினத்தை பிரிட்டிஷார் வெற்றி கொண்டதன் பின்னர், அவர்களிடமிருந்து ஓய்வு ஊதியம் பெறும் நபராக ஆனார் கிர்மானி. கல்கத்தாவில் பிரிட்டிஷாரின் ஆதரவில் இருந்து கொண்டு தான் இவற்றை எழுதினார். அவர்களுக்கு ஆதரவாகவே எழுத தலைபட்டு விட்டார் கிர்மானி. அவர் பயன்படுத்திய நாட்குறிப்புகளில் பிழைகளும் உள்ளன".

**பட்டோள் பளமே:**

நச்சப்பாவும் கரியப்பாவும் திப்புவை இடித்துரைக்க அடுத்ததாக மேற்கோள் காட்டும் புத்தகம் பட்டோள் பளமே. கொடவாக்களின் நாட்டுப்புற பாடல்களையும் கலாச்சாரங்களையும் சுருக்கமாக தொகுத்தளிக்கும் இப்புத்தகம் 1924-இல் கர்நாடகாவில் நதிகேரியந்தா சின்னப்பாவால் எழுதப்பட்டது. 111,000 பேர் சிறைபிடிக்கப்பட்டதாக இப்புத்தகம் குறிப்பிடுகிறது.

இப்புத்தகத்தை அவருடைய பேத்தி 2003-இல் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தார். பட்டோள் பளமே-இல் குறிப்பிடப்பட்ட



எண்ணிக்கை மிகவும் அதிகரித்து சொல்லப் பட்டுள்ளது என்று பிரண்ட் லைன் (Front Line) என்ற பத்திரிக்கை உடனான உரையாடலின் போது அவருடைய பேத்தி போவெரியந்தா நஞ்சம்மா தெரிவித்தார். என்னுடைய பாட்டனார் ஒரு இலக்கத்தை அதிகப்படியாக சேர்த்துக் கொண்டார்.

ஏனெனில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 11,000-ஐ தாண்டாது (111,000 அல்ல 11,000- ஒரு இலக்கத்தை சேர்த்து விட்டாராம்). அவரும் அவருடைய கணவர் B.M. சின்னப்பாவும் கொடவா பகுதியில் பத்தாண்டுகளுக்கும் மேலாக அம்மக்களை பற்றிய வரலாற்றை பதிவு செய்ய உழைத் துள்ளனர்.

பல புத்தகங்களை எழுதியுள்ளோம், களப்பணிகளை மேற்கொண்டுள்ளோம். இதிலிருந்து நாங்கள் தெரிந்து கொண்டது என்னவென்றால் சில ஆயிரம் கொடவாக்களே திப்புவின் படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப் பட்ட அனைவரும் கொடவாக்கள் அல்ல. அப்பகுதியில் வசித்த மற்ற இனத்தை சேர்ந்த மக்களும் அதில் உண்டு. பின் எப்படி, எங்கிருந்து 111,000 எண்ணிக்கை பயன்படுத் தப்பட்டது என்ற கேள்விக்கு "எங்கள் பாட்டனார் பிரிட்டிஷாரால் எழுதப்பட்ட குறிப்புகளில் இருந்தே அதை பயன்படுத்தி யுள்ளார்" என்கிறார் நஞ்சம்மா.

மேற்கத்திய எழுத்தாளர்களால் பதிவு செய்யப்பட்ட மக்கள் தொகை சான்றுகள் அதிகரித்து சொல்லப்படும் கைதிகளின் எண் ணிக்கை குறித்து கேள்வியை எழுப்புகின்றன. 1855-இல் ஜெர்மானிய சமய பரப்புரையாளர் ஹெர்மான் பிரெடெரிக் மோக்லிங் மேற் கொண்ட மக்கள் தொகை கணக்கின்படி கொடகு மக்கள் தொகை 25,000 அல்லது 26,000. அதிலும் போர்களுக்கென்று 4,000 (அ) 5,000 படைவீரர்களே அன்று ஒன்று கூடுவார்கள் என்று அவர் எழுதியுள்ளார்.

1870 ஆம் ஆண்டு வெளிவந்த கூர்க் மாவட்ட ஆவணத்தில் (District Gazetteer), கொடகு மக்கள் தொகை பற்றிய கணக்கை Rev.G.ரிச்டர் பதிவு செய்துள்ளார். அப்பகுதி யில் வாழ்ந்த மக்கள் தொகை 112,952 என்றும் இதில் கூர்க் (கொடவா) மக்கள் தொகை 24,585, ஹிந்துக்கள் 80,934, முஸ்லிம்கள் 5774 என்றும் பதிவு செய்துள்ளார்.

1871 ஆம் ஆண்டு வெளிவந்த முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கூர்கில் 154,476 ஹிந்துக்களும் 11,304 முஸ்லிம்களும் வாழ்ந்ததாக குறிப்பிடுகிறது. சமகாலத்தில் நம்மோடு வாழும் ராமச்சந்திரா ராவ் புங்கநூரி (மைசூர் ஹிந்து) என்பவரின் கணக்கின்படி 500 ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் கொடகு பகுதியில் கைது செய்யப்பட்டு மைசூர் கொண்டு வரப்பட்டனர். மேலே கூறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் பார்த்தால் நச்சப்பாவும் கரியப்பாவும் மிகைப்படுத்தியே எண்ணிக்கைகளை எழுதியுள்ளனர். ரிச்டர் குறிப்பிட்ட எண்ணிக்கையில் சில தவறுகள் இருந்தாலும், அதிலிருந்து நாம் கொடகு மக்கள் தொகையில் சிறிய பகுதியினரே கொடவாக்கள் என்பதை நம்மால் தெளிவாக புரிந்து கொள்ள இயலும்.

**கொடகு பகுதியில் முஸ்லிம்கள்:**

1792-மூன்றாவது ஆங்கிலோ மைசூர் போருக்கு பின்னர், கொடகு பகுதியின் உரிமையை திப்பு இழந்ததன்பின், இஸ்லாத் திற்கு மாறிய 90 குடும்பங்கள் மைசூரிலிருந்து மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும் பினர் என்று நாட்டுப்புறவியல் குறிப்புகள் கூறுகின்றன. லிங்காயத் ராஜாவின் கட்டுப் பாட்டின் கீழ் கொடகு பகுதியை சுற்றியுள்ள 2 இடங்களில் இவர்களின் குடும்பங்கள் வசித்து வந்தன. இக்குடும்பங்கள் மைசூரிலிருந்து திரும்பி வந்தவர்களை ஏற்றுக் கொள்ள வில்லை. சில கொடவாக்கள் இஸ்லாத்திற்கு மாறவில்லை என்பது நமக்கு இதிலிருந்து புரிகிறது. திப்பு வருவதற்கு முன் அப்பகுதியில் முஸ்லிம்கள் வாழவில்லை என்பதும் பொய்.

மடிக்கேரியிலிருந்து 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள எம்மமேடு என்ற பகுதியில் சூபி ஷஹீத் அவர்களின் கல்லறை அமைந்துள்ளது.

இவரின் காலத்தில் இருந்து தான் முஸ்லிம்கள் அப்பகுதியில் வாழ்ந்துள்ளனர். இக்தர்ஹாவின் நிர்வாகத்தை கவனித்து வரும் அறக்கட்டளை வெளியிட்ட சிறு புத்தகத்தின்படி, 350 வருடங்களுக்கு முன் சூபி இப்பகுதிக்கு வந்த தாகவும் மேலும் அப்புத்தகத்தில் அவருடைய அற்புத சக்திகளையும், கொடவாக்களின் ஒரு குடும்பத்தோடு (மனவித்தரா குடும்பம்) அவருக்கு இருந்த நெருங்கிய தொடர்பு களையும் காலக்கிரமமாக பதிவு செய்யப்பட் டுள்ளது.

**திப்புவின் மறைவு:**

1799-திப்புவின் வீழ்ச்சிக்கு பின்னரே கிழக்கு இந்தியா கம்பெனி தன்னுடைய ஆதிக் கத்தை மற்ற பகுதிகளிலும் விரிவுபடுத்தியது. திப்புவிற்கு எதிராக மேற்கொள்ளப்படும் பிரசாரத்திற்கு அடிப்படையான சான்றுகள் இல்லை. ஆனால் பிரிட்டிஷார் கக்கிய வெறுப்பையே கொடவாக்கள் உள்வாங்கி கொண்டனர். இந்தியா வெற்றிக் கொள்ளப் பட்ட வரலாற்றை எழுதும்போது பிரிட்டிஷார் திப்புவை நிந்தித்தும் திட்டியுமே எழுதினர். கலோனல் வில்லியம் கிர்க்பேட்ரிக் மற்றும் மார்க் வில்க்ஸ் போன்ற பிரிட்டிஷ் எழுத்தா ளர்கள் திப்புவின் இராணுவ நடவடிக்கையை எரிச்சலுடன் கடிந்துள்ளனர். Rev. ரிச்டர் ஹைதர் அலியை "ஓநாய்" ஹைதர் என்றே 1870 களில் எழுதினார்.

மைக்கேல் சொரகே மேற்கொண்ட ஆராய்ச்சி படிப்பு இவ்விவாதத்திற்கு மிக்க துணை புரியும். திப்புவின் மீது களங்கம் கற்பித் தது பிரிட்டிஷாருக்கு எப்படி உதவியது என்றால் இப்படிப்பட்ட ஒரு நாகரிகமற்ற அரசனின் பிடியில் இருந்து தெற்கு இந்தியாவை மீட்கும் வலிமையும், போர் புரியும் துணிவும் கிழக்கு இந்தியா கம்பெனிக்கே உண்டு என்ற ஒரு தளத்தை ஏற்படுத்தியது என்று எழுதியுள்ளார் மைக்கேல் சொரகே.

1930 களில் காந்திஜி நடத்தி வந்த Young India பத்திரிக்கையில் காந்தி இப்படி எழுதினார். "அந்நிய வரலாற்றாசிரியர்கள்



திப்புவை வெறியர் என்றும் ஹிந்துக்களை அடக்குமுறைகளுக்கு உட்படுத்தியவர் என்றும் அவர்களை கட்டாய மதமாற்றம் செய்தவர் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால் திப்பு இக்குணநலன்களை கொண்டவரல்ல. அதற்கு மாறாக, ஹிந்துக் களுடன் அவருக்கு இருந்த உறவு கள்ளம் கபடமற்றது, அன்பு நிறைந்தது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இப்பொழுது சுதந்திரப் போராட்டத்தின்போது தங்களை எதிரிகள் சுற்றியிருப்பதை மறந்துவிட்டு, ஒருவரின் கழுத்தை மற்றவர் நெரித்துவிட தயாராக இருக்கும் இந்நிலையில் நாம் அன்று திப்புவின் காலத்தில் அவர்கள் வாழ்ந்ததை எண்ணிப் பார்ப்பது மனநிறைவை அளிக்கக் கூடியது".

வெள்ளையர்களின் பிரித்தாளும் சூழ்ச்சியை இன்றுவரை உயிரூட்டம் தந்து கடைபிடிப்பவர்கள் பாசிஸ்டுகள். இச்சூழ்ச்சி யின் வழியே மக்களிடையே பிரிவினை தீயை கொளுத்திவிடுகின்றனர். அதில் அவர்கள் ஆனந்தமும் அடைகின்றனர்.

ஆதாரம் The Hindu, Nov.9, 2016, Front Line June-6, 2017

**- அபூ ஹாசின்**

# திருச்சி மாவட்ட மணப்பாறை அருகில் உள்ள புத்தாநத்தம்-ஐ என்ற ஊரைச் சேர்ந்த 5 முஸ்லிம்கள் மீது இந்துத்துவாவினர் கொலை வெறிதாக்குதல்

**தமிழ் நாட்டில் புற வாசல் வழியாக ஆளத் துடிக்கும் பா.ஜ.க. மோடி அரசு தமிழ்நாட்டை எப்படியாவது குஜராத் ஆக மாற்றும் நோக்கத் துடன் பல சதிவேளை களில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறது.**

அதன் ஒருபடியாக முஸ்லிம்களை தீவிரவாதி கள் என்று போலீசை வைத்து கைது செய்வது, முஸ்லிம்கள் வீடுகளை தாக்குவது நடந்து வருகிறது.

இதன் மற்றொரு பகுதி யாக புத்தாநத்தம் முஸ்லிம் கள் 5 பேர் இந்துத்துவ வாதி களால் கொலை வெறி தாக்கு தலுக்கு ஆளாகியுள்ளனர்.

கடந்த ஏப்ரல் 20 தேதி அன்று ராஜாமுகமது (32) என்ற துணி மொத்த விற் பனை வியாபாரி கோவில் பட்டி கைகாட்டி போன்ற இடத்தில் வியாபரம் செய்து தன்சொந்த ஊருக்கு திரும்பி கொண்டு இருந்த வேளையில், கோரப்பட்டி என்ற ஊரில் புத்தாநத்தம் போக வழி கேட்டுள்ளார். உடனே அங்கு இருந்தவர்கள் உன் பெயர் என்ன என்று கேட்க அவர் ராஜாமுகமது என்றவுடன் முஸ்லிமா என்று கேட்டு அவரை தாக்க ஆரம்பித்துள்ளனர், பின்னர் ஊரில் உள்ள மற்றவர்களை சேர்த்து சுமார் 500க்கு மேற் பட்ட கும்பலை கூட்டி அவரை தாக்கியுள்ளனர்,

அப்போது ராஜா முகமது தான் துணி வியா பாரி, என்று சொல்லி விசிட் டிங் கார்டு போன்றவற்றை காட்டியும் அவரை, போல் டுடன் இணைந்து பைப்பு, கட்டை, சிங்கப்பூர் டார்ச்சை கொண்டு கடுமையாக தாக்கியுள்ளனர்.

இன்னும் நிர்வாண படுத்தி தாக்கியது கொடுமை யின் உச்சகட்டம், பின்னர் அவர் தொலைபேசியை எடுத்து அவர் சொந்தகார ருக்கு போன் செய்து ராஜா முகமதை கோரப்பட்டி மக்கள் அடிப்பதாகவும் அவரை மீட்டு செல்லுங்கள் என்று கூறியுள்ளனர்.

இதை தொடர்ந்து ஜின்னா (23), ஆரிப் ராஜா (25) காஜா மெய்தீன் (23) சதாம்உசேன்(24) என நான்கு பேர் இரண்டு சக்கர வாகனங் களில் சென்றுள்ளனர்.

இவர்கள் போகும் போது மற்றவர்களிடம் நாங்கள் சென்று அரைமணி நேரம் பாருங்கள் செல்போன் அழைப்பு வராவிட்டால் காவல் நிலையத்தில் புகார் தாருங்கள் என சொல்லி விட்டு சென்றுள்ளனர்.

இந்த நான்கு நபர்களும் ஊரை நெருங்கும்போது 2 வாகனத்தில் இவர்களை பின் தொடர்ந்து வந்துள்ள னர். இவர்கள் போய் சேரும் போது கிட்டதட்ட ஆயிரம் பேர் திரண்டு உள்ளனர், அவர்கள் இந்த நான்கு பேரை இரண்டு, இரண்டு பேரை தனிதனியாக அழைத்து சென்று சராமரியாக பைப், கம்பு, இரும்பு கொண்டு தாக்கியுள்ளனர்.

நடந்ததை பற்றி இவர்கள் கூறியதாவது,

எங்களை இவர்கள் இரத்தம் வராமல் உள்காயம் ஏற்படும் நோக்கில், போல்ட் நட் இரண்டு பக்கம் உள்ள பைப், டார்ச், கம்பு முதலிய வற்றை கொண்டு தாக்கினர். நாங்கள் கெஞ்சினோம்

அப்போதும் அவர்கள் விட வில்லை, யாராவது எங்க ளுக்கு ஆதரவாக பேசவந் தால் அவரை மிரட்டி மீண் டும் எங்களை கடுமையாக தாக்கினர், இதில் இந்த 4 நபர்களில் ஒருவரை ஆடை அவிழ்த்து நிர்வாணமாக தாக்கியுள்ளனர்.

கோரப்பட்டி கிராமத் தில் மொத்தமாகவே 40 வீடுகள் உள்ள நிலையில் எப்படி 1000 பேர் திரண்ட னர், இன்னும் 300 இரண்டு சக்கர வாகனம், மஹேந்திர வேன், டவேரா கார், மற்று மொரு சவர்லட் கார் நின்றி ருந்தது இது திட்டமிட்டு எங்களை (முஸ்லிம்களை) தாக்க முன்னரே ஏற்பாடு செய்து வந்தது என்று எங்க ளுக்கு நன்றாக புலப்பட் டது. இன்னும் ஆம்புல்ன்ஸ் நின்றிருந்தது.

RSS முக்கிய தலைவர்கள் நாங்கள் பாருங்கள் இந்த மாதிரி முஸ்லிம்களை தாக்கி யுள்ளோம் என்றும் இன்னும் இதன் மூலம் இந்து - முஸ் லிம் - கலவரத்தை ஏற்படுத்தி அரசியல் லாபம் பெற செய்ய வேலையாக இருந்தது, இந்த செயல்

இதில் ராஜாமுகமது அடிதாங்க முடியாமல் என்னை கொன்று விடுங்கள் என்று கெஞ்சியுள்ளார், இன்னும் அவர்கள் போல்ட் பைப், இரும்பு சிங்கப்பூர் லைட், கட்டை கொண்டு தாக்கினார் என்றார் காஜா மொய்தின் என்பவர்.

இதன் மூலம் அடித்தால் உடம்பு வீங்கும், கட்டை கொண்டு அடிப்பதால் நரம்பு அறுந்து போகும் ஒழிய இரத்தம் வராது.

பைப் கொண்டு சரியாக அங்கம்பார்த்து அடித்தனர் இதனால் எலும்பு உடை யும், இன்னும் கட்டைக் கொண்டு கவட்டையில் தாக்கியுள்ளனர்.

இன்னும் காதோடு காதாக பலமுறை தாக்கி யுள்ளனர். முஸ்லிம்கள் என்ன அண்ணே கிராமத்து ஆட்கள் நல்லவர்கள் என்று நினைத்தோம் என்று கூறிய போது, இந்த துலுக்கனிடம் என்னபேச்சு என பல திசை யில் இருந்து தாக்கியுள்ளனர், இவனுவங்க பிராத்தல் பண்ற வங்கடா என்று பெண்களை இழிவாகப்பேசி தாக்கி யுள்ளனர், கூட்டத்தில் சிலர் இவர்களின் ஜோலியை முடித்துவிடுங்கள் என்று கூறியுள்ளனர்.

முஸ்லிம்கள் சென்ற 20 நிமிடத்தில் காவல்துறை வந்து விட்டனர், அவர்களை பார்த்தவுடன் எதுக்கடா போலீசை கூட்டிட்டு வந்தே என்று கூறி முஸ்லிம்களை மீண்டும் கடுமையாக தாக்கி யுள்ளனர்.

இந்துத்துவா பயங்கர வாதிகள் போலீஸ் ஜீப்பை கவிழ்க்க முயற்சி செய்துள்ளனர். இறுதியில் மிகப்பெரிய போராட்டத் துக்குபின் போலிசார் முஸ் லிம்களை மீட்டு வளநாடு காவல் நிலையத்துக்கு அழைத்து சென்றுள்ளனர்.

பின்னர் மணப்பாறை அரசு மருவத்துவ மனைக்கு கொண்டு சென்றபோது இங்கு இடமில்லை என்று சொல்லிவிட்டனர். பிறகு தனியார் மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

மேற்கண்ட சம்பவத்தை தொடர்ந்து 10 பேரை காவல்துறை கைது செய்துள் ளனர், திமுகவை சேர்ந்த ஒருவர்தான் இந்த தாக்கு தலுக்கு ஏற்பாடு செய்துள் ளார். இன்னும் இந்து முன்னணி நிர்வாகிகள் போலீஸ் நிலையம் வந்து கைது செய்யப்பட்டவர் களை ஜாமினில் எடுக்க முயற்சி செய்துள்ளனர்.

**இந்த சம்பவம் இந்துத் துவ தீவிரவாதிகளின் திட்டமிட்ட சதியாக அப்பட்டமாக தெரிகிறது, கலவரம் ஏற்படுத்தி அதன் மூலம் ஆட்சியை கைப்பற்ற இந்துத்துவா சக்திகள் முயற்சிப்பது தெரிகிறது.**

– திருச்சியில் இருந்து
முகமது இக்பால், வாசிம்ராஜா.

# பலியாடுகளால் கொலை செய்யப்பட்ட பலியாடு

கோவை மாநகரம் தொழில் நகரமாக இருந்த நிலை மாறி கொலை நகரமாக மாறத் தொடங்கி வெகு நாட்களாகி விட்டது. நாம் மீண்டும் மீண்டும் அழுத்திச் சொல்லும் விசயம் தமிழ்நாடும் மெல்ல மெல்ல வடநாட்டைப் போல (ஹேமந்த் கர்கரே, கல்புர்கி போன்றோரை கொலை செய்த) கொலைக்களமாக மாறி வருவது தான். இதற்கு மூலகாரணம் R.S.S. B.J.P. யை சேர்ந்தவர்கள் தான். இந்தச் சதியின் அலையில் திராவிட பாரம் பரியமும் அடித்துச் செல்லப்பட்டு விடுமோ என்று அஞ்சத் தோன்றுகிறது.

இவர்கள் கொலை செய்வதற்காக தேர்ந் தெடுக்கும் நபர்கள் கீழ்த்தட்டு மக்களாக அல்லது அவர்களுக்காக போராடுபவர்களாக இருப்பார் கள். ஏனென்றால் போராட்ட குணமுள்ளவர் களையே கொலை செய்து விட்டோமென்றால் நடுத்தர மக்களும் உயர்குடிகளும் தானாக அடங்கிப் போய்விடுவார்கள். இதுதான் தற்போ தைய மத்திய அரசாங்கத்தின் திட்டம். இதனை தமிழ்நாட்டில் தீவிரமாக நடைமுறைப்படுத்து பவர்கள் B.J.P. மற்றும் R.S.S. (உதாரணம்) வெங் கையநாயுடு மற்றும் தமிழிசையின் ஆணவப் பேச் சுக்கள்: 'தமிழ்நாட்டில் பா.ஜ.க. காலூன்றும்'.

**பிரித்தார் பூமி ஆள்வார்**

முசுலிம்களுக்கு ஒரு பிரச்ணை என்றால் அவர்களுக்காக குரல் கொடுப்பவர்களில் முதன் மையானவர்களாக இறைமறுப்பு சிந்தனை கொண்டவர்கள் மற்றும் தலித் சகோதரர்கள். குறிப்பாக கூற வேண்டு மென்றால் திராவிட, கம்யுனிச சிந்தாந்தம் பேசுவோர். கறந்த பாலில் எவ்வாறு கலப்படம் இல்லையோ அதைப் போன்றதொரு உறவுதான் முசுலிம்களுக்கும் இவர் களுக்குமுள்ள உறவு. இதைப்பிரிக்கத் தான் பாரூக் கொலை.

**பாரூக் ஓர் அறிமுகம்**

பாரூக் இரும்பு ஸ்க்ராப் செய்யும் ஒரு சிறு வியாபாரி. அன்றாடங்காய்ச்சி. திராவிடர் கழகத்தை சேர்ந்தவர். இவருக்கு கடந்த மார்ச் மாதம் 16ம் தேதி இரவு 11மணிக்கு அலை பேசியில் அழைப்பு வருகிறது. அழைத்தவர் நெருங்கிய நண்பர் முனாஃப். தன்னுடைய இரு சக்கர வாகனத்தில் பெட்ரோல் தீர்ந்து விட்டதாகவும் வந்து உதவச் சொல்லியும் அழைத்துள்ளார். அதனடிப்படையில் உக்கடம் குப்பைக்கிடங்கு ஆடு வதை செய்யும் கூடத்தின் வாயிலருகே செல்கிறார். அங்கேயே வைத்து 11:30 மணியளவில் கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்படுகின்றார் பாரூக்.

இவர் கொலை செய்யும் அளவிற்கு என்ன செய்தார்? இது தான் மக்கள் மத்தியில் எழுந் துள்ள கேள்வி. இவர் இறைமறுப்பு கொள்கையை சேர்ந்தவர். இஸ்லாமிய கொள்கை கோட்பாடு களை கேலி கிண்டல் செய்ததாகவும் இஸ்லாமி யர்களின் தலைவர் நபியைப்பற்றி விமர்சித்த தாகவும் இவர் மீது குற்றச்சாட்டு. இதற்காக இதற்கு முன் யாருமே கொலை செய்ததாக வரலாறே இல்லையே!

அப்படி என்றால் கொலைக்கு காரணம் என்னவாக இருக்க முடியும் என்பதை ஊகிக்க முடிகிறதா? இந்தக் கொலைக்கு பிண்ணனியில் இருப்பவர்கள் யார்? இந்தக் கொலையால் அரசியல் ஆதாயம் அடையப்போவது யார்?

**விடையளித்தே தீர வேண்டிய கேள்விகள்:**

1) கோவையில் கொலை செய்யப்படுபவர் கள் அல்லது தாக்கப்படுபவர்கள் வியாழன் அன்று தான் இது போன்ற அசம்பா விதங்கள் நடக்கும். சசிக்குமாரும் பாரூக்கும் கொலை செய்யப்பட்டது வியாழன். மறுநாள் முஸ்லிம் களின் சிறப்புத் தொழுகை நடைபெறும் வெள்ளிகிழமை. ஆக கலவரம் செய்வதற்கு உகந்த நாள். இந்த ஸ்டைல் பி.ஜே.பிக்கு சொந்தமானது.




2) பாரூக்கை கொலை செய்தவர்களில் யாரேனும் ஏதேனும் இஸ்லாமிய இயக்கத்தை சேர்ந்தவர்களா? அப்படியே ஆம் என்றாலும் ஒரு மனிதனை ஒரு முஸ்லிம் எந்த காரணமுமின்றி கொலை செய்ய இஸ்லாத்தில் அனுமதியே இல்லை என்பது தெரியாதா என்ன? பாரூக்கை கொலை செய்ததற்காக சொல்லப்படும் காரணம் காரணமேயல்ல என்பது மட்டும் அப்பட்டமாக தெரிகிறது.

3) முனாஃப் என்பவன் அழைத்தால் உடனே அழைத்த இடத்திற்கு செல்லும் அளவிற்கு பாரூக் நெருங்கிய நண்பன். தன்னை கொலை செய்ய கூட தயங்க மாட்டான் என பாரூக் நினைத்திருந்தால் இரவு 11 மணிக்கு மேல் ஆள் நடமாட்டம் அவ்வப்போது இருக்கின்ற இடத்திற்கு சென்றிருக்க மாட்டானல்லவா?

4) பாரூக்கை கொலை செய்த மற்றும் அதற்கு முன் இரண்டு நாட்கள் அந்த பகுதியில் (கொலை செய்த இடத்தில்) மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. இது யாருடைய ஸ்டைல் என்று மக்களுக்கு தெரியாதா என்ன? கூரியுர் ஜின்னாபாய் என்ற செல்லையா மற்றும் தலித் தலைவர்கள் போன்ற மக்கள் இயக்க தலைவர்களை கொலை செய்யும் போது மின்சாரம் மிகச் சரியாக துண்டிக்கப்பட்டிருந்ததே? எப்படி? யார் உதவியுடன்?

5) கடந்த ஆறு மாத காலமாகவே தொடர்ந்து கரும்புக்கடை கவுண்டர் வயல் பகுதிக்குள் போலீஸ் வாகனம் இரவு நேரத்தில் ரோந்து சுற்றி வந்ததை நாம் நேரடியாகவே கண்டிருக்கின்றோம். அப்படியானால் அதையும் மீறி கொலை செய்ய ஒரு கூட்டம் திட்டமிடுகிறது என்றால் காவல்துறையின் ஆசீர்வாதம் கொலைகாரர்களுக்கு இருந்ததா? அப்படியென்றால் கொலை காரர்கள் என காவல்துறை கூறுவது பலியாடுகளையா? காவல் துறையின் துணையோடு கொலை மற்றும் கொள்ளையடிக்கும் கும்பல் யார் என்பது சசிக்குமார் கொலை செய்யப்பட்ட மறுநாள் நடந்த கலவரத்தின் போது பார்த்த மக்களுக்கு தெரியாதா என்ன?

6) இந்தக் கொலை அவசர கதியில் யாருடைய உத்தரவுக்கோ அல்லது மிரட்டலுக்காகவோ செய்யப்பட்டது என்பதற்கு பாரூக் மீது விழுந்த வெட்டுக்கள் தான் சாட்சி.

**திராவிட இயக்க சகோதரர்களே!**

திராவிட இயக்க சகோதரர்கள் தாம் வாழும் காலத்தில் கூட இறைமறுப்பு கொள்கையை கடைப்பிடிக்க முடிவதில்லை. எப்படி? தங்களுடைய பெயர்களில் கூட இந்து மதமோ, இஸ்லாமோ அல்லது கிறித்தவமோ ஒட்டிக் கொண்டிருக்கும். இன்னும் சொல்லப்போனால் கடவுள் இல்லை என்று தமிழகத்தில் முழக்கமிட்ட பெரியார் என்ற ஈ.வெ.ராமசாமி நாயக்கர் தன்னுடைய பெயரில் சாதி மட்டுமல்ல பிரிவின் (நாயக்கர்) பெயரைக்கூட பிரிக்க முடியவில்லை.

ஒரு இறைமறுப்பு கொள்கையை சேர்ந்தவர் இறந்தவுடன் அவர் மீது அவர் சார்ந்த மத சடங்கு சம்பிரதாயங்களை யாராலும் பிரிக்க முடியவெ முடியாது. இறைமறுப்பு கொள்கையை சேர்ந்தவர்களுக்கென்று இதுவரை உலகத்தில் தனி சுடுகாடுகளோ இடுகாடுகளோ அல்லது சடங்கு சம்பிரதாயங்களோ கிடையாது.

உதாரணத்திற்கு பாரூக் என்ற பெயர் இஸ்லாமிய பெயர். இதன் அர்த்தம் வாய்மையாளன். பாரூக் தன் குழந்தைகளுக்கு சூட்டிய பெயர்கள் அப்ரீத், அனபா. பாரூக் தன் குழந்தைகளை சேர்த்து விட்ட பள்ளிக்கூடம் ஜமாத்தே இஸ்லாமி என்ற இஸ்லாமிய இயக்கத்தை சேர்ந்த இஸ்லாமியா மெட்ரிகுலேஷன் பள்ளி. இறுதியாக பாரூக்கை புதைப்பதற்கு தேவைப்பட்டது முஸ்லிம்களின் அடக்கத்தலமான ஒரு பள்ளிவாசலின் கப்ர்ஸ்தான்.

இங்கே பாரூக் வாழ்க்கையில் நீங்கள் கண்ட திராவிடம் எந்த இடத்தில் கூறுங்கள்.

**வாசகர்களே!**

பாரூக் என்ற திராவிட கட்சி பிரமுகர் (பலியாடு) கொலை செய்யப்பட்டதும் பலியாடுகளால் தான் என்பது வழக்கின் இறுதியில் அல்லது வருங்காலத்தில் தெரியவரும்.

**– கோவையிலிருந்து நமது நிருபர்.**

# ஆட்சி மொழியாக்கப்படும் ஹிந்தி

**ஹிந்தி திணிப்பு** : (பி.ஜே.பி.) அரசாங்கம் பல தகிடுதத்தங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறது. அதில் ஒரு திட்டமாக தமிழகத்தில் ஹிந்தி மொழியை திணிக்க முயற்சித்து வருகிறது.

31 மார்ச் அன்று வந்திருக்கும் இந்தி திணிப்பு உத்தரவு 2011 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட பரிந்துரைகளின்படி அளிக்கப்பட்டது. ஆறு வருடங்கள் கழித்து இப்போது பரிந்துரைகளைச் செயல்படுத்த வேண்டிய கட்டாயம் என்ன? இரண்டாவதாக மாநில அரசுகளின் கருத்துகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன என்று அந்த உத்தரவு கூறுகிறது.

117 பரிந்துரைகளில் பெரும்பாலானவற்றை ஏற்றுக்கொள்வதாக குடியரசுத் தலைவர் அறிவித்துள்ளார். குடியரசுத் தலைவரின் ஒப்புதல் என்பது மத்திய அரசின் ஒப்புதலே அன்றி வேறல்ல.

பள்ளிகளில் ஹிந்தி மொழியை கட்டாய மாக்குவதன் முதல் கட்டமாக சி.பி.எஸ்.இ. கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு வரை ஹிந்தி மொழியை கட்டாயமாக்குவது அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் ஹிந்தி படிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது, குடியரசுத் தலைவர், அமைச்சர்கள், மத்தியரசு அதிகாரிகள் இனி ஹிந்தியில்தான் பேசவும், எழுதவும் வேண்டும். மத்திய அரசு பணியில் சேர விரும்புவோர் ஹிந்தி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்பன உள்ளிட்ட பரிந்துரைகளாக ஏற்றுக் கொள்வதாக குடியரசுத் தலைவர் அறிவித்துள்ளார்.

இந்தியாவில் பல்வேறு மொழிகளைப் பேசக்கூடிய மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தற்போது மத்திய அரசின் அலுவல் மொழியாக ஆங்கிலமும் ஹிந்தியும் உள்ளன. அரசியல் சாசனத்தின் 8–வது அட்டவணையில் இடம் பெற்றுள்ளன.

## இந்தியாவை ஆளும் மத்திய அரசு

**மோடியின் முயற்சிகள்**

மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் கீழ் மத்திய இந்தி நிறுவனம் செயல்படுகிறது. இந்தி மொழியின் வளர்ச்சிக்காக பாடுபடுவோருக்கு சுப்ரமணிய பாரதியார் உட்பட 12 மொழி அறிஞர்களின் பெயரில் இந்த அமைப்பு ஆண்டு தோறும் விருது வழங்கி வருகிறது. தற்போது 2015 ஆம் ஆண்டுக்கான விருதுகள் அறிவிக்கப் பட்டுள்ளன.

இதில் தமிழிலே இந்தி மொழி அறிஞருமான எம். கோவிந்தராஜன் உள்ளிட்ட 5 பேருக்கு கவ்கா சரண் சிம்ம விருது அறிவிக்கப்பட்டுள்ளது. ரூ. 5 லட்சம் பொற்கிழி, சால்வை மற்றும் பாராட்டுப் பத்திரம் கொண்டு இந்த விருதை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி விரைவில் வழங்க வுள்ளார். (ஆதாரம் : தி ஹிந்து 25–04–2017)

புது தில்லியில் ஞாயிற்றுக்கிழமை மாநில முதல்வர்கள் பங்கேற்க நிதி ஆயோக் கூட்டத்தில் மோடி பேசியது...

பன்முகத் தன்மை கொண்ட நம் நாட்டில் எப்படி ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என சிந்திக்க வேண்டும். இதற்கான ஒரு மாநிலம், மற்ற மாநிலத்தில் உள்ள புரிந்துணர்வு? மேற்கொண்டு இணைந்து செயல்பட கேட்டுக் கொள்கிறோம். (ஆதாரம் : தினமணி 24–04–2017)

40 நாட்களாக தில்லி ஜந்தர் மந்தரில் அய்யாக்கண்ணு தலைமையில் விவசாயக் கடன் ரத்து செய்யக் கோரி போராட்டம் நடைபெறும் போது பேசாத மோடி தமிழகத்தில் ஹிந்தியை திணிக்கும்போது தமிழக மக்கள் எதிர்ப்புத் தெரிவித்த உடன் பன்முகத் தன்மையுடன்

செயல்பட வேண்டும் என்கிறார்.

**திணிப்பு தாக்குதல் :** ஆட்சி மொழிக்கான நாடாளுமன்றக் குழு அளித்துள்ள பரிந்துரைகளும் அவற்றில் கணிசமான வற்றுக்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்திருப்பதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.

தாய்மொழியில் ஆரம்பக் கல்வி அளிப்பதே மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்தும் என்று கல்வியாளர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். ஆக முதல் மொழி தாய்மொழி, இரண்டாவது மொழி சர்வதேசத்துடனான இணைப்பு மொழியான ஆங்கிலம், அதற்கு அடுத்து வேண்டுமானால் ஹிந்தி என்பதே சரியான முறையாக இருக்கும்.

மத்திய அரசின் வேலை வாய்ப்புகளுக்கான தேர்வுகளில் இந்தி கட்டாயப் பாடமாக வைக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரையைக் குடியரசுத் தலைவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இருந்தாலும், அந்தப் பரிந்தரையில் பின்னுள்ள நோக்கம் புரிந்து கொள்ள முடியாதது அல்ல. இந்தி தெரியாதவர்களுக்கு இனிமேல் மத்திய அரசு வேலை வாய்ப்புகள் மறுக்கப்படும் என்ற எச்சரிக்கை மணிதான் அது. (ஆதாரம்: தி ஹிந்து 24–04–2017)

**சதி :** நாடாளுமன்றத்தில் ஆங்கிலத்தை அகற்றி விட்டால் எந்த மொழி இணைப்பு மொழியாக இருக்கும்? இந்தி! இது இந்தி பேசாத மாநிலங்களிலிருந்து வரக்கூடிய இந்தி தெரியாத ஒரு எம்.பி., அமைச்சராக மட்டுமல்ல உறுப்பினராகக் கூட செயல்பட முடியாத ஒரு நிலையைத் திட்டமிட்டு உருவாக்குகிறது மத்திய அரசு.

**சட்ட திருத்தம் :** இந்திய ஆட்சி மொழிகள் (ஒன்றியத்தின் அலுவலக நோக்கங்களுக்கான பயன்பாடு) விதிகள் 1976 (திருத்தம் 191) ஆனது. ஆட்சி மொழி சட்டத்திலிருந்து தமிழகத்துக்கு விதிவிலக்கு அளித்திருக்கிறது. இந்த சட்டமானது இந்தியா முழுமைக்கும் பொருந்தும் ; தமிழ்நாடு நீங்கலாக என்று மேற்கண்ட விதிகள் ஆவணத்தின் பிரிவு, இரண்டாவது அம்சம் கூறுகிறது. (They shall expand to the whole of India. except the state of Tamilnadu)

இந்திய அரசின் சாசனத்தின் அடிப்படையிலேயே தமிழை ஒன்றிய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்க போராட வேண்டும்.



**ஹிந்தி தேசிய மொழியா?**

இந்திய சட்டத்தின்படி ஹிந்தி மொழி இந்தியாவில் 40 சதவீதத்திற்கு குறைவாகவே பேசப்படுகிறது. மற்ற 60 சதவிகிதம் அவர்களது தாய் மொழியில் பேசப்படுகின்றன.

பிரிவுக்கூறு 343/1 : இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி பிரிவு 343/1 கூறுகிறது இந்தியாவில் சமீபமாக 22 மொழிகள் அட்டவணையில் உள்ளது.

அவைகள் அஸ்ஸாரிஸ், பெங்காளி, போடோ, டோகிரி, குஜராத்தி, ஹிந்தி, கன்னடா, காஷ்மிரி, கோர்கானி, மைங்கிலி, மலையாளம், மிடிய் (மணிப்பூரி), மராத்தி, நேபாளி, ஒடிசா, பஞ்சாபி, சமஸ்கிருதம், சண்டாளி, சிந்தி, தமிழ், தெலுங்கு, உருது...

இதுபோன்று இந்தியாவில் இன்னும்பல மொழிகள் பேசப்பட்டு வருகிறது. அதில் ஆங்கில மொழி அதிகமாக பேசப்படுகிறது.

**தாமரை மலரும் :** ஒடிசாவின் தலைநகரான புவனேஸ்வரத்தில் ... 15, 16 ஏப்ரல் 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு மோடி, அத்வானி, அமித்ஷா ஆகியோர் பேசினர். இந்தியாவில் பா.ஜ.க. அரசு காலுன்ற முடியாத மாநிலங்களில் எப்படி செயல்படுவது என்றும் அதற்காக அன்றாட உணவுக்காக கஷ்டப்படும் மக்களின் செயல்களை முடக்கும் விதமாக பல திட்டங்களை கொண்டு வந்து அதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதுபோல் செய்து ஆதாயம் தேடுகிறது.

நாட்டில் கிழக்குப் பகுதியில் உள்ள ஒடிசா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் ஆட்சிய

மைப்பதே பா.ஜ.க. இலக்காகும். இதே போல் எதிர்காலத்தில் தமிழகம், கேரளா விலும் ஆட்சியமைக்க பா.ஜ.க. முனைப்புடன் செயல்படும் என்று பா.ஜ.க. தலைவர் அமித்ஷா குறிப்பிட் டார்.




அ வ ர் க ளி ன் செயல்களில் ஒரு பக்கம் மக்களின்கவனம்செலுத் தப்படும் பொழுது மறுபக்கம் அவர்கள் தகிடுதத்தங்கள் செய்து கொள்கிறார்கள்.

தமிழகத்தின் நெடுஞ்சாலைகளில் சில தினங் களுக்கு முன் ஆங்கிலத்திலும் ஹிந்தி மொழி யிலும் எழுதப்பட்டிருந்தது. இதற்கு வெளி மாநிலங்களில் இருந்து வருபவர் எளிதில் அறியும் வண்ணமாக அமைக்கப்பட்டன என்றன. அப்போது உள் மாநிலங்களில் உள்ள மக்கள் இதை எப்படி அவர்கள் புரிந்துகொள்ள முடியும்?

பா.ஜ.க.வினர் திணிப்புகளை சாமர்த்தியமாக சாமானியமக்கள்மீது அடைய செயல்படுகின்றனர்.

**ஹிந்தி மொழியின் நோக்கம் :** தென் ஆசியாவில் அதிகமாக மக்கள் பேசப்படும் பிரசித்திப்பெற்ற மொழியாக ஹிந்தி மொழியும் உள்ளது. ஹிந்தி மற்றும் உருது மொழிகள், நேபாளம், பங்களா தேஷ், இலங்கை ஆகிய இடங்களில் இரண்டா வது மொழியாக பேசப்படுகிறது. வட இந்தியா வில் முகலாய பேரரசர்கள் காலத்தில் ஹிந்தி மொழி தோற்றுவிக்கப்பட்டது.

1881ஆம் ஆண்டு பீகார் மாநிலத்தில் முதன் முதலாக ஹிந்துஸ்தானி / உருது மொழியாக பதியப்பட்டது. ஹிந்துஸ்தானி என்பதை பிரித்து ஹிந்தி மற்றும் உருது மொழியாக கருதப்படு கின்றன. (BRôWm The Hindustani Language by John Shakespear, 1845)

**போராட்டங்கள் :** 1 மே 1938 அன்று ஸ்டாலின் ஜகதீசன் என்ற இளைஞர் ஒருவர் கட்டாய இந்திக் கல்வியை எதிர்த்து உண்ணா நோன்பு இருக்கலானார். அவர் போராட்டக்காரர்களின் சின்னமாக விளங்கினார். விடுதலை இதழில் வெளி யான நேர்முகமொன்றில் தமிழ்த் தாய்க்கு இன்றும் உண்மையான மகன்கள் இருக்கின்றார்கள் என்று கூறினார்.

**தமிழர் படை :** ஆகஸ்ட், செப்டம்பர் 1938 காலக் கட்டத்தில் பெரியாரின் சுய மரியாதை இயக்கத் தினரும், முஸ்லிம் லீக்கும் இணைந்து ஓர் எதிர்ப்புப் பேரணியை நடத்தினர். திருச்சியிலிருந்து பெரியாரும் கலிபுஃல்லாவும் இதனைக் கொடியசைத்து தொடங்கி வைத்தார் கள். நடைப் பயணம் மேற்கொண்டவர்கள் தமிழ் படை என அழைக்கப்பட்டனர்.

ஆகஸ்ட் அன்று குமாரசாமி பிள்ளை மற்றும் மூவலூர் ராமாமிருதம் அம்மாள் தலைமையில் பேரணி புறப்பட்டது. அடுத்த 42 நாட்களில் 234 சிற்றூர்களுக்கும் 60 நகரங்களுக்கும் சென்று 81 பொதுக் கூட்டங்களை நடத்தி பரவலான ஆதரவைத் திரட்டினர். 11 செப்டம்பர் 1938 அன்று சென்னை வந்தடைந்தனர்.

**பிராமண எதிர்ப்பு :** இந்தித் திணிப்பு எதிர்ப்பு இயக்கத்தினர், தமிழ் மீது இந்தி மற்றும் சமசுகிருத திணிப்பை மேற்கொள்ள பிராமணர்கள் செய்த முயற்சியாக கட்டாய இந்திக் கல்வி சட்டத்தை கருதினர்.

நவம்பர் 1938ல் சென்னையில் நடந்த இந்தித் திணிப்பு எதிர்ப்புப் பேரணியொன்றில் வன்முறை வெடித்துப் பிராமணர்கள் தாக்கப்பட்டனர்.

## தி.மு.க.வின் இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கொள்கை

நிறுவனர் அண்ணாதுரை 1938–40களில் இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டங்களில் பங்கேற்றவர். தி.மு.க.வினர் சூலை 1953 ஆம் ஆண்டு “டால்மியாபுரம்” என்ற ஊரின் பெயரைத் தமிழில் கல்லக்குடி என்று மாற்ற வேண்டும் என்று போராட்டம் நடத்தினர்.

*15 சூலை 1953 அன்று மு.கருணாநிதியுடன் பிற தி.மு.க. தொண்டர்களும் டால்மியாபுரம் தொடர்நிலைப் பெயர் பலகையில் இருந்த இந்தி எழுத்துக்களை அழித்து இருப்புப் பாதையில் படுத்து வண்டி போக்குவரத்தைத் தடுத்தனர். அப்போது காவலர்களுடன் நடந்த கைகலப்பில் இருவர் மரண மடைந்தனர். கருணாநிதி உட்பட ஏனையவர்கள் கைது செய்யப்பட்டு சிறை சென்றனர்.*

*1957−இல்தி.மு.க. இந்தித்திணிப்பைஎதிர்த்து மாநாடு நடத்தியது. 13 அக்டோபர் 1951ஆம் ஆண்டு நாளை இந்தி திணிப்பு எதிர்ப்பு நாளாக அறிவித்தது. நவம்பர்1963ஆம் ஆண்டு அலுவலக மொழிச்சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர் இந்த எதிர்ப்பு மேலும் வலுவடைந்ததது. இந்தி பெரும்பான்மையினரால் பேசப்படுகிறது என்ற கூற்றுக்கு அண்ணாதுரை தன் பதிலுரையில் எண்ணிக்கைகளால் முடிவுகள் எடுக்கப்படு மானால் இந்தியாவின் தேசியப் பறவை மயிலாக இருக்காது. காகமாகத்தான் இருக்கும் என்றார்.*

*இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்களில் இறந்தவர்களுக்காக சென்னையில் கட்டப்பட்டுள்ள மணி மண்டபம். (ஆதாரம் : தமிழ் : மொழிப் போர்த்தியாகிகள் மண்டபம்,* Surya Prakash S.A*)*

**2014-ல் இந்தித் திணிப்பு :** *நரேந்திர மோடியின் பாரதீய ஜனதா கட்சி ஆட்சியின்போது 2014 ஆம் ஆண்டில் மீண்டும் இந்தித் திணிப்பிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அது தொடர்பான அறிக்கையில்*

*"பிரதமர் நரேந்திர மோடியின் முன்னுரிமைப்படி வெளியிடப்படும் ஆணை − சமூக வலைத்தளங்களில் அரசு அதிகாரிகள் இந்தி மொழியை பயன்படுத்த வேண்டும் என்று மத்திய அரசின் உள்துறை கேட்டுக் கொள்கிறது.*

*இதை வைகோ, கருணாநிதி போன்றவர்கள் எதிர்த்தனர்.*

*செப்டம்பர் 2014−ல் நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கு நடுவண் உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் அலுவல் மொழித்துறையின் சார்பில் ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. இந்தி, ஆங்கிலமும் முதன்மைப் பாடமாக்க வேண்டும் என்று, பிறகு பல திராவிட, தமிழ் அமைப்புகள் எதிர்ப்புக்குப் பின் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டது. பிறகு பல்கலைக் கழக மாநில குழுவின் தலைவர் பிரகாஷ் கூறியதாவது*

*ஆங்கிலத்துடன் இந்தியும் முதன்மை பாடமாக கற்பிக்கப்பட வேண்டும் என்ற முந்தைய சுற்றறிக்கை கவனக்குறைவாக வெளியிடப்பட்டு*



*விட்டது. எனவே, 'இந்தி கட்டாயம் அல்ல' என்ற புதிய சுற்றறிக்கையை வெள்ளிக்கிழமை (செப்டம்பர் 19, 2014) வெளியிட பல்கலைக் கழக மாநில குழு முடிவு செய்துள்ளது. எப்படி கற்பிப்பது, யார் கற்பிப்பது, என்ன கற்பிப்பது என்பதை முடிவு செய்வது அந்தந்த பல்கலைக் கழகங்களின் தனிப்பட்ட உரிமை ஆகும்.*

*(ஆதாரம் :* To 20, Sep 2014, Daily Thanthi, 20 Sep, 2014*) (வாபஸ் : தினத்தந்தி 20, செப். 2014)*

**தீர்வு :** பா.ஜ.க. அரசு இந்தி திணிப்பு முயற்சியை தளராமல் செயல்படுத்தி வருகிறது. ஆகையால் தமிழ்நாட்டில் மக்கள் பல போராட்டங்கள், பொதுக் கூட்டங்கள், தீர்மானங்கள் மூலம் தடுத்து வருகின்றார்கள். இதில் பல பல நபர்கள் தங்களை உயிர்த்தியாகம் செய்துள்ளனர். வரவிருக்கும் நாட்களில் இந்த ஹிந்தி மொழியைதமிழ்நாட்டில் அண்ட விடாமல் பாதுகாப்போம்




# கூரியூர் முகமது அலீ ஜின்னா - ஷஹீத் நூல் வெளியீட்டு விழா

**இம்மாதம் 23/04/2017 மாலை 6.00 மணியளவில் மேட்டுப்பாளையத்தில் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் ட்ரஸ்ட் சார்பாகவும் வைகறை வெளிச்சம் பத்திரிக்கையின் சார்பாகவும் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் சார்பாகவும்"கூரியூர் முஹம்மது அலீ ஜின்னா ஷஹீத் புத்தகம் வெளியிடப்பட்டது.**

இந்நிகழச்சியின் முக்கிய அழைப்பாளர்களாக வழக்குரைஞர். பழனிச்சாமி MA.BL, தமிழ்புலிகள் கட்சியின் மாநில துணைப் பொதுச்செயலாளர் சபாபதி, மற்றும் தமிழ்புலி இயக்கம் சார்ந்த இளவேனில் இப்ராஹிம், ஆதித்தமிழன், வி.சி.க கட்சியின் மண்டல செயலாளர் சுசி கலையரசன், மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த வை.குடியரசு ஆகியோர் கலந்து கொண்டார்கள். சிறப்புரை ஆற்ற வைகறை வெளிச்சத்தின் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்களும், சஹீது கூரியூர் முஹம்மது அலீ ஜின்னாவுடைய நண்பர் ஜக்கரியா அவர்களும் கலந்து கொண்டனர்.

தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் உறுப்பினர்களான உமர் ஃபாருக் தலைமை உரை நிகழ்த்தியும், சகோ சிராஜுதீன் திருக்குர்ஆன் ஓதியும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்கள். அதன் பின்னால், சிறப்பு அழைப்பாளர்கள் புத்தகத்தை பற்றிய கருத்துரை வழங்கினார்கள்.

இதுபோன்ற இன்னும் பல புத்தகங்களை எழுத்தாளர் மு.குலாம் முஹம்மது அவர்கள் எழுத வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

**பேச்சாளர்களின் கருத்துரை சுருக்கம்,**

**வழக்குரைஞர் பழனிச்சாமியின் கருத்துரை.**

ஒவ்வொருவரும் தங்களுக்கு பிடித்த மதத்தை பின்பற்றவும் அதனை நோக்கி மற்றவர்களை அழைப்பதும் அரசியல் சாசனம் அளித்த உரிமை. அப்படி அரசியல் சாசனத்திற்குட்பட்டு போராடிய ஒரு போராளியை எதிரிகள் அநியாயமாக கொன்றுள்ளனர்.

சாதி ரீதியான அடிமை வாழ்க்கை வாழ முடியாமல் இஸ்லாத்திற்கு சென்றவர்கள் தான் இன்றைய இஸ்லாமியர்கள். அவர்களது முயற்சிக்கு நாம் என்றும் உடன் நிற்க வேண்டும்.

ஷஹீத் கூரியூர் முகம்மது அலீ ஜின்னாவின் நண்பர் ஜக்கரியா அவர்களின் சிறப்பரை.

முஸ்லிமாக மாறுவதற்கு முன் பல்வேறு தலித் போராட்டங்களையும் மேற் கொண்டு! திமுக, அதிமுக பல்வேறு அரசியல் கட்சிகளில் இருந்தும் தலித்களின் உரிமைக்காக போராடியும் எங்களுக்கு விடுதலை எதிலிருக்கிறது என தெரியவில்லை. இஸ்லாம் தான் தீர்வு என எங்கள் ஊருக்கு இஸ்லாத்தை எடுத்து வந்தார் கூரியூர் முகம்மது அலீ ஜின்னா. பிரச்சாரம் செய்தார். நாங்கள் சிந்தித்தோம்! இன்று முஸ்லிம்கள்.

நாங்கள் அம்பேத்கரை புரிந்து கொண் டோம். அவர் எங்களுக்கு மதமாற்றம் ஒன்றே தீர்வு வேறு தீர்வு இல்லை என கூறினார். அந்த வழியை பின்பற்றி இஸ்லாமியனாக மாறி இன்று விடுதலை அடைந்திருக்கிறேன்.

என் தந்தை கோவிலிலே மணி அடித்தார் ஆனாலும் அவருக்கு கோவிலுக்குள் அனுமதி இல்லை. ஆனால் என் பேரனுக்கு இன்று 15 வயது. ஊரின் பெரிய மனிதர்கள் எல்லாம் அவன் பின்னால் நின்று தொழுகிறார்கள். நான் யாரை நினைப்பது என் தந்தையையா?.. பேரனையா?..

தலித்கள் பேர் சொல்லி கட்சி வளர்க்கிறார் கள் சிலர்! ஆனால் தலித்களுக்கான விடுதலை இஸ்லாத்தில் தான் உள்ளதென்று சொல்ல மறுக்கிறார்கள்!. சிந்தியுங்கள் ஆய்வு செய்யுங் கள் இஸ்லாம் ஒன்றே நம் விடுதலைக்கான தீர்வு இதை தவிர்த்து நமக்கு விடுதலையும் வாழ்வும் வேறேங்கும் இல்லை.

**தமிழ்ப்புலிகள் இன வேனில் இப்ராஹிம் அவர்களின் கருத்துரை -**

கூரியூர் முகம்மது அலீ ஜின்னா! இந்து சமூக கட்டமைப்பில் மாட்டிக் கொண்ட ஒருவர். அந்த ஒருவரின் போராட்டம் தான் இந்த வீரமரணம். இப்படியான போராளி களை எங்களுக்கு புத்தகங்கள் மூலம் கொண்டு வந்து சேர்ந்த எங்கள் அண்ணன். குலாம் முஹம்மது அவர்களுக்கு நன்றிகள்.

கூரியூர் ஜின்னா, அமெரிக்காவிலோ வெளிநாடுகளிலோ இருந்தவர் அல்ல! நம் நெருக்கத்திற்குள்ளான பகுதியில் வாழ்ந்து வீரமரணம் அடைந்த போராளி! ஆனாலும் அவரை அறிந்து கொள்ள எனக்கு 40 ஆண்டுகள் ஆகிவிட்டது. இது எவ்வளவு பெரிய அவலம்.

தலித்கள் தங்கள் விடுதலைக்காக இஸ் லாத்தை ஏற்பதால் தனிமைப்படுத்தப்படு கிறார்கள். இருந்தாலும் நாங்கள் தமிழ்ப் புலி கள் சார்பில் உறுதுணையாய் என்றும் துணை நிற்போம்.

எனக்கு ஆர்.எஸ்.எஸ் பற்றி நன்றாக தெரியும்! நான் அதில் மாவட்ட பொறுப்பாள ராக இருந்தவன். அப்போது நான் இருந்த பகுதியில் ஒரு மாட்டுக்கறி கடை அதை உடைத்து கலவரம் பண்ண சொல்லி எனக்கு கட்டளை. அந்த கடையை முழுவதும் சூறை யாடினேன். கடை சூறையாடப்பட்டது என்ற தகவலை எனக்கு கட்டளை கொடுத்தவனிடம் சொல்கிறேன். அவனிடமிருந்து அதே இடத் தில் இன்னொரு மாட்டுக்கறி கடையை நீ வை என்று கட்டளை வருகிறது.

பின்னாளில் நான் மனமாறி எல்லா வற்றிலிருந்தும் விலகி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். தொழுகைக்கு சென்று வரும் போது ஒரு நாள் நான் இடித்து நாசமாக்கிய கடையின் முதலாளி என்னை பார்க்கிறார். தொப்பியுடன் தொழுது விட்டு வெளிவந்த வனை ஓடி வந்து அணைத்து இவ்வளவு நாள் எப்படியிருந்தாயோ தெரியாது. இனி நீ நன்மையே செய்வாய்! அல்லாஹ் உன் மனதை மாற்றி விட்டான் என்றார்.

தன் கடையை சேதப்படுத்திய ஒருவனை அழைத்து இப்படியொரு வார்த்தை சொல்ல முடிகிறதென்றால் அதுதான் இஸ்லாம்.

எங்களுக்கும் கூரியூர் முகம்மது அலீ ஜின்னா பெற்ற வீரமரணம் தான் வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். அதுவரை நாங்கள் போராடுவோம். எப்போதும் உங்களுடன் நாங்கள் இருப்போம். ஆசிரியருக்கு மன மார்ந்த நன்றிகள்.

**தமிழ்புலி ஆதித்தமிழன் அவர்களின் கருத்துரை:**

தோள் கொடுக்க மறுத்து, நான்கு வர்ணங் களாய் பிரித்து! கோவிலுக்குள் நுழையக் கூடாது, நீ என் தெருவில் நடக்கக் கூடாது, செருப்பு போடக்கூடாது, பேசுவதற்கு, நடப் பதற்கு என எல்லாவற்றிலும் அடிமைத் தனத்தை புகுத்தி தலித்களை கொடுமைப் படுத்திய மதம் இந்து மதம். நமக்கெல்லாம் தீர்வு கிடைக்க வேண்டுமென்றால் அது இந்து மதத்தை விட்டு வெளியேறினால் தான் கிடைக்கும் என அம்பேத்கர் கூறினார்.

அந்த வழி தான் நமக்கான விடுதலை. இஸ்லாம் அல்லது பவுத்தம் இந்த இரண்டில் ஏதாவது ஒன்றிற்கு மாறுவதே நமக்கான விடுதலை என நாம் உணர வேண்டும்.

**விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த வை.குடியரசு அவர்களின் கருத்துரை:**

கூரியூர் முகம்மது அலீ ஜின்னாவின் வாழ்க்கையை புத்தமாக எழுதிய ஆசிரியர் குலாம். முஹம்மது அவர்களுக்கு பாராட் டுகள். எங்களுக்கு இந்த மதமாற்றத்தில் நம்பிக்கையில்லை எனும் போதும் இஸ்லாமி யர்கள் எங்கள் தொப்புகொடி உறவுகள் அவர்களிடம் எந்த தீண்டாமையும் இல்லை.

உலகத்தில் அனுப்பப்பட்ட ஒரு லட்சத்து இருபத்தி நான்காயிரம் நபிமார்களில் கடைசி நபியாக அனுப்பப்பட்டவர் முகம்மது நபியவர் கள் அவர்கள் பெரும் சிரமத்திற்கு பின்னால் ஒரு மசூதியை எழுப்புகிறார். அந்த மசூதியில் ஒரு முக்கியமான பொறுப்பு, பாங்கு சொல் லும் பொறுப்பை ஒரு அபீசினிய அடிமை தடித்த உதடுகள் கொண்ட பிலால் என்பவரி டம் ஒப்படைத்து புரட்சி செய்கிறார்.

நாங்கள் இஸ்லாத்தை ஒரு மதமாக பார்க்க வில்லை அதனை எங்களை போன்றவர்கள் ஒரு புரட்சிகரமான இயக்கமாக தான் பார்க் கிறோம்.

திப்பு சுல்தானின் தளபதிகளில் இருவர் மிக முக்கியமானவர்கள். பூர்ணையா மற்றும் சந்திரய்யா இருவருமே தாழ்த்தப்பட்ட வகுப்பை சார்ந்தவர்கள். இஸ்லாமியர்களுக் குள் என்றும் தாழ்த்தப்பட்டவர்கள் மேலான வர்கள் என்ற எண்ணம் இருந்ததில்லை.

புத்தக வெளியீட்டிற்கு என்னை அழைத்த தாருல் இஸ்லாம் நிர்வாகிகளுக்கு நன்றி.

**தமிழ்புலிகள் துணைப்பொதுச்செயலாளர் சபாபதி அவர்களின் கருத்துரை:**

(அம்பேத்கர் புகழ் பாடும் பாடலுடன் தொடங்கியவர்) என் சிறு வயதில் நானும் என் சித்தியும் கல்யாண வீடுகளுக்கு செல்வோம். அங்கே ஒரு மூலையில் தலித்கள் கழிவுகளுடன் நிற்க வைக்கப்பட்டிருப்பார்கள். எல்லா உயர் சாதியினரும் சாப்பிட்ட பிறகு நாங்கள் நிற்கின்ற ஓலை விலக்கப்படும், எங்களுக்கு கீழே சாப்பாடு போடப்படும். அப்போது யோசித்தேன் என்னடா இது ஏற்றத்தாழ்வுகள் என அன்றே அம்பேத்காரை படிக்க ஆரம்பித் தேன். இன்று ஒரு புரட்சியாளனாக நிற்கிறேன்.

நாங்களும் முஸ்லிம்களும் அண்ணன் தம்பி போன்றவர்கள்! அதனால் உரிமை யோடு கேட்கிறோம் பதில் சொல்லுங்கள், 1932 ஆம் ஆண்டு வட்ட மேஜை மாநாடு காந்தி, அம்பேத்கர், ஜின்னா அனைவரும் கலந்து கொண்டார்கள், கிறிஸ்துவர்களுக்கு, முஸ்லிம்களுக்கு இரட்டை வாக்குரிமை என சொல்லப்பட்டது காந்தி ஏற்றுக் கொண்டார். ஆனால் தலித்களுக்கு இரட்டை வாக்குரிமை கேட்கப்பட்ட போது காந்தி மறுத்து அவர்கள் இந்துக்கள் இதற்கு ஒத்துக் கொள்ள முடியாது என்றார். ஆனால் தலித்களின் இரட்டை வாக்குரிமைக்கு முஸ்லிம்கள் சார்பாக சென்ற ஜின்னா கூட ஒப்புதல் அளிக்கவில்லை. அதற்கான பதிலை சகோதரர்கள் சொல்ல வேண்டும்.

இந்த கூரியர் முகம்மது அலீ ஜின்னா நூல் சொல்வதெல்லாம் பிளவுப்பட்டு நிற்காதீர்கள் ஒற்றுமைப்படுங்கள் என்பது தான். அதை இந்த நூல் செய்யும் என நம்புகிறேன்.

நாடார்களின் சமூகத்திற்கு மார்பக வரி

இருந்தது அதை எதிர்த்து போராடி அந்த இழிவை நீக்கியவர் பெரியார். இன்று அந்த நாடார் சமூகத்திலிருந்து வந்த தமிழிசை போன்ற அரசியல்வாதிகள் பெரியாருக்கு எதிராக பேசுகிறார். மதியம் ஒரு தொலைக் காட்சி நிகழ்ச்சியில் பாஜகவின் ஹெச் .ராஜா பேசுகிறார், அடுத்த ஜனாதிபதி, துணை ஜனாதிபதி ஆர்.எஸ்.எஸ் தலைவர் என்கிறார். அவருக்கு இந்த தைரியமெல்லாம் எங்கிருந்து வந்தது! நாம் ஒன்றுபட்டால் அவர்கள் இல்லாமல் போவார்கள்.

தலித் சமூகத்திலிருந்து பல தலைவர்கள் முஸ்லிம்களாக மாறுகிறார்கள் ஆனால் அவர்கள் அதற்கு பின்னால் அரசியல் போராட் டங்களை முன்னெடுக்க மறுக்கிறார்கள் இதையெல்லாம் சரி செய்ய வேண்டும்.

சமீபத்திய கோவை சசிக்குமார் வழக்கில் சங்கனூர் ராஜாவாக இருந்து சிராஜுதீனாக மாறிய காரணத்திற்காக சிராஜ் காவல் துறை யால் கைது செய்யப்பட்டுளார். ஏன் அவருக் காக எந்த தலைவரும் குரல் கொடுக்கவில்லை?.

ஒரு சகோதரனாக நான் நினைத்ததை சொல்கிறேன். என் மீது இஸ்லாமிய சகோத ரர்கள் கோபம் கொள்ள வேண்டாம்.

(பிற்பகுதியில் வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது சபாபதி அவர்களின் கேள்விக்கு அளித்த பதில்களை காணலாம்.)

**வி.சி.க மண்டல செயலாளர் சுசி கலையரசன் அவர்கள் உரை வீச்சு**

முதலில் இரண்டு மணி நேரம் காலதாமத மாக வந்ததற்கு மன்னித்து கொள்ளுங்கள். மாலை ஆறு மணிக்கு போவதற்கான ஏற்பாடு களை ஏற்கனவே செய்திருந்தேன். ஆனால் திடீரென்று எழுச்சி. தமிழர் திருமாவளவன் மாலை 4.00 மணிக்கு ஒரு வரவேற்பு நிகழ்ச்சிக்கு வருகை தந்தார்கள். அங்கு சென்று அவரிடம் இப்படி இஸ்லாமிய சகோதரர்கள் ஒரு புத்தக வெளியீட்டிற்கு அழைப்பு விடுத்திருந்தார்கள் என்று சொன்னதும் நம் உறவுகள் அவர்கள்! அவர்களது நிகழ்ச்சிக்கு சென்று எனது வாழ்த்துகளையும் தெரிவித்து கலந்து கொள்ளுங்கள் என்றார்.

இங்கு என் முன்னால் பேசிய தோழர் களெல்லாம் தீண்டாமை கொடுமைகளை பற்றி பேசினார்கள்! படித்து பேசவில்லை பட்டதால் பேசுகிறார்கள்! 1979ல் நான் 9ம் வகுப்பு படிக்கும் போது பெரியார் தொண்ட னாக இருந்த திருவாரூர். தங்கராசு அவர் களின் பகுத்தறிவு பேச்சு கேட்டு கடவுள் மறுப் பாளனாக மாறினேன். அதற்கு முன்னால் நான் தீவிர முருக பக்தன்.

அப்போதிலிருந்து நாங்களும் போராடி வருகிறோம். எங்களுக்கெல்லாம் முன்னோடி யாக திகழ்கிறார் கூரியூர் முகம்மது அலீ ஜின்னா அவர்கள்.

ஆசிரியரின் எழுத்தில் என்னை கவர்ந்த இன்னொரு பகுதி, முகம்மது அலீ ஜின்னா கைது செய்யப்பட்டு கோர்ட்டில் ஆஜர்படுத் தப் படுகிறார். அவர் மேல் குண்டாஸ் போன்ற டஜன் வழக்குகள். இவர் என்ன தவறு செய்தார் என நீதிபதி கேட்கிறார். அவர் முஸ்லிமாக மாறினார் என பதில் காவல்துறை தரப்பி லிருந்து சொல்லப்படுகிறது. நீதிபதி முகம் சுழித்து நாளை நானே மதம் மாறி முஸ்லிமாக அமர்ந்தால் என்ன செய்வீர்கள்?. என்ற கேள்வியும் அதில் எழுத்தாளர் சொன்ன கருத்தும் கவனிக்கப்பட வேண்டியதும் பாராட்ட வேண்டியதுமாகும்.

ஒரு ஃபாருக் கொலையின் மூலம் இஸ்லாமியர்களை வெறுத்து விடுவோம் என நினைக்கிறார்கள் எதிரிகள். நீங்களோ கடவுள் இருக்குனு சொல்லி கும்பிடுற எம் தாழ்த்தபட்டவனையே வெட்டிறீங்களேடா!. உங்களை என்ன சொல்றது?. எல்லா மதத்தி லேயும் சில கழிசடைகள் இருப்பார்கள் அதற் காக எல்லோரும் ஒன்றாகி விட மாட்டார்கள்.

இஸ்லாத்திலேயும் மரைக்காயர், பட்டாணி என்றெல்லாம் இருக்கிறார்கள் ஆனால் அவர்களுக்குள் நீ தாழ்ந்தவன் நான் உயர்ந்தவன் என்ற எண்ணம் கூட துளியும்

இல்லையே!.

இரு திராவிட கட்சிகளை மீறி தமிழகத்தில் காவிகளுக்கு இடமே இல்லை. இன்று இனப்படுகொலை செய்தவனெல்லாம் நாட்டின் பிரதமராக அமரும் காலம்! பாஜகவிற்கு என்றும் தமிழகத்தில் இடமில்லை. எம் தொப்புள் கொடி உறவுகளுக்கு நாங்கள் எப்போதும் உறுதுணையாக நிற்போம்.

**கூரியர் முகம்மது அலீ ஜின்னா நூலின் எழுத்தாளர் மு.குலாம் முஹம்மது அவர்களின் சிறப்புரை:**

இந்த புத்தக வெளியீட்டை ஒரு விவாத களமாக மாற்றி அமைத்ததற்கு எனது நன்றிகளுடன்..

திருமாவளவன் அவர்களுக்கும் எனக்கும் மிக நெருக்கமான அறிமுகம் உள்ளது. அவர்களிடம் நாங்களும் நன்றியை தெரிவித்தோம் என்று சொல்லுங்கள். (விசிக சுசி கலையரசன் அவர்களிடம்.)

கிராமத்திற்கு கிராமம் கூரியர் முகம்மது அலீ ஜின்னா போன்ற போராளிகள் இருக்கின்றார்கள். ஆனால் அவர்களை யாரும் எளிதில் அடையாளம் காண முடியவில்லை. முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது, தமிழகத்தை பொறுத்த வரை தலித்கள் திருப்பி அடித்த வரலாறுகள் அதிகம் உள்ளன. அதையெல்லாம் தலித் இலக்கியங்களாக மாற்ற வேண்டிய கடமை நமக்கிருக்கிறது.

உண்மையில் நாம் அண்ணன் தம்பி உறவுகள். நாங்கள் தவறாக செல்லும் போதும் தடுக்கும் கடமையும் நீங்கள் தவறாக செல்லும் போது உங்களை தடுக்கும் உரிமையும் எங்களுக்கு உண்டு. அதனால் எதனையும் நீங்கள் கூறலாம்.

வட்டமேஜை மாநாடு நடக்கும் போது ஜின்னா ஆதரவு தரவில்லையென்ற தகவலை கூறினார் சபாபதி. அப்படியொரு சம்பவம் நடந்ததாக தெரியவில்லை அப்படியிருந்தால் அது தவறு தான். ஆனால் அம்பேத்காருக்கும் முஸ்லிம்களுக்கும் இருந்த உறவை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

காந்தி ஜின்னாவிடம் வந்து நீங்கள் முஸ்லிம்கள் சார்பாக வைக்கும் 14 கோரிக்கையையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நீங்கள் அம்பேத்கரது கோரிக்கைகளை மறுக்க வேண்டும் என்று கூறினார். அதற்கு ஜின்னா உடனடியாக மறுத்து விட்டார். இதற்காகவே அம்பேத்கர் முஸ்லிம்களுக்கு வெளிப்படையாக தனது "நன்றியை" தெரிவித்து கொண்டார். இதனைVT ராஜசேகர் எனும் பிரபல எழுத்தாளர் தனது அனைத்து இலக்கியங்களிலும் பதிவு செய்திருக்கிறார்.

அம்பேத்கர் கையெழுத்திட்ட பூனா ஒப்பந்தத்தை ஜின்னா அமோதிக்கவில்லை. இதனை ஜின்னா, ஏன் இப்படி செய்தீர்கள என ஜின்னா அம்பேபேத்கரை கேட்டார், அதற்கும் அம்பேர்கர் இப்படிப் பதில் சொன்னார். ஏற்கனவே இந்த தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு கொடுமைகள் அதிகம் இதில் இந்த மனிதரும் (காந்தி) உண்ணாவிரதம் இருந்து இறந்து விட்டால் கொடுமைகள் அதிகரிக்கும் என்பதால் தான் என அம்பேத்கர் சொன்னார். அதற்கு ஜின்னா அளித்த பதில், (What of that?) அதனால் என்ன? ஒரு மனிதனுக்காக ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதிப்புக்குள்ளாக்குவதா? என்றார்.

Constituent Assembly க்கு அம்பேத்கர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவரது பிறந்த ஊரான மஹாராஷ்டிராவில் அவருக்கு மிகப் பெரிய எதிர்ப்பு. அப்போது முஸ்லிம்கள் பெரும்பாலாக இருக்கும் "மேற்கு வங்காளத்தில்" அம்பேத்கர் அவர்களை முஸ்லிம் லீக் சார்பாக நிற்க வைத்து வெற்றியும் பெற வைத்தவர் ஜின்னா அவர்கள்.

தலித்களுக்கு பள்ளிகள் கிடையாது எனும் போது நிலம் கொடுத்து உதவியவர் ஹைதராபாத் நிஜாம். என இன்னும் சொல்லிக் கொண்டு போகலாம். இப்படி, முஸ்லிம்களுக்கும் தலித்களுக்குமுள்ளான உறவுமுறை மிக வலிமையானதாக இருந்திருக்கிறது.

தலித்கள் முஸ்லிம்களாக அணி அணியாக

வந்து கொண்டிருக்கிறார்கள் என பேசிய தோழர்கள் கூறினார்கள். நாங்களும் அதை தான் கூறுகிறோம். நீங்கள் மொத்தமாக முஸ்லிம்களாக மாறி விடுங்கள். அதன்பிறகு இது நம் நாடு. இதை தவிர வேறு தீர்வுகளே கிடையாது.




மரக்காயர், பட்டாணி என்பதெல்லாம் இங்கு கிடையாது. இந்திய அரசு ஏதாவ தொன்றை ஏற்படுத்த பார்த்தார்கள் ஆனால் அது நடக்கவில்லை. தமிழகத்தில் இருக்கும் எந்த பள்ளிக்கும் செல்லுங்கள் தொழுகுங்கள் உங்களை யாரும் தடுக்கமாட்டார்கள். யாரும் வந்து நீ மரக் காயரா, பட்டாணியா என்றெல்லாம் கேட்க போவதில்லை.

முஸ்லிம்கள் போராட்டங்களில் கலந்து கொள்வதில்லை என சொல்கிறார்கள்! குறிப்பாக வைகறை வெளிச்சம் சார்பாக நாங்கள் எந்த அரசியல் போராட்டங்களிலும் கலந்து கொள்வதில்லை. நாங்கள் போராட் டத்தை நம்புவதில்லை அதில் தீர்வு இல்லை யென்று நாங்கள் நம்புகிறோம்.

secularism, socialism என்பதெல்லாம் எப்போதோ இந்தியாவில் இருந்து அழிந்து விட்டன! அதனால் தான் இனப்படு கொலைகளை நிகழ்த்தியவர்கள் பிரதமராக, முதலமைச்சராக இருக்கின்றார்கள்.

போராட்டம் நடத்தி நீதியை நாம் யாரிடம் கேட்கிறோம்?. யார் உங்களை இவ்வளவு காலம் சித்ரவதைகளுக்கு உள்ளாக்கி கொடுமைகளைச் செய்தார்களோ அவர்களி டமே சென்று எனக்கு நீதி கொடு! நீதி கொடு என கேட்டுக்கொண்டு இருக்கிறோம்!.. பின்னர் எப்படி நீதி கிடைக்கும்?.. கசாப்பு கடைக்காரனிடம் ஆடு நீதி கேட்கிறது.

தஞ்சாவூரில் நந்தினிக்கு நடந்த கொடு மைக்கு எதிரான போராட்டம் பல தலைவர் கள் கலந்து கொண்ட கூட்டம் அது. எல்லோரும் நந்தினி எவ்வளவு கொடூரமாக கொலை செய்யப்பட்டார் அது இதுவென பலவற்றை பேசினார்கள்.

அதே மேடையில் வழக்கறிஞர் சின்னச்சாமி பேசும் போது

"எல்லோரும் நீதி வேண்டும் என்று கேட்கிறீர்களே! யாரிடம் கேட்கிறீர்கள்? கொலை செய்தவனிடமா..?

உண்மை தான் சகோதரர்களே இங்கு மதசார்பின்மை செத்துவிட்டது, போராட்டம் நீண்ட நெடுங்காலமாக நடந்து கொண்டே தான் இருக்கிறது. வீதியில் வெட்டினான் அடுத்து தொங்க விட்டான் இப்போது அதைவிடவும் கொடுமைகளை செய்கிறான். எங்கே கிடைத்தது நீதி?

மஸ்ஜித் இருந்த இடத்தில் ராமர் கோயில் கட்டப்படும் என்று சொல்லி ஓட்டு கேட் கிறார்கள். இது தவறென்று நீதி மன்றத்திடம் முறையிட்டால், அது ஒரு நம்பிக்கை சார்பாக சொல்லப்படுவது தான் அதனால் தவறில்லை என்கிறது நீதிமன்றம்.

சகோதரர்களே இஸ்லாம் என்பதே எல்லாவற்றிற்குமான தீர்வு. அதனை ஏற்றுக் கொள்ளும் போது மட்டுமே நாம் வெற்றி பெறுவோம்.

**நிறைவுரை.**

இறுதியாக புத்தக வெளியீட்டு நிகழ்ச் சியை சகோதரர் வழக்குரைஞர். முகம்மது சுலைமான், அவர்கள் நன்றியுரை கொடுத்து நிறைவு செய்தார்கள்

# வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள், மு. குலாம் முஹம்மத் | ரூ. 25.00 |
| 8. | மால்கம் எக்ஸ் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 202 | ரூ. 90.00 |
| 17. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மது பக்கம்-163 | ரூ. 110.00 |
| 18. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம்மது, பக்கம் -143 | ரூ. 90.00 |
| 19. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 20. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 21. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 22. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 23. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 24. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மது பக்கம்:48 | ரூ. 30.00 |
| 25. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் சகாப்தம், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 26. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 27. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 28. | இஸ்லாமும் விஞ்ஞானமும் | ரூ. 70.00 |
| 29. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 60.00 |
| 30. | இஸ்லாமும் பெண்களும் | ரூ. 70.00 |
| 31. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | ரூ. 70.00 |
| 32. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | ரூ. 30.00 |
| 33. | 26/11 -நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 34. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | ரூ. 20.00 |

**வேர்கள் பதிப்பகம்,** 52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

தொடர்ப்புக்கு : 8148129887

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor **M. GULAM MOHAMED,** Printed by M. Gulam Mohamed at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.